விலை: 50.00 Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

UNION
moving money for better
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com
(C-9975)

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 ஆடி 23 வெள்ளிக்கிழமை (07.08.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 232

# யாழ்.வாக்கெண்ணும் நிலையத்துக்கு சுமந்திரன் சென்றபோது அங்கு கூடி நின்றவர்களால் எதிர்ப்பு

## பொதுமக்கள் குழப்பமடைந்ததால் விசேட அதிரடிப் படையினர் குவிப்பு

தேர்தல் தொடர்பான விரிவான செய்திகள் நாளை




(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் அமைந்துள்ள வாக்கெண்ணும் நிலையத்துக்கு இன்று அதிகாலை சுமந்திரன் சென்றதால் அவருக்கு எதிராக அங்கு நின்றவர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இதனால் அங்கு பதற்றநிலை ஏற்பட்டதோடு விசேட அதிரடிப் படையினரும் குவிக்கப்பட்டிருந்தனர்.


இன்றைய தினம் அதிகாலை விருப்பு வாக்கு அறிவிக்க இருந்த நிலையில் இக்குழப்ப நிலை ஏற்பட்டிருந்தது. இதனால் விருப்பு வாக்குகள் அறிவிக்கப்படாமல் முடிவுகள் தாமதமாகியது. (ம-3)



# யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள்


சிறீதரன்


சுமந்திரன்


சித்தார்த்தன்


கஜேந்திரகுமார்


விக்னேஸ்வரன்


அங்கஜன்


டக்ளஸ்

# யாழ்.மாவட்ட தேர்தல் தொகுதியில் கூட்டமைப்புக்கு 3 ஆசனங்கள் மட்டுமே

## த.ம.தே.கூ., த.தே.ம.மு., ஈ.பி.டி.பி, ஸ்ரீ.சு.க தலா ஓர் ஆசனம்

(யாழ்ப்பாணம்)

நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாண மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 3 ஆசனங்களையே கைப்பற்றியுள்ளது.

அதேவேளை தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி ஆகியன தலா ஓர் ஆசனத்தைக் கைப்பற்றியுள்ளன. (23ஆம் பக்கம் பார்க்க)

## தென்னையிலிருந்து தவறி விழுந்தவர் உயிரிழப்பு

### கோப்பாயில் சம்பவம்

(கோப்பாய்)

தென்னை மரத்தில் ஏறியவர் எதிர்பாராத விதமாக தவறி விழுந்ததில் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

இதில் கோப் 23

### அச்சுறுத்தல் காரணமாக

## சசிகலா ரவிராஜ்க்கான பாதுகாப்பு அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரவிராஜ்ஜின் பாரியார் சசிகலா ரவிராஜ்க்கு பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

சசிகலா ரவிராஜ் நடந்து முடிந்த பாராளுமன்ற தேர்தலில் யாழ்.மாவட்டத் 23

## யாழ்ப்பாணத்தில் அதிகளவு செல்லுபடியற்ற வாக்குகள்

### பெருமளவு தபால் மூலமானது

(யாழ்ப்பாணம்)

நடைபெற்று முடிந்த பாராளுமன்றத் தேர்தல் முடிவுகளின்படி யாழ்ப்பாணத்தில் அளிக்கப்பட்ட வாக்குகளில் அதிகளவானவை செல்லுபடியற்ற வாக்குகள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக தபால் மூல வாக்குகள் எண்ணும் போதும் செல்லுபடியற்ற வாக்கு 23

# அனைத்து இலங்கையர்களுக்கும் நன்றி தெரிவித்தார் சஜித்



(கொழும்பு)

நடைபெற்று முடிந்த பாராளுமன்றத் தேர்தலுக்கான முடிவுகள் நேற்றிலிருந்து வெளியாகிக்கொண்டு இருக்கின்றன.

அந்த வகையில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன முன்னிலையில் உள்ளது.

அதேபோல் ரணிலை பின்னுக்குத் தள்ளி சஜித் தனது வெற்றியை பதிவு செய்துள்ளார்.

இந்த நிலையில் தமது கருத்தை சஜித் டுவிட்டரில் வெளியிட்டுள்ளார். அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

ஜனநாயக மற்றும் வளமான நாட்டிற் காக சமகி ஜன பலவேகயவுக்கு (ஐக்கிய மக்கள் சக்தி) அச்சமின்றி வாக்களித்த அனைத்து இலங்கையர்களுக்கும் நன்றி என்று உருக்கத்துடன் பதிவிட்டுள்ளார். (ம-3)

# வெற்றிக் கொண்டாட்டத்தில் மகிந்த




(கொழும்பு)

நடைபெற்று முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் பொதுஜன பெரமுன அதிக வாக்குகளைப் பெற்று முன்னிலையில் உள்ளது.

பெரமுன ஆதரவாளர்கள் மகிந்தவின் வீட்டில் ஒன்று திரண்டு மகிழ்ச்சியை வெளிக்காட்டும் புகைப்படம் ஒன்றும் சமூக வலைத்தளங்களில் வெளியாகியுள்ளது. நாமல் ராஜபக்ஷ தனது ருவிட்டர் பக்கத் தில் மகிந்த மற்றும் கோட்டாவின் படங் களை வெளியிட்டு தனது மகிழ்ச்சியையும் வெளியிட்டுள்ளார்.

மேலும் அரச திணைக்களங்கள் மற் றும் நிறுவனங்களில் அவரது ஆதர வாளர்கள் வெற்றிக் கொண்டாட்டத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## 31ம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்தி பிரார்த்தனையும்




கடந்த (09.07.2020) வியாழக்கிழமை சிவபதம் அடைந்த எமது குலவிளக்கு

அமரர்

**இராசு தங்கையா**

அவர்களின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நிகழ்வு நாளை (08.08.2020) சனிக்கிழமை 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த் தனையிலும் அதனை தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் உங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

[ இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். ] (C-10000)

2ம் வட்டாரம், கோம்பாவில் ,
புதுக்குடியிருப்பு.

குடும்பத்தினர்

# தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு மட்டக்களப்பில் 2 ஆசனங்கள்

## வியாழேந்திரன், பிள்ளையான் வெற்றி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 2 ஆசனங் களையே பெற்றுள்ளது. தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள், மு.காங்கிரஸ், பொதுஜன பெரமுன ஆகிய தரப்பினர் தலா ஒவ்வொரு ஆசனங்களை பெற் றுள்ளனர்.

இலங்கை தமிழ் அரசு கட்சி பெற்ற வாக்குகள் 79,460 வாக்குகள், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் 67,692, முஸ்லிம் காங்கிரஸ் 34,428, பொதுஜன பெரமுன 33,420 வாக்குகளை பெற் றுள்ளனர்.

ஹிஸ்'புல் லா தரப்பு 31,054, தேசிய மக்கள் சக்தி 28,362 வாக் குகளை பெற் றனர். ஆசனம் பெற முடியவில்லை.

தமிழ் அரசு கட்சி சார்பில் இரா. சாணக்கியன், கோவிந்தம் கரு ணாகரன், பெர முன சார்பில் வியா ழேந்திரன், மு:கா சார்பில் நசீர் அஹ மட் ஆகியோர் தெரி வாகியுள்ளதாக உத் தியோகபற்றற்ற முடிவுகள் தெரிவிக் கின்றன (ம-3)

## வைத்திய சேவை

யாழ். நகரில் மிக நீண்டகாலமாக வைத்திய நிபுணர்கள் சேவையை நடாத்தி மக்கள் மனதில் நீங்கா இடம் பெற்ற

**சம்பந்தர் மொடேர்ன் வைத்திய நிலையத்தில்**

◉ பொது வைத்தியம் ◉ சத்திரசிகிச்சை ◉ கண்
◉ காது ◉ மூக்கு ◉ தொண்டை ◉ நரம்பியல்
◉ எலும்பு முறிவு ◉ இருதயம் ◉ சுவாசம்
◉ மகப்பேறும் பெண்நோய்யியலும்
◉ குழந்தை ◉ நீரிழிவு ◉ தோல்

போன்ற எல்லா நோய்களுக்குமான வைத்திய நிபுணர்கள். சேவையை சிரமமின்றி பெற்றுக்கொள்ள அழையுங்கள்.

**தொடர்பு : 077 873 0129**

**சம்பந்தர் மொடேர்ன் வைத்திய நிலையம்**
08, ஆஸ்பத்திரி வீதி, இராமையாச் செட்டியார் லேன்,
யாழ்ப்பாணம். (3493)

# மரண அறிவித்தல்

மலர்வு 08 . 11 . 1925



உதிர்வு 06 . 08 . 2020

## திரு.சிற்றம்பலம் கந்தசாமி

புத்தூர் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு.சிற்றம்பலம் கந்தசாமி நேற்று (06.08.2020) வியாழக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் திருச்செல்வம் அவர்களின் அன்புக் கணவரும் ஜெகவாணி (ஆசிரியர்- யா/புத்தூர் மடிஹேற பஞ்சசீஹ வித்தியாலயம்), ஜெகநிதி (லண்டன்), கோமளேஸ்வரன் (உயிரியல் மருத்துவ தொழிநுட்பவியலாளர், பிராந்திய சுகாதார திணைக்களம் - யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜெகன்மோகன் (காப்பாளர், கால்நடை அலுவலகம்- வட்டுக்கோட்டை), பத்மசீலன் (லண்டன்), லலிதா (ஆசிரியர்- இராமநாதன் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் பபிசனா, சயனா ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற மயில்வானம் காலஞ்சென்ற தாமோதரம் பிள்ளை மற்றும் சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (07.08.2020) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக பூதவுடல் கிந்துசிட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (3494)

புத்தூர் வடக்கு.
புத்தூர்.

077 631 1922

தகவல்:-
குடும்பத்தினர்

குருவே துணை

வாழ்க வையகம்



வாழ்க வளமுடன்

## அடுத்த வாரத்திற்கான மனவளக்கலை யோகாப் பயிற்சிகள் ஆரம்பமாகிறது.

கடந்த சில மாதங்களில் உலகம் முழுவதும் நடைபெற்ற கொடிய கிருமித் தொற்றிலிருந்து மக்கள் இயல்பு நிலைக்கு திரும்பியிருப்பினும் இன்னும் உலகத் தலைவர்களும் விஞ்ஞானிகளும் வைத்தியர்களும் மற்றும் சுகாதாரத்துறை சார்ந்த அனைவரும் மக்களுக்கு அறிவுறுத்துவது மக்கள் தங்களுடைய நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்க யோகப் பயிற்சியினை மேற்கொள்ள வேண்டும் என்பதே. அதனை வழங்குவதே அருட்தந்தை யோகிராஜ் வேதாத்திரி மகரிஷி அவர்களின் மனவளக்கலை யோகாப் பயிற்சிகள் ஆகும். எனவே இப்பயிற்சியினைப் பெற்று பயன்பெற அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

◉ எளியமுறை உடற்பயிற்சிகள்
◉ எளியமுறை தியானப்பயிற்சி
◉ காயகல்பப் பயிற்சி
◉ அகத்தாய்வுப் பயிற்சி

காலம் : 08.08.2020 சனிக்கிழமை தொடக்கம் 14.08.2020 வெள்ளிக்கிழமை வரை
நேரம் : மாலை 5.00 மணி தொடக்கம் இரவு 7.00 மணி வரை
பயிற்சி வழங்குபவர் : துணைப் பேராசிரியர் அருள்நிதி த. நந்தகுமரன் அவர்கள்

குறிப்பு : கொவிட் - 19 சமூக பாதுகாப்பு விதிகளுக்கமைவாக பயிற்சிகள் வழங்கப்படுவதால் மட்டுப்படுத்தப்பட்ட பயிற்சியாளர்களே உள்வாங்கப்படுவர்.

தொடர்புகளிற்கு :

**யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில்**
இல.81, பிறவுண் வீதி, கொக்குவில், யாழ்ப்பாணம். (C-9997)
தொ.இல: 021 222 2772

# பாராளுமன்ற பொதுத் தேர்தல் - 2020

## யாழ்.மாவட்டம் தொகுதிரீதியிலான தேர்தல் முடிவுகள்

### சாவகச்சேரி

| கட்சிகள் | வாக்குகள் |
|---|---|
| த.தே.கூ | 8931 |
| த.ம.தே.கூ | 5847 |
| அ.இ.த.கா. | 4772 |
| ஸ்ரீ.சு.க | 5277 |
| ஈ.ம.ஜ.க | 3331 |

### நல்லூர்

| கட்சிகள் | வாக்குகள் |
|---|---|
| த.தே.கூ | 8423 |
| த.ம.தே.கூ | 3361 |
| அ.இ.த.கா. | 8386 |
| ஸ்ரீ.சு.க | 2921 |
| ஈ.ம.ஜ.க | 3988 |

### கோப்பாய்

| கட்சிகள் | வாக்குகள் |
|---|---|
| த.தே.கூ | 9365 |
| த.ம.தே.கூ | 3549 |
| அ.இ.த.கா. | 5672 |
| ஸ்ரீ.சு.க | 7188 |
| ஈ.ம.ஜ.க | 4353 |

### காங்கேசன்துறை

| கட்சிகள் | வாக்குகள் |
|---|---|
| த.தே.கூ | 6849 |
| த.ம.தே.கூ | 2114 |
| அ.இ.த.கா. | 4645 |
| ஸ்ரீ.சு.க | 5560 |
| ஈ.ம.ஜ.க | 4185 |

### வட்டுக்கோட்டை

| கட்சிகள் | வாக்குகள் |
|---|---|
| த.தே.கூ | 9024 |
| த.ம.தே.கூ | 2463 |
| அ.இ.த.கா. | 5010 |
| ஸ்ரீ.சு.க | 4556 |
| ஈ.ம.ஜ.க | 4076 |

### பருத்தித்துறை

| கட்சிகள் | வாக்குகள் |
|---|---|
| த.தே.கூ | 5803 |
| த.ம.தே.கூ | 3382 |
| அ.இ.த.கா. | 4158 |
| ஸ்ரீ.சு.க | 4700 |
| ஈ.ம.ஜ.க | 2986 |

### உடுப்பிட்டி

| கட்சிகள் | வாக்குகள் |
|---|---|
| த.தே.கூ | 3868 |
| த.ம.தே.கூ | 4457 |
| அ.இ.த.கா. | 3292 |
| ஸ்ரீ.சு.க | 6214 |
| ஈ.ம.ஜ.க | 1572 |

### ஊர்காவற்துறை

| கட்சிகள் | வாக்குகள் |
|---|---|
| த.தே.கூ | 4412 |
| த.ம.தே.கூ | 438 |
| அ.இ.த.கா. | 1376 |
| ஸ்ரீ.சு.க | 1677 |
| ஈ.ம.ஜ.க | 6369 |

### யாழ்ப்பாணம்

| கட்சிகள் | வாக்குகள் |
|---|---|
| த.தே.கூ | 7634 |
| த.ம.தே.கூ | 1312 |
| அ.இ.த.கா. | 4642 |
| ஸ்ரீ.சு.க | 1469 |
| ஈ.ம.ஜ.க | 5545 |

### மானிப்பாய்

| கட்சிகள் | வாக்குகள் |
|---|---|
| த.தே.கூ | 10,302 |
| த.ம.தே.கூ | 2838 |
| அ.இ.த.கா | 6999 |
| ஸ்ரீ.சு.க | 6678 |
| ஈ.ம.ஜ.க | 3740 |




## கிளிநொச்சி மாவட்ட தேர்தல் முடிவுகள்

| கட்சிகள் | வாக்குகள் |
|---|---|
| இ.த.க | 31,156 |
| சு.குழு-5 | 13,339 |
| ஐ.ம.சக்தி | 3050 |
| அ.இ.த.கா | 2528 |
| ஈ.ம.ஜ.க | 2522 |

## வன்னி மாவட்ட தேர்தல் முடிவுகள்

### முல்லைத்தீவு

| கட்சிகள் | வாக்குகள் |
|---|---|
| த.தே.கூ | 22,492 |
| ஸ்ரீ. பொ.பெ | 8307 |
| ஐ.ம.ச | 6087 |
| ஈ.ம.ஜ.க | 3694 |
| அ.இ.த.கா. | 2472 |
| த.ம.தே.கூ | 2155 |

### மன்னார்

| கட்சிகள் | வாக்குகள் |
|---|---|
| த.தே.கூ | 20,266 |
| ஐ.ம.ச | 14,632 |
| ஸ்ரீ. பொ.பெ | 12,050 |
| சு.குழு-1 | 2565 |
| த.ம.தே.கூ | 1288 |
| ச.ம.ஜ.க | 1304 |
| ஈ.ம.ஜ.க | 2086 |

### வவுனியா

| கட்சிகள் | வாக்குகள் |
|---|---|
| த.ம.தே.கூ | 4610 |
| த.தே.கூ | 22,849 |
| ஸ்ரீ. பொ.பெ | 18,696 |
| ஐ.ம.ச | 11,170 |
| ஈ.ம.ஜ.க | 4926 |
| அ.இ.த.கா | 3993 |

இச் செய்தி அச்சுக்கு போகும் வரை கிடைக்கப் பெற்ற தேர்தல் முடிவுகள்

## கிழக்கு மாகாண தேர்தல் முடிவுகள்

### மட்டக்களப்பு-கல்குடா

| கட்சிகள் | வாக்குகள் |
|---|---|
| த.ம.வி.பு.க | 20,622 |
| த.தே.கூ | 17,312 |
| ஐ.ம.ச | 15,394 |
| ஸ்ரீ.மு.கா | 12,064 |
| ஸ்ரீ. பொ.பெ | 10,879 |

### திருகோணமலை

| கட்சிகள் | வாக்குகள் |
|---|---|
| ஸ்ரீ. பொ.பெ | 34,035 |
| த.தே.கூ | 4723 |
| ஐ.ம.ச | 13,117 |
| தே.ம.ச | 992 |

### திகாமடுல்ல-கல்முனை

| கட்சிகள் | வாக்குகள் |
|---|---|
| ஐ.ம.ச | 20,011 |
| தே.கா | 10,401 |
| அ.இ.த.ம.ச | 10,130 |
| அ.இ.ம.கா | 6380 |

### திகாமடுல்ல-பொத்துவில்

| கட்சிகள் | வாக்குகள் |
|---|---|
| ஐ.ம.ச | 32,763 |
| அ.இ.ம.கா | 21,736 |
| இ.த.க | 15,839 |
| ஸ்ரீ. பொ.பெ | 15,103 |
| தே.கா | 13,661 |
| அ.இ.ம.ச | 12,996 |

## யாழ். மாவட்ட தபால் மூல வாக்கு முடிவுகள்

### யாழ்ப்பாணம்

| கட்சிகள் | வாக்குகள் |
|---|---|
| த.தே.கூ | 7200 |
| த.ம.தே.கூ | 4347 |
| அ.இ.த.கா. | 3223 |
| ஈ.ம.ஜ.க | 3291 |

## வன்னி மாவட்ட தபால் மூல வாக்கு முடிவுகள்

### வன்னி

| கட்சிகள் | வாக்குகள் |
|---|---|
| த.தே.கூ | 4308 |
| த.ம.தே.கூ | 736 |
| ஐ.ம.ச | 1811 |
| ஸ்ரீ. பொ.பெ | 2771 |

# நாட்டின் பொது நிர்வாக சேவையின் பலமே

## பொதுத்தேர்தலின் சுயாதீன தன்மை- கரு சுட்டிக்காட்டு



(கொழும்பு)

**கொரோனா வைரஸ் பரவல் நெருக்கடிக்கு மத்தியில் வெற்றிகரமான முறையில் நடத்தி முடிக்கப்பட்டுள்ள பொதுத்தேர்தலானது, சுயாதீனமாக இயங்கும் எமது நாட்டின் பொது நிர்வாக சேவையின் பலத்தையே வெளிப்படுத்துகின்றது என்றும் இதன் வெற்றியிலிருந்து மேலும் பல நாடுகள் பாடம் கற்றுக்கொள்ளும் என்றும் முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.**

கொவிட் - 19 அச்சுறுத்தலுக்கு மத்தியில் தெற்காசிய நாடுகளில் தேசிய ரீதியில் நடைபெறும் முதலாவது பெரிய தேர்தலாக நாட்டின் ஒன்பதாவது பாராளுமன்றத்தைத் தெரிவு செய்வதற்கான பொதுத் தேர்தல் நேற்று முன்தினம் புதன்கிழமை சுகாதாரப் பாதுகாப்பு வழிமுறைகளைப் பின்பற்றி நடைபெற்று முடிந்தது.

இதுகுறித்து அவர் வெளியிட்டிருக்கும் அறிக்கையிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் அதில் தெரிவித்துள்ளதாவது,

சுகாதாரமான, சுதந்திரமான, நியாயத்துவமான தேர்தலொன்றே நாட்டின் தேவையாகும். தற்போது சுகாதார ரீதியான சவால்கள் அதிகரித்திருக்கும் நிலையிலும் கூட இத்தேர்தலை நடத்துவதில் தேர்தல்கள் ஆணைக்குழு மற்றும் அரச அதிகாரிகளின் அர்ப்பணிப்பான சேவையினை வெகுவாகப் பாராட்டுகின்றேன்.

அதேவேளை 2020 பொதுத்தேர்தலை வெற்றிகரமாக நடத்தி முடித்தமைக்கு வாழ்த்துக்கள்.

இந்நாட்டு மக்கள் தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவருக்கும் ஆணைக் குழுவிற்கும் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கின்றார்கள். அத்தோடு கொவிட்- 19 கொரோனா வைரஸ் பரவலினால் நாடு பாரிய சுகாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கும் நிலையிலும் கூட முன்னுதாரணமான வகையில் நடத்தப்பட்ட இந்தத் தேர்தலுக்காக சுகாதாரத்துறை அதிகாரிகள், பாதுகாப்புப்பிரிவினர் மற்றும் அனைத்து அரச சேவையாளர்களுக்கும் நன்றிகூறுவதுடன் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எமது நாட்டின் பொதுநிர்வாக சேவை சுதந்திரமானதாக இயங்குகையில் அதற்கு இருக்கின்ற பலத்தையே இந்த வெற்றிகரமான தேர்தல் வெளிப்படுத் தியிருக்கின்றது. இந்த வெற்றியிலிருந்து பல நாடுகள் பாடம் படிக்கும் என்று அவர் தெரிவித்துள்ளார். (ஜ-4)

### மும்பை கனமழை எதிரொலி

# 46 ஆண்டு இல்லாத அளவுக்கு கொலாபாவில் கொட்டித்தீர்த்த மழை

(மும்பை)

மகாராஷ்டிராவில் பெய்து வரும் கனமழை எதிரொலியால் 46 ஆண்டு இல்லாத அளவுக்கு கொலாபா பகுதியில் மழை கொட்டித் தீர்த்துள்ளது.

நாடு முழுவதும் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய நிலையில் மும்பையில் கனமழை பெய்து வருகிறது. இரண்டு நாட்களுக்கும் மேலாக பெய்த கனமழையால் பெரும் சேதத்தினை மும்பை



சந்தித்து வருகிறது. குறிப்பாக, தெற்கு மும்பையின் கொலாபா பகுதியில் ஓகஸ்ட் மாதத்தில் 46 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு நேற்று கனமழை பதிவானது. (ஜ-4)

### 50 மில்லியன் முகக்கவசங்களின் பயன்பாடு நிறுத்தம்

(லண்டன்)



ஏப்ரல் மாதத்தில் அரசாங்கம் வாங்கிய ஐம்பது மில்லியன் முகக்கவசங்களை பாதுகாப்பு காரணங்களால், தேசிய சுகாதார சேவை பயன்படுத்தப்படாது என தெரிவிக்கப்பட்டுள்ளது. காதுப் பகுதியில் போடப்படும் பட்டிகள், போதுமான அளவு பொருந்தாமை காரணமாக இவை கேள்விக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

ஏப்ரல் 29 ஆம் திகதி சுகாதார மற்றும் சமூக பாதுகாப்புத் துறை, அயந்தா கேபிடல் லிமிடெட் நிறுவனத்துடன் 252 மில்லியன் டொலர் ஒப்பந்தத்தில் இரண்டு வகையான முகக்கவசங்களை வாங்க கையெழுத்திட்டது.

மிகவும் விலையுயர்ந்த பகுதி 50 மில்லியன் எஃப்.எஃப்.பி 2 சுவாச முகக் கவசங்களைக் கொண்டிருந்தது.

அவை சுகாதாரப் பணியாளர்களைத் தீங்கு விளைவிக்கும் துகள்களை உள்ளிழுப்பதில் இருந்து பாதுகாக்க வடிவமைக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# கொரோனா பாதிப்பில் இருந்து 1 கோடியே 21 இலட்சம் பேர் மீண்டனர்

(ஜெனிவா)

உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் பாதிப்பில் இருந்து குணமடைந்தோர் எண்ணிக்கை ஒரு கோடியே 21 இலட்சமாக அதிகரித்துள்ளது.

சீனாவின் ஹூபேய் மாகாணம் வுஹான் நகரில் கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் கொரோனா வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டது. தற்போது உலகின் 213 நாடுகள்/ பிரதேசங்களுக்கு பரவியுள்ள இந்த



வைரஸ் பெரும் மனித இழப்புகளை ஏற்படுத்தி வருகிறது.

இந்தக் கொடிய வைரஸுக்கு தடுப்பு மருந்து கண்டுபிடிக்கும் முயற்சியில் விஞ்ஞானிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

தடுப்பு மருந்துகள் கண்டுபிடிக்கும் இறுதிக்கட்ட முயற்சிகள் ஒரு பக்கம் நடைபெற்று வந்தாலும் மருத்துவத் துறையினரின் தன்னலமற்ற சேவையால் வைரஸ் பாதிப்பில் இருந்து பலர் மீண்டு வந்த வண்ணம் உள்ளனர்.

இந்நிலையில், உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் பாதிப்பில் இருந்து குணமடைந்தோர் எண்ணிக்கை ஒரு கோடியே 21 இலட்சத்தை கடந்துள்ளது.

வைரஸ் பாதிக்கப்பட்டவர்களில் 61 இலட்சத்து 4 ஆயிரத்து 823 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். சிகிச்சை பெறுபவர்களில் 65 ஆயிரத்து 514 பேரின் நிலைமை மிகவும் கவலைக்கிடமாக உள்ளது.

கொரோனாத் தாக்குதலுக்கு இதுவரை 7 இலட்சத்து 10 ஆயிரத்து 49 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஆனாலும், உலகம் முழுவதும் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டவர்களில் இதுவரை ஒரு கோடியே 21 இலட்சத்து 41 ஆயிரத்து 958 பேர் சிகிச்சைக்கு பின் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். (ஜ-4)

# இராசிபலன்

07.08.2020
ஆடி 23, வெள்ளிக்கிழமை
சதுர்த்தி பின்னிரவு 2.02 மணிவரை
புரட்டாதி பிற்பகல் 2.25 மணிவரை
சுபநேரம் 6.04 - 7.34 மணிவரை
இராகுகாலம் 10.34 - 12.04 மணிவரை
சந்திராஷ்டமம் - ஆயில்யம், மகம்
சங்கடஹர கணபதி விரதம்

வளவன்

**மேஷம்**
ஆரோக்கியத்தில் கவனம் தேவை, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், பயணத்தால் பலனுண்டு, வழக்கத்தை விட கூடுதல் நேரம் பணிபுரியும் சூழ்நிலை ஏற்படலாம்.

**ரிஷபம்**
குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, இனிய செய்திகள் வந்து சேரலாம், காரிய அனுகூலமுண்டு.

**மிதுனம்**
மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், தொழில் வளர்ச்சி கூடும் நாள், பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள்.

**கடகம்**
மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, நல்லவர்களின் தொடர்புகள் அதிகரிக்கும் நாள்.

**சிம்மம்**
மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், வாகன பழுதுச் செலவுகள் ஏற்படலாம், நட்பொன்று பகையாகலாம்.

**கன்னி**
பயணங்கள் செல்ல போட்ட திட்டங்கள் கைகூடும், சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.

**துலாம்**
தலைமைப்பதவிகள் உங்களைத் தேடி வரலாம், சுப செய்திகள் வந்து சேரலாம், உடல் நலன் சீராகும், செய்தொழிலில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**விருச்சிகம்**
தூரதேசத்து உறவினர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பணத்தேவைகள் பூர்த்தியாகும் நாள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**தனுசு**
பெற்றோர் மீது பிரியம் கூடும், எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம், காரிய அனுகூலமுண்டு.

**மகரம்**
சிலர் உங்களிடம் தொழில் ரீதியாக உதவி கேட்டு வரலாம், கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.

**கும்பம்**
இல்லத்தில் இன்பங்கள் கூடும் நாள், நண்பர்களால் வளர்ச்சி கூடும், ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் இருந்த கவலைகள் தீரும், வாக்கு மேன்மையுண்டு.

**மீனம்**
குடும்ப இரகசியங்களை மற்றவர்களிடம் சொல்லாதிருப்பது நல்லது, ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு, பக்குவமாக நடந்து பாராட்டு பெறுவீர்கள்.

உன் வேலைகள் உனக்கு சமாதி கட்டி விடாமல் பார்த்துக்கொள்

# இந்தியாவுக்கான குரலாக இருந்தவர் சுஷ்மா

(டில்லி)

உலக அரங்கில் இந்தியாவுக்கான குரலாக இருந்தவர் சுஷ்மா எனப் பிரதமர் மோடி நெகிழ்ச்சியடைந்துள்ளார்.

முன்னாள் வெளியுறவுத் துறை அமைச்சரான சுஷ்மா சுவராஜ் கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் 5ஆம் திகதி உயிரிழந்தார்.

அவரது முதலாம் ஆண்டு நினைவு தினம் நேற்று முன்தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

இந்நிலையில், இந்தியாவுக்காக தன்னலமின்றி சேவை செய்தவர் சுஷ்மா சுவராஜ் என அவரது முதலாண்டு நினைவு தினத்தில் பிரதமர் மோடி தெரிவித்துள்ளார். (ஜ-4)



# வாக்கெண்ணும் மத்திய நிலையத்தில் பதற்றம்



(திருமலை)

திருகோணமலை விபுலானந்தா கல்லூரி வாக்கெண்ணும் மத்திய நிலையத்தில் நேற்று பிற்பகல் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் ஆதரவாளர் ஒருவரும் வாக்கு எண்ணும் நிலையத்துக்குள் செல்ல முற்பட்ட வேளை பொலிஸார் அவரை தடுத்துள்ளனர்.

இதனையடுத்து அங்கு வாக்குவாதம் ஏற்பட்டதுடன், குழப்பநிலை தோன்றியிருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த வேட்பாளர் உரிய இடத்துக்கு வருகை தந்தபோது அவரிடம்பொருத்தமான அனுமதிப்பத்திரம் இன்மையால் அவரை உள்ளே நுழைய அனுமதிக்காது அவரை பொலிஸார் வாக்கு எண்ணும் நிலையத்தில் இருந்து வெளியேற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். (ஜ-4)


## சேவை

நீங்கள் அடகுவைத்து மீட்டெடுக்க முடியாத நகைகளை எமது நிறுவனத்தின் ஊழியர்கள் மூலமாக நீங்கள் அடகுவைத்த நிறுவனத்திற்கு வருகைதந்து மீட்டு எடுத்து அதற்கான பெறுமதிப்பணம் அவ்விடத்திலேயே தரப்படும். நாடளாவிய ரீதியில் சிநேக பூர்வமான சேவை AAA Gold Center
076 568 4346 (C-995)



11 ஆவது நினைவாண்டும்
31 ஆவது பிறந்தநாள் வாழ்த்தும்



நீயில்லாது 11 ஆண்டுகள் ஓடி மறைந்ததுவே...
கண்ணீரோடே எங்கள் காலம் கரைகிறதே...
உன் போல் ஓர் அக்கா எனக்கு
எந்தப் பிறவியிலும் இனியில்லையே...
காலம் எல்லாம் நீயிருப்பாய் என்றிருக்க
காலம் உன்னை அழைத்ததுவோ...
உன்னோடு எங்கள் குடும்பத்தின்
மகிழ்வே முடிந்து போனதே...
காத்துக் கிடக்கிறோம்...
மீண்டும் ஓர் நாள்
பிறப்பெடுத்து வருவாய் என்று...
அது வரை கண்ணீரோடு...



அமரர்
சிறினிவாசன் சுபோதினி

மலர்வு 1989.08.07
உதிர்வு 2009.01.19

4ஆம் வட்டாரம்
கோம்பாவில்,
புதுக்குடியிருப்பு.

அன்புடன்
அம்மா, அப்பா,
தம்பி, அண்ணாமார்.

(3488)

# கொரோனா வைரஸ் பரவக்கூடிய அச்சுறுத்தல் நிலை இல்லை

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்

(கொழும்பு)

**பொதுத்தேர்தலின் போது பின்பற்றப்பட்ட சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகள் திருப்திகரமானவையாக அமைந்துள்ளன என்றும், எனவே தேர்தல் செயற்பாடுகளால் மீண்டும் நாட்டில் கொரோனா வைரஸ் பரவக் கூடிய அச்சுறுத்தல் நிலை இல்லை என்றும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.**

ஒன்பதாவது பாராளுமன்றத்தைத் தெரிவு செய்வதற்காக நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்ற பொதுத் தேர்தலின் போது அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் நாடளாவிய ரீதியில் குறித்த எண்ணிக்கையிலான வாக்களிப்பு நிலையங்களுக்கு விஜயம் மேற்கொண்டதாகவும் அவர்களால் வழங்கப்பட்டுள்ள அறிக்கையின் பிரகாரம் சொற்பளவான வாக்களிப்பு நிலையங்களில் பதிவான சில சம்பவங்களைத் தவிர பெரும்பான்மையான வாக்களிப்பு நிலையங்களில் சுகாதாரப்பிரிவினரால் வழங்கப்பட்ட பாதுகாப்பு நடைமுறைகள் தேர்தல் அதிகாரிகளால் முறையாகப் பின்பற்றப்பட்டதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பிரதித்தலைவர் வைத்திய நிபுணர் சாகர கனங்கர குறிப்பிட்டுள்ளார்.

அதேபோன்று வாக்களிப்பு நிலையங்களுக்கு வருகை தந்த வாக்காளர்களுக்கும்தொற்று நீக்குவதற்கான (கைகழுவுதல், சனிட்டைசர் பயன்பாடு உள்ளிட்டவை) வசதிகள் தயார்படுத்தப்பட்டிருந்ததுடன் அவை முறையாகப் பின்பற்றப்பட்டன.

ஆகவே இந்தத் தேர்தல் செயற்பாடுகளால் நாட்டில் மேலும் கொரோனா வைரஸ் பரவுவதற்கான அச்சுறுத்தல் நிலைமைகள் எவையும் பதிவாகவில்லை என்றும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பிரதித்தலைவர் சுட்டிக் காட்டினார். (ஜ-4)

# புத்தளத்தில் கடும் காற்று 88 வீடுகள் சேதம்





(புத்தளம்)

புத்தளம் மாவட்டத்தில் நேற்று முன்தினம் புதன் கிழமை இரவு காற்றுடன் வீசிய மழை காரணமாக ஐந்து பிரதேச செயலாளர் பிரிவுகளில் 88 வீடுகள் பாதிக்கப்பட்டுள்ளதாக புத்தளம் மாவட்ட இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இதன்படி, முந்தல், கருவலகஸ்வெள, நாத்தாண்டி, வண்ணாத்திவில்லு மற்றும் பள்ளம ஆகிய ஐந்து பிரதேச செயலாளர் பிரிவுகளில் 92 குடும்பங்களைச் சேர்ந்த 397 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த நிலையம் தெரிவித்துள்ளது.

இதில் முந்தல் பிரதேச செயலகத்திற்குட்பட்ட உடப்பு கிராமத்தில் பாடசாலை உள்ளிட்ட 61 வீடுகளும் கருவலகஸ்வெள பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதியில் 22 வீடுகளும் நாத்தாண்டி மற்றும் வண்ணாத்திவில்லு ஆகிய பிரதேச செயலகத்திற்குட்பட்ட தலா 2 வீடுகளும் மற்றும் பள்ளம பிரதேச செயலாளர் பிரிவுகளில் ஒரு வீடும் பாதிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, முந்தல் பிரதேச செயலகத்திற்குட்பட்ட உடப்பு பிரதேசத்தில் பாதிக்கப்பட்ட வீடுகளை முந்தல் பிரதேச செயலாளர் பிரதேச செயலக உத்தியோகத்தர்களோடு நேரில் சென்று பார்வையிட்டதுடன், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு தேவையான சகல உதவிகளையும் பெற்றுக்கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுத்தார். (ஜ-4)

## லெபனானில் வெடிப்பு சம்பவம்

# இடிபாடுகளில் சிக்கியிருந்த குழந்தை உயிருடன் மீட்பு

(பெய்ரூட்)

லெபனானின் பெய்ரூட் நகரில் இடம்பெற்ற பயங்கர வெடிப்பு சம்பவத்தையடுத்து அங்கு நடத்தப்பட்ட தேடுதலில், இடிபாடுகளில் இருந்து குழந்தையொன்று 24 மணிநேரத்திற்கு பின்பு உயிருடன் மீட்கப்பட்டுள்ளது. (ஜ-4)

# உணவுக்கிடங்கு இடிந்து விபத்து 10 பேர் பரிதாபமாக உயிரிழப்பு





(பீஜிங்)

சீனாவில் உணவுக் கிடங்கு இடிந்து விழுந்து விபத்துக்குள்ளானதில் 10 பேர் பரிதாபமாக பலியானார்கள்.

சீனாவின் வடகிழக்குப் பகுதியில் உள்ள ஹெய்லோங்ஜியாங் மாகாணத்தின் தலைநகர் ஹார்பினில் தனியாருக்கு சொந்தமான உணவுப்பொருள் தயாரிப்பு நிறுவனம் ஒன்றுள்ளது.


இந்த நிறுவனத்துக்கு அருகிலேயே அதன் கிடங்கு உள்ளது. இங்கு உணவு பொருட்கள் சேகரித்து வைக்கப்பட்டிருந்தன.

இந்த நிலையில் நேற்று முன்தினம் இந்த உணவுக் கிடங்கில் தொழிலாளர்கள் சிலர் பராமரிப்புப் பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது சற்றும் எதிர்பாராத வகையில் உணவு கிடங்கு திடீரென இடிந்து விழுந்தது.

இதில் தொழிலாளர்கள் இடிபாடுகளுக்குள் சிக்கிக்கொண்டனர். இதன் போது 10 பேர் சடலமாக மீட்கப்பட்டனர்.

இந்த விபத்து குறித்த தகவல் கிடைத்ததும் 300-க்கும் மேற்பட்ட தீயணைப்பு வீரர்கள் மற்றும் மீட்புக்குழுவினர் சம்பவ இடத்திற்கு விரைந்து தீவிர மீட்புப் பணியில் ஈடுபட்டனர். (ஜ-4)

# தனது மனைவி குறித்து பெருமைப்பட்ட ஜனாதிபதி





(கொழும்பு)

எனது வாழ்க்கையின் உண்மையானதோர் ஆசீர்வாதம் என் மனைவி தான் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் அயோமா ராஜபக்ஷ ஆகியோர் தங்களது 40 ஆவது திருமண நாளை நேற்று வியாழக்கிழமை கொண்டாடியுள்ளனர்.

இந்நிலையில் குறித்த நிகழ்வு தொடர்பாக ஜனாதிபதி தனது டுவிட்டர் பதிவில், "40 வருடங்களுக்கு முன்னர், இதே நாளிலிருந்து அன்பான மனைவியாக, பாசமான தாயாக, நல்லதொரு நண்பியாக, என்னோடு நிழலாகப் பயணித்துக் கொண்டிருக்கும் நீங்களே என் வாழ்க்கையின் உண்மையானதோர் ஆசீர்வாதம்" என அவர் பதிவேற்றியுள்ளார். (ஜ-4)



## கடந்த இரு மாதங்களில் இல்லாதளவு பிரான்ஸில் கொரோனா பாதிப்பு உயர்வு

(பாரிஸ்)

பிரான்ஸில் 2 மாதங்களில் இல்லாத அளவிற்கு கொரோனா பாதிப்புகள் அதிகமாக பதிவாகியுள்ளது.

பிரான்ஸ் நாட்டின் தேசிய சுகாதார நிறுவனம் நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள புள்ளி விபரங்களின்படி, பிரான்ஸில் நேற்று மாத்திரம் ஆயிரத்து 695 புதிய தொற்றாளர்கள் பதிவாகியுள்ளனர்.

இது மே 30 ஆம் திகதிக்குப் பிறகு நாட்டில் பதிவான மிக அதிகமான கொரோனாப் பாதிப்புகள் ஆகும்.

நாட்டில் மொத்த இறப்பு எண்ணிக்கை 30 ஆயிரத்து 305 ஆக உள்ளது. ஐரோப்பாவில் கொரோனா இறப்பு எண்ணிக்கையில் இங்கிலாந்து மற்றும் இத்தாலிக்கு அடுத்தபடியாக 3 ஆவது இடத்தில் பிரான்ஸ் உள்ளது. (ஜ-4)

## குணமடைந்தோர் 2541

(கொழும்பு)

நாட்டில் கொரோனாத் தொற்றுக்குள்ளான மேலும் நால்வர் குணமடைந்த நிலையில் வைத்தியசாலையை விட்டு வெளியேறியுள்ளனர்.

இதன் மூலம் நாட்டில் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 2 ஆயிரத்து 541 ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை நாட்டில் இதுவரை மெத்தமாக 2 ஆயிரத்து 839 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## லெபனானில் வெடிப்புச்சம்பவம் இலங்கையர்கள் 8 பேர் காயம்

(பெய்ரூட்)

லெபனான் தலைநகரான பெய்ரூட்டில் ஏற்பட்ட வெடிப்புச் சம்பவத்தில் காயமடைந்த இலங்கையர்களின் எண்ணிக்கை எட்டாக உயர்வடைந்துள்ளது.

குறித்த எட்டு பேரும் தற்போது வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருவதாக லெபனானிலுள்ள இலங்கைத் தூதரகம் தெரிவித்துள்ளது.

லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் உள்ள துறைமுகத் தொழிற்சாலையொன்றில் கடந்த செவ்வாய்க்கிழமை இலங்கை நேரப்படி இரவு 8.30 மணியளவில் பாரிய வெடிப்பு சம்பவம் ஒன்று பதிவாகியது.

இதில் குறைந்தது 135 பேர் உயிரிழந்ததுடன் ஐயாயிரம் பேர் வரை காயமடைந்துள்ளனர்.

குறித்த வெடிப்புச்சம்பவத்தில் லெபனானில் வசிக்கும் இலங்கையரின் வீடுகளும் சேதத்துக்கு உள்ளாகியுள்ளதாக அந்நாட்டிலுள்ள இலங்கைத் தூதரகம் தெரிவித்துள்ளது.

அத்துடன் பெய்ரூட்டிலுள்ள இலங்கை தூதரகத்திற்கு சிறிது சேதம் ஏற்பட்டிருந்த போதும் தூதரக அதிகாரிகள் யாரும் காயமடையவில்லை எனத் தெரிவித்துள்ளன. (ஜ-4)

எமது Northern Fitness நிறுவனத்தின் 4வது கிளையாக (பெண்களுக்கு மட்டும்) ஓட்டுமடத்தில் தலைமை கிளையின் மேல் மாடியில் பெண் பயிற்றுவிப்பாளரால் பயிற்றுவிக்கப்படுகிறது.

பாதையும் வாகன தரிப்பிடமும் பெண்களுக்கு தனியாக அமைக்கப்பட்டுள்ளது.

முதல் 50 வாடிக்கையாளர்களுக்கு விசேட விலைக்கழிவாக வருடத்திற்கு 9800/= மட்டுமே அறவிடப்படும்.

Body Fat Analysis | Diet Plan | Personal Training | Tailor - Made Workout Schedule

NORTHERN FITNESS



யாழ்.மாவட்டத்தில் முதன் முறையாக பெண்களுக்கான உடற் பயிற்சி நிலையம் பெண் பயிற்றுவிப்பாளர்களால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் முதல் முறையாக ஆண், பெண் இருபாலாருக்கும்

NVQ LEVEL 4

உடற் பயிற்சி கற்கைநெறி பயின்ற பயிற்றுவிப்பாளரினால் நடாத்தப்படும் உடற்பயிற்சி நிலையம்.

Open Daily OPENING TIME | BOYS ONLY - 4.00 AM - 11.30 PM
LADIES ONLY - 5.00 AM - 10.00 PM

யாழ்.நகரில் முதன் முறையாக பெண்களுக்கான உடற் பயிற்சி நிலையம். ஒரு கிளையையும் : ஆண்களுக்கான உடற் பயிற்சி நிலையம் இரு கிளைகளையும் கொண்ட ஒரே ஒரு உடற் பயிற்சி நிலையம்...

Contact Us 0770250339

உடல் உடை குறைத்தல் (Weight Loss)
உடல் எடை அதிகரித்தல் (Weight Gaining)
உடற் தொகுதி ஒவ்வொன்றினதும் தொழிற்பாட்டுக்கான மதிப்பீடுகள்
உடலின் கொழுப்பின் செறிவினைக் கணித்தல் (Body Fat Calculations)
நீரிழிவு, கொலஸ்ரோல், உயர் இரத்த அழுக்கம், இதய நோய்கள் போன்ற பல நோய்களை தவிர்ப்பதற்கான விசேட உடற் பயிற்சி செயற்றிட்டங்கள்.
விசேட கவனிப்புடன் கூடிய தனித்தனியான உடற்பயிற்சி செயற்பாடுகள்
நவீன வசதியுடன் கூடிய உடற் பயிற்சி இயந்திரங்கள்
ஆடை மாற்றிக் கொள்வதற்கான அறை வசதிகள்
வாகன தரிப்பிட வசதி, பாடசாலை மாணவர்களுக்கு குறைந்த கட்டணம். (C-9995)

Fitness Training | Strength Training | Fat Burning
Endurance Training | Power Training | Muscle Gaining | Weight Loss

MAIN BRANCH 573,Manipay Road, Oddumadam, Jaffna.
2ND BRANCH 18, Pandithar Manikka Thiagarayar Road, Chunnakam.
3RD BRANCH 109, (In YMCA Building Ground Floor) Kandy Road, Jaffna (Ladies Only).
4TH BRANCH 573/1, Manipay Road, Oddumadam, Jaffna (Ladies Only).

கல்யாணமாலை

சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: சதயம் 4<br>கி.பா:செவ்10 இல் உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: பட்டதாரி அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம் உள்ள பெண்<br>தொ.இ: B/11059 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: அத்தம் 4<br>கி.பா:35 செவ் 2 இல் உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: தனியார் துறை கணக்குப் பதிவாளர்<br>எதிர்பார்ப்பு: தகுந்த வரன்<br>தொ.இ: G/11075 |
| பிறப்பு: 1987 கிறிஸ்தவம்<br>நட்சத்திரம்: பூராடம் 1<br>கி.பா:23செவ்10 இல் உயரம்:165cm<br>தகைமை/தொழில்: க.பொ.த.சா/த. தபால் உதவியாளர்<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகமுள்ள பெண்<br>தொ.இ: B/11061 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி 4<br>கி.பா:16¼சூரி,செவ்6இல் உயரம்:5'4"<br>தகைமை/தொழில்: பட்டதாரி, அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: தகுந்த உத்தியோகம் பார்க்கும் பட்டதாரி மணமகன்<br>தொ.இ: G/11076 |
| பிறப்பு: 1990 கிறிஸ்தவம்<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ/த. General Insurance (Junior Executive)<br>எதிர்பார்ப்பு: சாதாரண உத்தியோகமுள்ள பெண் RC மட்டும் ஏற்றுக்கொள்ளப்படும்<br>தொ.இ: B/11063 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 2<br>கி.பா:செவ் 12 இல் உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: விஞ்ஞானப் பட்டதாரி பட்டதாரி பயிலுநர்<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி தகுந்த வரன்<br>தொ.இ: G/11081 |
| பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம் 4<br>கி.பா:செவ் 12 இல் உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: க.பொ.த.சா/த. விவசாயம்<br>எதிர்பார்ப்பு: சாதாரண பெண்<br>தொ.இ: B/11064 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி 3<br>கி.பா:15¾ செவ்11இல் உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: HND IT. IT நிறுவனத்தில் பணிபுரிகின்றார்<br>எதிர்பார்ப்பு: Accountant, Engineer, Doctor, Lawyer, Lecturer போன்ற உத்தியோகத்தர்கள்<br>தொ.இ: G/11083 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# இந்தியாவிலிருந்து நாடு திரும்பியவர்களுக்கு காணி வழங்கிய பின்னர் ஏனைய வசதிகள்

## துணுக்காய் பிரதேச செயலாளர்

(கண்டாவளை)

இந்தியாவின் தமிழகத்தில் இருந்து மீளத்திரும்பிய நான்கு குடும்பங்கள் தற்காலிகமாக தங்கவைக்கப்பட்டு அவர்களுக் கான காணிகளை வழங்க நட வடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருவதாக துணுக்காய் பிரதேச செயலாளர் எஸ். லது மீரா தெரிவித்துள்ளார்.

நாட்டில் ஏற்பட்ட அசாதா ரண சூழ்நிலை காரணமாக துணுக்காய் உயிலங்குளம் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த மேற்படி குடும்பங்கள் கடந்த 1997ஆம் ஆண்டு இந்தியா வின் தமிழகத்திற்கு சென்று தங்கியிருந்த நிலையில் நாட் டில் தற்போது ஏற்பட்டுள்ள சாதா ரண சூழ்நிலையில் 2019ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இலங் கைக்கு மீளத்திரும்பி தற்போது துணுக்காய் உயிலங்குளத்தில் தங்கியுள்ளனர்.

இந்நிலையில் இதுவரை எந்தவித வாழ்வாதார உதவி களோ மின்சார வசதிகளோ எந்த அடிப்படை வசதிகளும் வழங்கப்படவில்லை என தெரி வித்துள்ளனர்.

அதாவது உயிலங்குளம் பகுதியில் இருந்து இடம்பெயர் ந்து தமிழகத்தில் தங்கியிரு ந்தபோது தாயகத்திற்கு திரும் பினால் சகல வசதிகளும் செய்து தரப்படும் என தங்களுக் கான வாக்குறுதிகள் வழங்க ப்பட்டபோதும் எதுவித உதவி களும் கிடைக்கவில்லை. இத னால் தாங்கள் பெரும் கஷ்டங் களை எதிர்கொள்வதாக தெரி வித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் துணுக்காய் பிரதேச செயலா ளரைத் தொடர்பு கொண்டு கேட்ட போது மேற்படி குடும்பங்கள் துணுக்காய் உயிலங்குளம் பகுதியிலிருந்து இடம் பெயர் ந்து தமிழகத்திற்குச் சென்று மீளத்திரும்பிய நிலையில் வவுனியா மற்றும் யாழ்ப்பா ணம் ஆகிய மாவட்டங்களில் தற்காலிகமாக தங்கியிருந்து தற்போது எமது பிரதேசத்திற்கு வருகை தந்துள்ளார்.

ஆனால் அவர்களுக்கான நிரந்தரக்காணிகள் எவையும் எமது பிரதேசத்தில் இல்லாத காரணத்தினால் உயிலங் குளம் மாதிரி வீட்டுத்திட்டத்தில் அவர்கள் தற்காலிகமாக தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

முதற்கட்டமாக இவர்களுக் கான காணிகளை வழங்க நட வடிக்கை எடுக்கப்பட்டு வருவ தாகவும் காணிகளை வழங்கி ஏனைய தேவைகளைப்பூர்த்தி செய்யவும் நடவடிக்கை எடுக் கப்படும் என்று தெரிவித்துள் ளார். (4-5-315)

## ஏலவிற்பனை

(யாழ்ப்பாணம்)

மல்லாகம் நீதவான் நீதிமன் றினால்அரசுடைமையாக்கப்பட்ட உரிமை கோரப்படாத மோட்டார் சைக்கிள், முச்சக்கரவண்டி, கைஉழவு இயந்திரம், TATA லொறி ஆகிய சான்றுப் பொருட் கள் எதிர்வரும் 12.08.2020 ஆம் திகதி புதன்கிழமை முற் பகல் 10 மணிக்கு நீதிமன்ற வளாகத்தில் பகிரங்க ஏல விற் பனை செய்யப்படவுள்ளன. மேலும் ஏலத்தில் வாங்கப்படும் பொருட்களை உடன் பணம் செலுத்திப் பெற்றுக்கொள்வ தோடு நீதிமன்ற வளாகத்திலி ருந்து அன்றையதினமே அப் புறப்படுத்தல் வேண்டும். அத் துடன் ஏலத்தினை கோருபவர் கள் தமது தேசிய அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டு அல்லது சாரதி அனுமதிப்பத் திரத்துடன் வருகை தர வேண் டும் என மல்லாகம் மாவட்ட நீதவான் நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார். (5)

## புனித மரியன்னை பேராலய திருவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.புனித மரியன்னை பேராலயத்தின் வருடாந்த திரு விழா நேற்று 6 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 5.30 மணியளவில் கொடியேற்றத் துடன் ஆரம்பமானது.

நவநாள் வழிபாடுகள் தின மும் 5.30 மணிக்கு திருச் செப மாலையுடன் ஆரம்பமாகி நடை பெறும்.

திருநாள் திருப்பலி எதிர் வரும் 15 ஆம் திகதி சனிக் கிழமை காலை 6.15 மணியள வில் இடம்பெறும். (ஜ-5)

# லொறி-மோ.சைக்கிள் விபத்து; ஒருவர் படுகாயம், சாரதி கைது



(தருமபுரம்)

கண்டாவளை சந்திக்கு அருகில் கிளிநொச்சியிலிருந்து புதுக்குடியிருப்பு நோக்கிச் சென்ற கூலர் வாகனமும் தருமபுரத்திலிருந்து கிளிநொச்சி நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதி நேற்று முன்தினம் விபத்து இடம்பெற்றுள்ளது.

இவ் விபத்தில் தருமபுரத் தைச்சேர்ந்த பன்னீர்செல்வம் என்பவர் படுகாயம் அடை ந்த நிலையில் கிளிநொச்சி வைத் தியசாலையில் அனுமதிக்கப் பட்டு பின்னர் மேலதிக சிகிச் சைக்காக யாழ். போதனா வைத் தியசாலைக்கு மாற்றப்பட்டுள் ளார்.

இந்த விபத்து தொடர்பாக கிளிநொச்சி பொலிஸார் விசா ரணைகளை ஆரம்பித்துடன் வாகனச் சாரதியையும் கைது செய்துள்ளனர். (4-5-316)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 20 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 12 தினங்கள் நடைபெறவுள்ளது.

இதில் இரதோற்சவம் எதிர் வரும் 30 ஆம் திகதி ஞாயிற்று க்கிழமை காலை 9 மணியள விலும் தீர்த்தத்திருவிழா (ஆவணி ஓணம்) மறுநாள் திங்கட்கிழமை காலை 8.30 மணியளவிலும் நடைபெறவு ள்ளன. (5)



ஊடகவியலாளர் சகா தேவன் நிலக்சனின் 13 ஆம் ஆண்டு நினைவேந் தல் நிகழ்வுகள் கடந்த சனிக்கிழமை யாழ். ஊடக அமையத்தில் நடைபெற்றது.

(படம்:- சிவசாந்தன்)

# வீடு கையளிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ். பிரதேசத்தில் வாழ் கின்ற குறைந்த வருமானத் தைப் பெறுகின்ற குடும்பங் களுக்கு வீடுகள் வழங்குகின்ற வேலைத்திட்டத்தின் கீழ் மானி ப்பாய் உடுவில் (தெற்கு) பிரதேச த்தில் வசிக்கும் நந்தினி ரதீஸ் வரனுக்கு வீடு கையளிக்கும் நிகழ்வு நேற்று யாழ். பாது காப்பு படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ருவான் வணிகசூரிய தலை மையில் இடம்பெற்றது. (4-5)

# 8 இலட்சம் பெறுமதியான மரக்குற்றிகள் பூநகரி பொலிஸாரால் மீட்பு கைப்பற்றல்



(முறிகண்டி)

கிளிநொச்சி பூநகரி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அரசபுரம் காட் டில் இருந்து யாழ்ப்பாணத்தி ற்கு கடத்தப்படவிருந்த சட்ட விரோத மரக்குற்றிகள் வில்லடி பகுதியில் வைத்து பூநகரி பொலி ஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

பூநகரி பொலிஸ் புலனாய்வு பிரிவிற்கு கிடைத்த இரகசிய தகவலிற்கு அமைவாக பொலி ஸார் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போதே குறி த்த மரக்குற்றிகள் பொலிஸா ரால் கைப்பற்றப்பட்டுள்ளன. சாரதி தப்பிச் சென்றுள்ள நிலை யில் அடையாளம் காணப்பட் டுள்ளதாக பூநகரி பொலிஸார் தெரிவித்தனர்.

மீட்கப்பட்ட மரக்குற்றிகளின் பெறுமதி 8 இலட்சம் என மதி பிடப்பட்டுள்ளது. (4-5-100)

## பகிரங்க அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் வல்வெட்டித்து றைப் பொலிஸாரால் பாரப்படுத் தப்பட்ட துவிச்சக்கரவண்டிகள் இதுவரை உரிமை கோரப்ப டாத நிலையில் காணப்படு கின்றன.


எனவே குறித்த சான்றுப் பொருட்களை உரிமை கோரு பவர்கள் எவரேனுமிருப்பின் 2020.09.27 ஆம் திகதிக்கு முன்னர் அலுவலக நேரங் களில் உரிய ஆவணங்களு டன் சமுகமளித்து பெற்றுக் கொள்ளுமாறு பருத்தித்துறை நீதவான் நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார். (5)

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்


# நாம் வாழும் பூமி

எமது பூமியின் மொத்தப் பரப்பளவான 510 million $km^2$ (197 million sq mile) இல் உலகிலுள்ள முக்கியமான டெக்ரோனிக் (**Tectonic, plates**) தட்டுகளாக இந்தியத் தட்டு,அரேபியத் தட்டு,கரீபியத் தட்டு,தென் அமெரிக்காவின் வடகரையில் இருக்கும் நாசுகாத் தட்டு மற்றும் தெற்கு அட்லாண்டிக் பெருங்கடலில் உள்ள சுகோசியத் தட்டு என்பன காணப்படுகின்றன. அவுஸ்திரேலியத் தட்டு இந்தியத் தட்டுடன் 50 முதல் 55 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் இணைந்திருந்ததாகக் கருதப்படுகின்றது. பெருங்கடல் தட்டுகளிலே 23 மில்லியன் ஆண்டுகளுக்கு (23 **million years**) முன்னர் உருவாகி மிகவும் வேகமாக நகர்ந்து கொண்டிருக்கும் கோகோசுத் தட்டு (**Cocos Plate**) வருடத்தில் 75 **mm** (3.0 **inch/year**) தூரம் வரை நகர்வதாகக் கணிக்கப்பட்டுள்ளது. இத்தட்டுவடஅமெரிக்கத் தட்டு, கரீபியன் தட்டு, நஸ்காத் தட்டு மற்றும் பசுபிக் தட்டு என்பவற்றால் சூழப்பட்டுள்ளதை அருகிலுள்ளபடம் எமக்குத் தெளிவாகக் காட்டுகின்றது. மற்றும் பசுபிக் பெருங்கடல் தட்டு (**Pacific Plate**) ஆண்டிற்கு 52mm-69mm (2.0-2.7 **inch/year**) வரையிலும் நகர்கின்றன. மறுபுறத்தில் மிகவும் மெதுவாக நகரும் தட்டுகளில் யுரேசியன் தட்டு (**Eurasian Plate**) ஆகும், இது ஐரோப்பிய மற்றும் ஆசியக் கண்டங்களைத் தன்னகத்தே பெரும்பாலும் உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றது. மேலும் இந்தியா மற்றும் அரேபியக் கண்டங்களின் குறிப்பிட்ட ஒரு பகுதியையும் தன்னகத்தே கொண்டுள்ளது. இவ் யுரேசியன் தட்டின் அண்ணளவான பரப்பளவு 67, 800, 000 $km^2$ ஆகும். இது வருடத்திற்கு 21 **mm** (0.83 **inch/year**) தூரம் வரை நகர்கின்றது.

பூமியின் நிலம் இடத்திற்கு இடம்மிகவும் வேறுபட்டுள்ளது.





வேகமாகநகரும் கோகோசுத் தட்டு




மெதுவாகநகரும் யுரேசியன்தட்டு

பூமியின் மேற்பகுதி 70.8% நீரினால் சூழப்பட்டுள்ளது. மேலும் கண்டங்களின் அடுக்குப் பகுதிகள் கடலுக்கடியிலேயே உள்ளன. நீரால் மூழ்கியுள்ள இடங்களில் மலை போன்ற அமைப்புகள், பூமி முழுவதும் பரவியுள்ள நடுப்பெருங்கடல் மலைத் தொடர்கள், எரிமலைகள், பெருங்கடல் அகழிகள், ஆழ்கடல்படுபள்ளங்கள், பெருங்கடல் பீடபூமிகள் மற்றும் ஆழமான கணக்கிலடங்கா சமவெளிகள் என்பன காணப்படுகின்றன. இதைத் தவிர்த்து பூமியின் மீது தண்ணீருக்கு வெளியே உள்ள 29.2% இடத்தில் மலைகள், பாலைவனங்கள், சமவெளிகள், பீடபூமிகள் மற்றும் நிலப்பரிமாண அமைப்புகள் போன்றன காணப்படுகின்றன.


எரிமலை (**Volcano**) என்பது புவியின் உட்புறத்திலுள்ள சூடான கற்குழம்பு, சாம்பல் வளிமங்கள் போன்றவை வெளியேறத்தக்க வகையில் புவி மேலோட்டில் உள்ள துவாரம் அல்லது வெடிப்பு ஆகும். மலைகள் அல்லது மலைகள் போன்ற அம்சங்களை ஒரு குறிப்பிட்ட கால கட்டத்திற்கும் மேலாக உருவாக்கும் விதமாக பாறைகளை வெளித்தள்ளும் நிகழ்வோடு எரிமலை நடவடிக்கை தொடர்புள்ளது. "வால்கனோ" (**volcano**) என்ற சொல் இத்தாலிய மொழியிலிருந்து பெறப்பட்ட ரோமானியர்களின் நெருப்புக்கடவுளான வால்கன் என்னும் பெயரிலிருந்து பெற்றதாகும்.



அலாஸ்காவின் அலூரியன் தீவுகளில் உள்ளகிளிவ்லேண்ட் எரிமலை



பவளப் பாறை




சுழல்வடிவஎரிமலையின் குறுக்குவெட்டுத்தோற்றம்

1. பெரியமாக்மா அறை
2. அடிநிலப்பாறை
3. கால்வாய் (குழாய்)
4. அடித்தளம்
5. சில்
6. அகழி
7. உமிழப்படும் சாம்பல் அடுக்குகள்
9. உமிழப்படும் எரிமலைக் குழம்பு அடுக்குகள்
10. கழுத்துப்பகுதி
11. சுற்றுப்புறக் கூம்பு
12. எரிமலைக்குழம்புஓட்டம்
13. வெளியேறும் பகுதி
14. எரிமலைவாய்
15. சாம்பல் மேகம்

பொதுவாக டெக்டோனிக் அடுக்குகள் விலகுகின்ற அல்லது நெருங்குகின்ற இடங்களில் எரிமலைகள் காணப்படுகின்றன. ஒரு மத்திய - கடல் மலை முகடு, உதாரணத்திற்கு மத்திய அட்லாண்டிக் மலை முகடு, டெக்டோனிக் அடுக்குகள் விலகிச் செல்வதால் ஏற்பட்ட எரிமலைகளுக்கு சான்றுகளாக உள்ளன. மேலும் பசுபிக் நெருப்பு வட்டம் டெக்டோனிக் அடுக்குகள் நெருங்கி வந்து ஒன்று சேர்ந்ததற்கான சான்றுகளாக உள்ளன. முரண்பாடாக, டெக்டோனிக் அடுக்குகள் ஒன்றின் மேல் ஒன்று சாய்ந்திருக்கும் நிலையில் வழக்கமாக எரிமலைகள் உருவாவதில்லை. பூமியின் ஓடு நீண்டு செல்கின்ற அல்லது மெலி தடைகின்ற இடங்களிலும் எரிமலைகள் உருவாகின்றன ("இது வெப்பப் பகுதி அல்லாத எரிமலை நிகழ்வு" எனப்படுகிறது) வெப்பப்பாறைகள் மேல் நோக்கி வருவதாலும் எரிமலைகள் உருவாகின்றன. இத்தகைய வெப்பப் பகுதிகள் எனப்படுபவை, உதாரணத்திற்கு ஹவாயில் உள்ளவை. அடுக்கு எல்லையின் அப்பாலிருந்து உருவாகக்கூடியவை. வெப்பப்பகுதி எரிமலைகள் சூரிய மண்டலத்தில் உள்ள அனைத்திலும் காணப்படுகின்றன, குறிப்பாகபாறைக் கிரகங்கள் மற்றும் நிலவுகளில் இது காணப்படுகிறது.

பூமியின் மேற்பரப்பிலுள்ள டெக்டோனிக் தட்டுக்கள் அரித்தலால் காலப்போக்கில் உருமாறிக் கொண்டே இருக்கிறது. புவிமேற்பரப்பில் உள்ள டெக்டோனிக் பலகைகள் நகர்வதால் குவிந்த மற்றும் தகர்ந்த அமைப்புகள் ஏற்படுகின்றன. மேலும் இவை மழையினால் சிதைவடைவதுடன் வெப்பச் சுழற்சி மற்றும் இரசாயனங்களாலும் டெக்டோனிக் தட்டுக்கள் தாக்கப்படுகின்றன. பனியாறுகள் உருவாவதாலும், கடற்கரை அரிப்பு, பவளப்பாறைகள் தோன்றுதல் மற்றும் பெரும் விண்கற்களின் தாக்கம் ஆகியவற்றாலும் பூமியின் மேற்பரப்பு அடிக்கடி மாற்றியமைக்கப்படுகின்றது.



The Great Barrier Reef

பவளப் பாறைகள் (**Coral Reefs**) என்பவை கடலினுள் பவளம் எனப்படும் ஒரு உயிரினத்தால் சுரக்கப்படும் கல்சியம் கார்பனேட்டினால் உருவாகின்றன. பெரும்பாலும் இவை காணப்படும் பகுதி பூமத்தியரேகைக்கு கீழே உள்ள வெப்பநாட்டு கடல் பகுதிகளும், பசுபிக் பெருங்கடலும் ஆகும். இந்தியாவில், அந்தமான் தீவுகளிலும், லட்சத் தீவுகளை ஒட்டிய கடல் பகுதிகளிலும் இவை அதிகமாகக் காணக்கிடைக்கின்றன.

பவளப்பாறைகளில் கண்டத்திட்டுப் பவளப்பாறைகள், தடுப்புப் பவளப்பாறைகள் (கரை விலகிய பவளப்பாறை), வட்டப் பவளத்திட்டுகள் என மூன்று வகைகள் உள்ளன.

பசுபிக் பெருங்கடலில் பல அழகான வண்ணங்களில் பவளப் பாறைகள் அமைந்துள்ளன. இவை பச்சை, கருஞ்சிவப்பு, பழுப்பு, மஞ்சள் முதலானநிறங்களில் காணப்படுகின்றன. மேலும் இவை பல்வேறு கடல் உயிரினங்கள் வாழ்வதற்கான இடமாகவும் இருக்கின்றன. இவை "கடல்களின் மழைக்காடுகள்" என அழைக்கப்படுகின்றன. 25 வீதமான கடல் வாழ் உயிரினங்களின் வாழ்விடமாக இப்பவளப் பாறைகள் காணப்படுகின்றன.

உலகின் அனைத்து சமுத்திரங்களிலும் பவளப்பாறைகள் உருவாவதில்லை. இவை உருவாவதற்கு விசேட சுற்றுச் சூழல் நிலைமைகள் அவசியம் ஆகும். அவையாவன:

1) சமுத்திர நீரின் வெப்பநிலை 20°C - 24 °C இற்கு இடைப்பட்டதாக இருக்க வேண்டும்.

2) சமுத்திரநீரின் சாரீரப் பதன் 30% இருந்து 35% வரை இருக்க வேண்டும்.

3) சூரிய ஒளி சமுத்திரத்தின் ஆழ் பகுதி வரை நன்கு ஊடுருவ வேண்டும்.

4) அலைகுறைவாக இருக்க வேண்டும்.

அ.குகன்
விரிவுரையாளர்
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.

# உலகின் முதல் அணுகுண்டு வெடிப்பின் 75ஆவது ஆண்டு நினைவேந்தல் அனுஷ்டிப்பு



**(கொழும்பு)**

**ஒரு இலட்சத்து 40 ஆயிரத்திற்கும் அதிகமானோர் கொல்லப்பட்ட ஹிரோஷிமா தாக்குதலின் 75 ஆவது ஆண்டு நினைவுநாளில் சுயநல தேசியவாதத்தை நிராகரிக்குமாறு ஹிரோஷிமா மேயர் சர்வதேச நாடுகளிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.**

உலகின்முதல்அணு குண்டு வெடிப்பின் 75 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வானது நேற்று ஜப்பான், ஹிரோஷிமாவில் அனுஷ்டிக்கப்பட்டது.

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக இதன் நிகழ்வுகள் இந்த ஆண்டு பெருமளவு மட்டுப்படுத்தப்பட்ட நிலையில் அனுஷ்டிக்கப்பட்டது.

இதன் போது ஹிரோஷிமா நகரத்தின் மேயர் நாடுகளை சுயநல தேசியவாதத்தை நிராகரிக்கவும், அணு ஆயுதக் குறைப்பில் இன்னும் தீவிரமாக கவனம் செலுத்துமாறும் அனைத்து நாடுகளிடமும் வேண்டிக் கொண்டார்.

1945 ஒகஸ்ட் இதே நாளில் தான் ஜப்பானின் ஹிரோஷிமா நகர் மீது உலகின் முதல் அணு குண்டு வீச்சை நடத்தியது அமெரிக்கா.

“லிட்டில் பாய்” என்று செல்லப் பெயர் கொண்ட இந்த அணு குண்டு வீச்சினால் 1,18,661 பொது மக்கள் கொல்லப்பட்டதாக அந்த நேரத்தில் ஜப்பான் அறிவித்தது.

எனினும் ஹிரோஷிமாவில் வசித்த 3,50,000 பேரில் 1,40,000 பேர் கொல்லப்பட்டிருக்கலாம் என பிந்தைய மதிப்பீடுகள் தெரிவித்தன. இந்த குண்டு வீச்சினால் ஏற்பட்ட



கதிர்வீச்சில் பலர் நீண்ட காலத்திற்கு நோய்வாய்ப்பட்டு இறந்தனர். பலர் உடல் ஊனமடைந்தனர். (ஜ-4)

# சீரற்ற காலநிலையால் 10 மாவட்டங்கள் பாதிப்பு

(கொழும்பு)

நாடு முழுவதும் தொடரும் சீரற்ற காலநிலை காரணமாக பத்து மாவட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

நாடு முழுவதும் வீசிய பலத்த காற்று காரணமாக 483 வீடுகள் சேதமடைந்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி குறிப்பிட்டுள்ளார்.

குருநாகல், இரத்தினபுரி, கொழும்பு, களுத்துறை, கம்பஹா, கேகாலை, காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களே இவ்வாறு அனர்த்தத்திற்கு முகம்கொடுத்துள்ளது.

இதேவேளை சீரற்ற காலநிலையால் உண்டான அனர்த்தம் காரணமாக ஐவர் காயமடைந்துமுள்ளனர். இதற்கிடையில், நாட்டின் பல மாவட்டங்களுக்கான மின்சார விநியோக நடவடிக்கையானது தடை செய்யப்பட்டுள்ளதாக மின்சக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.(ஜ-4)

# பிரதமர் மீதான குற்றச்சாட்டுக்கள் அப்பட்டமான பொய்-ஜோன்ஸ்டன்



(கொழும்பு)

நடைபெற்று முடிந்த பொதுத் தேர்தலில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, தேர்தல் சட்டங்களை மீறியதாக எழுந்த குற்றச்சாட்டுகள் அப்பட்டமான பொய்யென அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னான்டோ தெரிவித்துள்ளார்.

தேர்தல் சட்டங்களை மீறி பிரதமர் மகிந்த ராஜபக்ஷ செயற்பட்டதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இந்நிலையில் அத்தகைய கருத்துக்கு மறுப்பு தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மக்கள் விரும்பும் ஒரு தலைவர். எனவே வாக்களிப்பதற்கு பிரதமர் வருவதை அறிந்த மக்கள், அவரை காணபதற்காக ஆர்வமாக வந்தார்கள்.

இவ்வாறு வந்த மக்களிடம் பிரதமர் சாதாரணமாக பேசினாரே தவிர வாக்களிக்குமாறு கோரவில்லை.



எனவே ஜனநாயகம் மற்றும் தேர்தல் சட்டங்களைப் பாதுகாப்பது குறித்து தேசிய மக்கள் சக்தி, மகிந்த ராஜபக்ஷவுக்கு கற்பித்துக் கொடுக்கத் தேவையில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஜ-4)

# ஐக்கிய அரபு இராச்சியத்தில் பாரிய தீ விபத்து



(அபுதாபி)

ஐக்கிய அரபு இராச்சியம், அஜ்மனில் பாரிய தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

அந்நாட்டு நேரப்படி நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை 6.30 மணியளவில் எமிரேட்ஸில் உள்ள ஈரானிய சூக்கில் **(Iranian Souq)** இந்த தீ விபத்து ஏற்பட்டதாக நம்பப்படும் நிலையில் பாரிய தீ பரவலாக இது மாறியுள்ளது.

இந்நிலையில். அஜ்மன் சிறப்பு மருத்துவமனை மற்றும் தொழில்துறை பகுதியில் உள்ள காய்கறி சந்தைக்கு அருகில் தீ பாரிய அளவில் பரவியுள்ளது.

இதனைத் தொடர்ந்து அஜ்மன் சிறப்பு மருத்துவ மனையில் இருந்து அனைவரும் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

குறித்த சந்தைத் தொகுதியில், டசின் கணக்கான வர்த்தக நிலையங்கள் உள்ள நிலையில், பாரிய தீயை கட்டுப்படுத்த தீயணைப்பு வீரர்கள் போராடி வருகின்றனர். (ஜ-4)


# இந்தியாவில் கொரோனா பாதிப்பு 19 இலட்சத்தைக் கடந்தது

(டில்லி)

இந்தியாவில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 19 இலட்சத்தை கடந்துள்ள நிலையில், உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 40 ஆயிரத்தை நெருங்கியுள்ளது.

கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக உலகளவில் 1 கோடியே 85 இலட்சத்து 44 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், அதிக பாதிப்புக்களை எதிர்கொண்ட நாடுகளின் வரிசையில் இந்தியா மூன்றாம் நிலையில் உள்ளது.

நேற்று முன்தினம் நிலவரப்படி 56 ஆயிரத்து 626 பேர் இந்நோய்த் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர்.




இதன்மூலம் இந்தியாவில் கொரோனா தொற்றுக்கு உள்ளானோரின் மொத்த எண்ணிக்கை 19 இலட்சத்து 63 ஆயிரத்து 239 ஆக உயர்ந்து உள்ளது.

ஒரே நாளில் கொரோனா வைரசுக்கு நாடு முழுவதும் 919 பேர் உயிரிழந்துள்ளனர். இதையடுத்து இந்தியாவில் இதுவரை கொரோனா தொற்றுக்கு உயிரிழந்தோரின் எண்ணிக்கையானது. 40 ஆயிரத்து 739 ஆக அதிகரித்துள்ளது. (ஜ-4)

# 5 ஆண்டுகள்; 750 தொன்! - லெபனான் விபத்துக்கு காரணமான அமோனியம் நைட்ரேட் சென்னையிலும் சேமிப்பு

**லெபனானில் நிகழ்ந்த கோர விபத்துக்கு காரணமான அமோனியம் நைட்ரேட், சென்னை துறைமுகத்தில் சேமித்து வைக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.**





லெபணான் நாட்டின் தலைநகர் பெய்ரூட்டில் இருக்கும் துறைமுகத்தின் சேமிப்பு கிடங்கில் கடந்த ஆறு ஆண்டுகளாகச் சேமித்து வைக்கப்பட்டிருந்த 2,750 தொன் அமோனியம் நைட்ரேட் வெடித்துச் சிதறியதில் மொத்த நகரமும் உருக்குலைந்தது. இந்த கோர விபத்தில் சிக்கி 135 பேர் உயிரிழந்துள்ளனர். துறைமுக வட்டாரத்தில் இருந்து 6 கி.மீ. தொலைவு வரை உள்ள கட்டடங்கள் சுக்குநூறாக நொறுங்கின. 4 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

மேலும் சுமார் 3 இலட்சம் மக்கள் தங்கள் வீட்டை இழந்து தவித்து வருகின்றனர். ஒட்டுமொத்தமாக 40 ஆயிரம் கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டிருக்கும் என்று சொல்லப்படுகிறது.

6 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பலத்த தீக்காயங்களுடன் ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

## லெபனான் விபத்து

இந்த விபத்துக்குத் துறைமுக அதிகாரிகள் மற்றும் நீதித்துறையின் அலட்சியம் தான் காரணம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் பல்வேறு துறைமுக அதிகாரிகள் வீட்டுச் சிறையில் வைக்கப்பட்டுள்ளனர்.

## லெபனான் விபத்தின் பின்னணி

அமோனியம் நைட்ரேட் என்பது வெள்ளை நிறத்தில் உப்பு போல இருக்கும் ஒரு சேர்மம். இதன் வேதியியல் மூலக்கூறு பெயர் $NH_4NO_3$ ஆகும்.

இது நீரில் கரையும் தன்மை கொண்டது. இந்த வேதிப்பொருளானது, பெரும்பாலும் விவசாயத்துறையில் உரமாகவும் சுரங்கத் தொழில் மற்றும் கட்டுமானத்துறையில் பயன்படுத்தப்படும் வெடிபொருட்களின் முக்கியப் பகுதியாகவும் உள்ளது.

பயிர்களுக்கு தழைச்சத்து கிடைப்பதற்காக அமோனியம் நைட்ரேட் உரமாக பயன்படுத்தப்படுகிறது. மேலும் கட்டடங்களை இடிக்கவும் பாறைகளை உடைக்க மற்றும் கிணறுகள் தோண்டுவதற்கு தேவையான வெடிபொருட்கள் தயாரிக்கவும் அமோனியம் நைட்ரேட் பயன்படுத்தப்படுகிறது.



இது வெடிக்கும் தன்மை கொண்டதால் தவறாகப் பயன்படுத்தப்படும் வாய்ப்பு அதிகமாக இருக்கிறது. எனவே பல நாடுகள் இந்தச் சேர்மத்தை பொதுவான நுகர்வோர் பயன்படுத்துவதற்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

## சென்னை துறைமுகம்

அமோனியம் நைட்ரேட்டை ஒரு அளவுக்கு மேல், ஓரிடத்தில் நீண்டகாலமாக வைத்திருந்தால் அது குறிப்பிட்ட அளவு வெப்பத்தை வெளியிடும் எனக் கூறப்படுகிறது. அதில் இருந்து வெளியாகும் வெப்பமே நெருப்பாக மாறும் என்றும் அமோனியம் நைட்ரேட்டில் இருந்து ஒட்சிசன் வெளியாகும் என்பதால், அதுவே தீ கொளுந்துவிட்டு எரியும். அப்போது வெளியாகும் சிவப்பு நிறப் புகை அதிக நச்சுத் தன்மை கொண்டது.

இந்தப் புகை மனிதர்களை நொடியில் கொல்லும் திறனுடையது என்றும் அறிவியலாளர்கள் எச்சரிக்கின்றனர்.

மொத்த உலகத்தையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கும் இந்தப் பெரும் விபத்து அனைத்து நாடுகளையும் விழிப்படையச் செய்துள்ளது. தங்கள் நாடுகளில் இருக்கும் அமோனியம் நைட்ரேட் தொடர்பாக அனைவரும் தற்போது சோதனை செய்யத் தொடங்கியுள்ளனர்.

## சென்னையில் அமோனியம் நைட்ரேட்!

இந்நிலையில் வட சென்னை துறைமுகத்தில் கடந்த ஐந்து ஆண்டுகளாக சுமார் 740 தொன் அமோனியம் நைட்ரேட் சேமித்து வைக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கரூர் அம்மன் கெமிக்கல் நிறுவனம் அனுமதியில்லாமல் 2015 ஆம் ஆண்டு இறக்குமதி செய்த 740 தொன் அமோனியம் நைட்ரேட் சுங்கத்துறை அதிகாரிகளால் பறிமுதல் செய்யப்பட்டது. கடந்த 5 ஆண்டுகளாக வடசென்னை துறைமுகத்தையொட்டிய குடோனில் அமோனியம் நைட்ரேட் பாதுகாக்கப்பட்டு வருகிறது.


துறைமுகத்தில் 37 கொள்கலன்களில் வைக்கப்பட்டுள்ள இந்த அமோனியம் நைட்ரேட்டின் தற்போதைய நிலை குறித்து ஆராய்ந்து வருவதாகவும் அதைப் பாதுகாப்பாக எப்படி அப்புறப்படுத்தலாம் என்ற ஆலோசனையில் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளதாகவும் சுங்கத்துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மேலும், சென்னை துறைமுகத்துக்கு வரும் ஒவ்வொரு சரக்குகளும் பாதுகாப்பாக வைத்திருப்பதற்கான ஒரு தனித்துவமான நடவடிக்கை பின்பற்றப்படுகிறது.

இதையே' எங்கள் அதிகாரிகளும் பின்பற்றுகின்றனர்' என ஒரு உயர் அதிகாரி கூறியுள்ளார்.

இதற்கிடையில் பா.ம.க. நிறுவுநர் ராமதாஸ் இந்த விவகாரம் தொடர்பாக தன் டுவிட்டர் பக்கத்தில், சென்னை துறைமுகத்தை ஒட்டிய கிடங்கு ஒன்றில் 740 தொன் அமோனியம் நைட்ரேட் எனும் வெடிமருந்து 5 ஆண்டுகளாக இருப்பில் வைக்கப்பட்டிருப்பதாக வெளியாகியுள்ள செய்தி மிகவும் அதிர்ச்சியளிக்கிறது. லெபனான் நாட்டில் மிகப் பெரிய வெடிவிபத்து ஏற்பட்டதற்கு இந்த வெடிமருந்து தான் காரணம்!சென்னை கிடங்கில் உள்ள அமோனியம் நைட்ரேட்டால் அதே போன்ற வெடிவிபத்து ஏற்படும் ஆபத்து உள்ளது.

அதைத் தடுக்க சென்னை கிடங்கில் உள்ள அமோனியம் நைட்ரேட் வெடிமருந்தை பாதுகாப்பாக அப்புறப்படுத்தி உரம் தயாரிப்பு போன்ற பிற தேவைகளுக்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும்!" என்று தெரிவித்திருக்கிறார்.



நன்றி: ஜூனியர் விகடன்

# பாரதம்

# கொரோனா வைத்தியசாலையில் தீ விபத்து எண்மர் உடல் கருகி உயிரிழப்பு

## குஜராத்தில் சோகம்



(அகமதாபாத்)

குஜராத் மாநிலத்தில் கொரோனா வைத்தியசாலையில் ஏற்பட்ட தீவிபத்தில் சிக்கி 8 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் உள்ள நவ்ரங்பூரா பகுதியில் உள்ள ஷ்ரா வைத்தியசாலையில் கொரோனா நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் அங்கு நேற்றுக் காலை தீவிபத்து ஏற்பட்டது.

மளமளவெனக் கொழுந்து விட்டு எரிந்த தீ அடுத்தடுத்த அறைகளுக்கும் பரவியது. தகவலறிந்த தீயணைப்பு வீரர்கள் அங்கு விரைந்து சென்று தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர்.

இந்த தீவிபத்தில் 8 பேர் உடல் கருகிப் பரிதாபமாக உயிரிழந்தனர். (2)

# ஐ.நா.சபைக்கு இந்தியா 15.46 மில்லியன் டொலர் நிதியுதவி




(நியூயோர்க்)

ஐ.நா.சபையுடனான வளர்ச்சி கூட்டு நிதிக்காக 15.46 மில்லியன் டொலர் நிதியை இந்தியத் தூதர் திருமூர்த்தி வழங்கினார். வளரும் நாடுகளின் வளர்ச்சி முன்னுரிமைகளில் ஆதரவு அளிப்பதற்கு இந்தியா உறுதி கொண்டுள்ளது.

இந்த வகையில் ஐ.நா. சபையுடனான கூட்டு வளர்ச்சி நிதியாக 15.46 மில்லியன் டொலர் நிதிக்கான காசோலையை நியூயோர்க்கில் ஐ.நா.சபையின் தென்-தெற்கு ஒத்துழைப்புக்கான அலுவலகத்தில் அதன் இயக்குநர் ஜோர்ஜ் செடீக்கிடம் இந்தியத் தூதர் டி.எஸ்.திருமூர்த்தி நேரில் வழங்கினார்.

இதுபற்றி ஜோர்ஜ் செடீக் கருத்துத் தெரிவிக்கையில், "இந்தியா-ஐ.நா.நிதி அதன் ஆரம்ப ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க பலன்களை அளித்துள்ளது. இந்த நிதியைத் தொடர்ந்து வளர்ப்பதற்கான இந்தியாவின் புதுப்பிக்கப்பட்ட அர்ப்பணிப்பு, அதன் பயனுள்ள திட்டங்களின் தொகுப்பைக் காட்டுகிறது.

மேலும், அதன் கூட்டாண்மையானது உண்மையான தென்-தெற்கு ஒற்றுமை மற்றும் உலகின் மிகவும் பாதிக்கப்படக்கூடிய சவால்களை எதிர்ப்பதில் இந்தியத் தலைமையின் நிரூபணத்தையும் காட்டுகிறது" என்றார்.

இதையொட்டி ஐ.நா.வெளியிட்டுள்ள அறிக்கை, "தென்நாடுகளிடையே ஒற்றுமைக்கான அழைப்பு, கொரோனா வைரஸ் தொற்று நோய் பின்னணியில் ஒரு பெரிய எதிரொலியை கண்டறிந்துள்ளது.

உலகமெங்கும் உள்ள வளர்ந்து வரும் நாடுகள், பொது சுகாதாரம், வறுமை குறைப்பு மற்றும் சமூக நல்வாழ்வு ஆகியவற்றில் அவர்கள் செய்த சாதனைகள், ஒரு பின்னடைவை தடுக்க போராடுகின்றன. இந்த கட்டத்தில் பரஸ்பர ஆதரவு, ஒத்துழைப்பின் தேவை அதிகமாக உள்ளது. எப்போதும் இந்தப் பின்னணியில் இந்திய அரசு, சக வளரும் நாடுகளை அவர்களின் தேசிய வளர்ச்சி முன்னுரிமைகளில் ஆதரிப்பதற்கான தனது உறுதியை புதுப்பித்துள்ளது" என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (2)

# முல்லைக்குத்தேர் கொடுத்த பாரி; அந்த வரிசையில் டுபாய் இளவரசர்

(டுபாய்)

முல்லைக்குத் தேர் கொடுத்த பாரி போல பறவை கூடுக் கட்டி வாழ தனது காரை கொடுத்த டுபாய் பட்டத்து இளவரசருக்குச் சமூக வலைத்தளங்களில் பாராட்டுக்கள் குவிகின்றன.

டுபாயின் பட்டத்து இளவரசராகவும் நிர்வாக சபையின் தலைவருமாக விளங்கி வருபவர் ஷேக் ஹம்தான் பின் ராஷித் அல் மக்தூம் ஆவார். இவருக்கு எப்போதும் உயிரினங்கள் மீது அளவு கடந்த பிரியம் வைத்திருப்பவர். இதற்காகவே தனி மிருகக்காட்சிச்சாலை போன்ற இடத்தில் பல்வேறு விலங்குகளை மிகப் பாசமாக வளர்த்து வருகிறார்.

அடிக்கடி இவர் சமூக வலைத்தளங்களில் பல்வேறு விலங்கினங்களுடன் இணைந்து இருக்கும் புகைப்படங்களை வெளியிட்டு வருவது வழக்கம். கொரோனாப் பாதிப்பு காலங்களில் பட்டத்து இளவரசர் வெளியிடங்களுக்கு செல்வதை தவிர்த்து வந்தார். அதனால் அவரது வாகனங்கள் பல பயன்படுத்தாமல் இருந்து வந்தன.

இதில் அண்மையில் அவர் அடிக்கடி பயன்படுத்தும் கறுப்பு நிற மெர்சிடஸ் வாகனத்தின் முகப்பு பகுதியில் சிறிய பறவை ஒன்று கூடுகட்டி முட்டையிட்டது.

பின்னர் அதில் அமர்ந்து அடைகாக்கத் தொடங்கியது. இதனைப் பார்த்த பட்டத்து இளவரசர் அந்த வாகனத்தை பயன்படுத்தாமல் விட்டு விட்டார்.

மேலும் கூட்டைக் கலைக்கும் விதமாக அந்த வாகனத்தைச் சுற்றி பணியாளர்கள் யாரும் சென்றுவிடக்கூடாது என்பதற்காக எச்சரிக்கை செய்யும் சிவப்பு நிற நாடாவை நான்கு புறத்திலும் சுற்றி வைத்துள்ளார்.



அதில் அந்தப் பறவை தனது முட்டைகளை இன்னும் அடைகாத்து வருகிறது. முல்லைக்குத் தேர் கொடுத்த பாரி போல, ஒரு சிறு பறவைக்காகத் தனது காரையே அளித்த பட்டத்து இளவரசரின் வீடியோ தற்போது சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது.

பலரும் இது குறித்து பாராட்டுகளையும் மகிழ்ச்சியையும் அவரது இரக்கக் குணத்தையும் நெகிழ்ச்சியுடன் பதிவிட்டு வருகின்றனர். (2)

# கெ

# 135 ஆ

## 5 ஆயி



(பெய்ரூட்)

லெபனான் வெடி விபத்தில் உயிரிழந்

# நியூயோர்க் சதுக இராமர் கோவில் பூ



(வோஷிங்டன்)

அமெரிக்காவின் நியூயோர்க் டைம்ஸ் சதுக்கத்தில் இராமர் கோவில் பூமி பூஜை படங்கள் காட்சிப்படுத்தப்பட்டன.

அயோத்தியில் இராமர் கோவில் கட்டுவதற்கான பூமி பூஜை நேற்று நடைபெற்றது. விழாவிற்கு தலைமை தாங்கிய பிரதமர் மோடி 40 கிலோ எடை கொண்ட வெள்ளி செங்கல் கொண்டு அடிக்கல் நாட்டினார்.

# பா.ஜ.க.துணைச பயங்கரவாதிகளால்

(காஷ்மீர்)

ஜம்மு-காஷ்மீரில் பயங்கரவாதிகள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் குல்காம் மாவட்ட பா.ஜ.க.துணைச் செயலாளர் சஜாத் அகமது உயிரிழந்துள்ளார்.

நேற்று வியாழக்கிழமை காலை சஜாத் அகமது தனது வீட்டின் முன்னாள் நின்று கொண்டிருந்தபோது அப்பகுதியில் மறைந்திருந்த பயங்கரவாதிகள் துப்பாக்கிப்

# ...லெபனான் வெடி விபத்து ...ஆக உயர்ந்த பலி எண்ணிக்கை

## ...ஆயிரம் பேர் படுகாயம்





...யிரிழந் ...தோர் எண்ணிக்கை 135 ஆக அதிகரித்துள்ளது.

லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் உள்ள துறைமுகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை பயங்கர வெடி விபத்து ஏற்பட்டது.

இந்த வெடி விபத்து பெய்ரூட் நகரையே உருக்குலைய செய்துள்ளது. வெடி விபத்து நடந்த சில விநாடிகளில் பெய்ரூட் துறைமுகப் பகுதி முழுவதும் ஒரேஞ் நிறத்தில் புகைமண்டலமாக மாறியது.

பெய்ரூட் மட்டுமல்லாமல் அந்நகரில் இருந்து 200 கிலோ மீற்றர்கள் தொலைவில் உள்ள தீவுகளிலும் இந்த வெடிவிபத்தின் தாக்கம் உணரப்பட்டது.

துறைமுகப்பகுதியிலுள்ள சேமிப்பு கிடங்கில் பாதுகாப்பற்ற முறையில் வைக்கப்பட்டிருந்த வெடிக்கக்கூடிய அமோனியம் நைட்ரேட் வேதிப்பொருளால் இந்தக் கோரவிபத்து நடைபெற்றது. இந்த வெடி விபத்தில் பல கட்டடங்கள் இடிந்து தரைமட்டமாகின. துறைமுகப்பகுதியே நிலைகுலைந்தது. வெடி விபத்தில் 100 பேர் வரை உயிரிழந்திருந்ததாக தகவல் வெளியாகியிருந்தது.

இந்நிலையில், பெய்ரூட் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. தற்போதைய நிலவரப்படி வெடி விபத்தில் 135 பேர் உயிரிழந்துள்ளதாகவும் 5 ஆயிரத்துக்கும் அதிகமானோர் படுகாயமடைந்துள்ளதாகவும் சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

இந்த விபத்தில் பலர் மாயமாகியுள்ளதால் மீட்புப்பணிகள் துரிதப்படுத்தப்பட்டு காணாமல் போனவர்களைத் தேடும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. இதனால் பெய்ரூட் விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மேலும் பல மடங்கு அதிகரிக்கலாம் என்ற அச்சம் நிலவி வருகிறது. (2)

## ...சதுக்க திரையில் ...வில் பூஜை படங்கள்



...டைம்ஸ் ...பூஜை ...காவில் ...நடை ...தாங்கிய ...கொண்ட ...அடிக்கல்

பூமி பூஜை விழாவை முன்னிட்டு அயோத்தி விழாக்கோலம் பூண்டுள்ளது. உலகம் முழுவதும் உள்ள இந்தியர்கள் கொண்டாடி வருகின்றனர்.

இந்நிலையில் பூமி பூஜை விழாவின் நிகழ்ச்சிகள் அமெரிக்காவின் நியூயோர்க் டைம்ஸ் சதுக்கத்தின் இராட்சத திரையில் காட்சிப்படுத்தப்பட்டன. (2)

## ...ணைச்செயலாளர் ...களால் சுட்டுக்கொலை

...வாதிகள் ...தல்காம் ...லாளர் ...ல சஜாத் ...நின்று ...ல் மறை ...பாக்கிப்

பிரயோகத்தினை மேற்கொண்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த சஜாத் அகமதுவை சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதித்த போது, சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்துள்ளதாக இந்திய ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (2)

### பெய்ரூட் விபத்தில் ஒரு நெகிழ்ச்சி

## இடிபாடுகளுக்கு மத்தியில் 3 பச்சிளம் குழந்தைகளை காப்பாற்றிய செவிலியர்

(பெய்ரூட்)

லெபனான் தலைநகர் பெய்ரூட்டின் விபத்து நடந்த பகுதிக்கு அருகில் இருந்த வைத்தியசாலைக் கட்டட இடிபாடுகளில் சிக்கிய 3 பச்சிளம் குழந்தைகளைக் காப்பாற்றிய பெண் செவிலியரின் புகைப்படம் சமூக வலைத்தளத்தில் வைரலாகி வருகிறது.

பெய்ரூட்டில் உள்ள துறைமுகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை பயங்கர வெடிவிபத்து ஏற்பட்டது. இந்த வெடிவிபத்து பெய்ரூட் நகரையே உருக்குலையச் செய்துள்ளது. வெடிவிபத்து நடந்த சில விநாடிகளில் பெய்ரூட் துறைமுகப்பகுதி முழுவதும் ஒரேஞ் நிறத்தில் புகைமண்டலமாக மாறியது.

துறைமுகப்பகுதியிலுள்ள சேமிப்பு கிடங்கில் பாதுகாப்பற்ற முறையில் வைக்கப்பட்டிருந்த வெடிக்கக்கூடிய அமோனியம் நைட்ரேட் வேதிப்பொருளால் இந்தக் கோரவிபத்து நடைபெற்றுள்ளது.

இந்த வெடிவிபத்தில் பல கட்டடங்கள் இடிந்து தரைமட்டமாகின. துறைமுகப்பகுதியே நிலைகுலைந்தது. இந்த கோர விபத்தில் இதுவரை 135 பேர் உயிரிழந்துள்ளனர். 5 ஆயிரத்துக்கும் அதிகமானோர் படுகாயமடைந்துள்ளனர்.



விபத்து நடந்த பகுதியில் பலர் மாயமாகியுள்ளதால் அவர்களைத் தேடும்பணியும் கட்டட இடிபாடுகளுக்குள் சிக்கியவர்களை மீட்கும் பணியிலும் மீட்புக் குழுவினர் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், விபத்து நடைபெற்ற பகுதிக்கு அருகே இருந்த வைத்தியசாலையில் கட்டட இடிபாடுகளுக்குள் சிக்கிய 3 பச்சிளம் குழந்தைகளை மீட்டு தனது கையில் பாதுகாப்பாக வைத்திருந்த பெண் செவிலியரின் புகைப்படம் சமூகவலைத்தளத்தில் வைரலாகி வருகிறது.

பெய்ரூட் விபத்து நடந்த சில நிமிடங்களில் உள்ளூர் புகைப்படக்கலைஞரான பிலால் ஜாவிஸ் தனது கமராவை எடுத்துக்கொண்டு விபத்து தொடர்பான புகைப்படங்களை எடுப்பதற்காக அஷ்ரஃபிஹா மாவட்டத்திற்குச் சென்றார். அங்கு விபத்துத் தொடர்பான புகைப்படங்களை எடுத்துவிட்டு அம்மாவட்டத்தில் உள்ள அல் ரோவ்ம் வைத்தியசாலைக்குச் சென்றார்.

வெடிவிபத்து காரணமாக அந்த வைத்தியசாலையே நிலைகுலைந்திருந்தது. வைத்தியசாலையில் 80 சதவிகித கட்டடம் பெருத்த சேதமடைந்திருந்தது.

அங்கு சென்ற பிலால் அங்கு ஒரு பெண் செவிலியர் தனது ஒருகையில் 3 பச்சிளம் குழந்தைகளை வைத்துக்கொண்டு மறுகையில் தொலைபேசியில் அவசர உதவிக்காக அழைப்பு விடுத்துக்கொண்டிருந்தார்.

வெடிவிபத்து காரணமாக அந்தக் கட்டடம் இடிந்து 4 செவிலியர்கள், 12 நோயாளிகள் உட்பட மொத்தம் 18 பேர் உயிரிழந்திருந்தனர்.

வெடிவிபத்தில் காயமடைந்த பலரும் இரத்தக்காயங்களுடன் அந்த செவிலியரை சுற்றியிருந்தனர். உயிரிழந்தவர்களின் உடலும் அந்த செவிலியரைச் சுற்றிக்கிடந்தது.

ஆனால், அந்த செவிலியர் தனது கையில் உள்ள குழந்தைகளுக்கு எதுவும் பாதிப்பு ஏற்பட்டுவிடக்கூடாது என்ற எண்ணத்தோடும் மன உறுதியோடும் அருகில் உள்ள வைத்தியசாலையைத் தொடர்பு கொண்டு உதவிபெற முயற்சித்துக்கொண்டிருந்தார்.

இதைப்பார்த்த பிலால் ஒரு கையில் 3 பச்சிளம் குழந்தைகளை வைத்துக்கொண்டு மறுகையில் தொலைபேசியை வைத்துக்கொண்டிருந்த அந்த செவிலியரை தனது கமரா மூலம் புகைப்படம் எடுத்தார்.

பின்னர் அந்த புகைப்படத்தைத் தனது டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்டார். வெடிவிபத்து சம்பவத்தால் வைத்தியசாலை இடிந்து விழும் சமயத்திலும் குழந்தையைக் காப்பாற்றும் நோக்கத்தோடு செயற்பட்ட செவிலியரின் புகைப்படம் சமூக வலைத்தளத்தில் வைரலாகி வருகிறது. (2)

# மூன்று வாக்குச் சாவடிக்குள் பிரதமர்

## மறு வாக்கெடுப்பைக்கோரும் ஐக்கிய மக்கள் சக்தி

(கொழும்பு)

**நிகவரெட்டியவில் உள்ள இரண்டு வாக்குச் சாவடிகளிலும் கொபெய்கனை உள்ள ஒரு வாக்குச் சாவடியிலும் மறு வாக்கெடுப்பு நடத்துமாறு தேசிய தேர்தல்கள் ஆணைக் குழுவிடம் ஐக்கிய மக்கள் சக்தி கோரிக்கை விடுத்துள்ளது.**



குறித்த மூன்று வாக்குச் சாவடிகளுக்கும் பிரதமரும் ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளருமான மகிந்த ராஜபக்ஷ தனது ஆதரவாளர்களுடன் நுழைந்ததாக ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார குற்றம்சாட்டியுள்ளார்.

குறிப்பாக பொதுத் தேர்தல் வாக்குப் பதிவின் போது மகிந்த ராஜபக்ஷ 100 வாக்காளர்களுடன் மூன்று வாக்குச் சாவடிகளுக்குள் நுழைந்ததாகத் தெரியவந்துள்ளது.

எனவே இந்த சம்பவம் சுதந்திரமான, நியாயமான தேர்தலை நடத்துவதற்கான வாய்ப்பை அப்பட்டமாக குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது என அவர் குற்றம் சாட்டியுள்ளார். அத்தகைய வேட்பாளர்களின் செயற்பாடுகளை கட்டுப்படுத்த தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் கேட்டுக் கொள்வதாகவும் அவ்வாறு செய்யத் தவறினால், அந்த வாக்குச் சாவடிகளில் மறு வாக்கெடுப்பை நடத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். (ஜ-4)

# கத்திக்குத்தில் இளைஞன் பலி


(கேகாலை)

கேகாலை நகரத்திலுள்ள கடையொன்றில் ஏற்பட்ட மோதல் சம்பவத்தில் இளைஞர் ஒருவர் கத்தியால் குத்திக் கொல்லப்பட்டுள்ளார். நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் கேகாலையைச் சேர்ந்த 24 வயதுடையவரே உயிரிழந்துள்ளார் என பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் தப்பிச் சென்றுள்ள நிலையில் அவர்களை கண்டறியும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர். மேலும் சம்பவத்தில் உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக கேகாலை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (ஜ-4)

# லொக்கா சுட்டுக்கொலை 7 பேரிடம் வாக்கு மூலம்





(அநுராதபுரம்)

அநுராதபுரம்- தஹாயியாகம சந்திப்பில் நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் எஸ்.எப்.லொக்கா என்ற எரோன் ரணசிங்க கொலைசெய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக 7 பேரிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும் எஸ்.எப். லொக்கா மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்திவிட்டு மோட்டார் சைக்கிள் ஊடாக தப்பிச்சென்றவர்கள் தொடர்பாக சி.சி.ரி.வி. காணொளி பதிவு ஊடாக மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக விரைவான விசாரணையை முன்னெடுப்பதற்கு விசேட குழுவொன்றும் அமைக்கப் பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

சந்தேகநபர்களை உடனடியாக கைது செய்யுமாறு அநுராதபுரம் பிரதான நீதவான் ஜனக்க பிரியந்த சமரசிங்கவினால் பொலிஸாருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டமையினை தொடர்ந்தே இவ்வாறு விரைவான விசாரணையை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

அநுராதபுரம் - தஹாயியாகம சந்திப்பில் நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் எஸ்.எப். லொக்கா என்ற எரோன் ரணசிங்க நேற்று முன்தினம் புதன்கிழமை கொல்லப்பட்டுள்ளார்.

அநுராதபுரத்தில் கடந்த 2015 ஆம் ஆண்டு இரவு விடுதி ஒன்றில் வைத்து கராத்தே சம்பியனான வசந்த சொய்சா கொலை செய்யப்பட்ட சம்பவத்தின் பிரதான சந்தேகநபரான எஸ்.எப். லொக்கா என்பவரே இந்தச் சம்பவத்தில் கொல்லப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த சம்பவத்தில் மேலும் இருவர் காயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# இன்று ஒரு தகவல்

## தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## இது ஒரு பிரச்சினை!

ஒருத்தர் இருந்தார். வயது 50, பெரியவர். அவருக்கு வாழ்க்கையிலே எந்த குறையும் இல்லை. சின்ன வயதிலேயே படிப்பு நன்றாக் வந்தது படித்தார்.வசதியான குடும்பம். அதனாலே பணத்துக்கு கஷ்டம் இல்லை, படிப்பு முடிந்ததும் கல்யாணம், மனதிற்கு பிடித்த மனைவி, தொல்லையில்லா குடும்ப வாழ்க்கை.

அவர்களுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. வளர்ந்தது. அதையும் நல்லபடியாக ஒரு இடத்திலே கல்யாணம் செய்து கொடுத்தார். பொண்ணு புகுந்த இடமும் வசதியான இடம். அங்கே உள்ள மாமனார், மாமியார் உட்பட எல்லோருமே நல்லகுணம். நம்முடைய பெரியவர் ஒரு தனியார் அலுவலகத்திலேயே நல்ல உத்தியோகத்தில் இருக்கிறார். கூட வேலை பார்ப்பவர்களும் மிகவும் நல்ல மாதிரி. இப்பவும் தன் மனைவியை அழைத்துக் கொண்டு அடிக்கடி உல்லாச பிரயாணமெல்லாம் போய் வருவார். எல்லா வசதிகளோடும் இருக்கின்றார். எந்த பிரச்சினையும் இல்லை. இவருடைய வாழ்க்கையைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்?

இது மாதிரி எல்லாம் அமைந்து விட்டது என்றால் நானும் மிகவும் நிம்மதியாகத்தான் இருப்பேன் என்று சொல்லுவீர்கள். ஆனால் அந்த பெரியவர் நிம்மதியாகவா இருக்கின்றார் என்று நினைக்கின்றீர்கள்? அது தான் இல்லை. அவர் என்ன சொல்கின்றார் தெரியுமா? "வாழ்க்கையிலே நான் நினைத்தது எல்லாம் கிடைத்துவிட்டது. எதற்காகவும் நான் கவலைப்படவேண்டியது இல்லை என்பது உண்மை.

ஆனால் எப்ப பார்த்தாலும் எனக்குள்ளே ஒரு சோகம்.ஏதே ஒரு சோகம் இருந்து கொண்டே இருக்கின்றது.அது ஏன் என்று புரியவில்லை என்றார். இதே நிலைமை நமக்குள்ளேயும் சில பேருக்கு இருக்கலாம். எல்லாம் இருக்கின்றது. இருந்தாலும் வாழ்க்கையிலே என்னால் சந்தோசமாக இருக்க முடியவில்லை என்கின்ற நிலைமை. இது ஒரு மனோதத்துவக் கோளாறு (Achievement Depression) என்கின்ற பெயர். ஆசைப்பட்ட எல்லாமே கிடைத்து விட்டது என்று வையுங்கள் அதற்கு பிறகு எதற்காக வாழ வேண்டும்? என்று தோன்றும்.

வாழ்க்கையில் பிரச்சினைகள் ஏதும் இல்லை என்று வைத்துக் கொள்ளுங்கள். அதுவே ஒரு பிரச்சினை. அதுதான் இது. அதாவது பிரச்சினையே இல்லாமல் இருக்கின்ற பிரச்சினை. சோகமோ, மகிழ்ச்சியோ எதுவாக இருந்தாலும் சரி. அடுத்தபடியாக ஒரு விடயம் இருக்கின்றது. அதைக் கவனித்துக் கொள்ளுங்கள் என்று தொடர்ந்து திட்டம் போடுவதிலேயும் அதற்காக செயற்படுத்துவதிலேயும் வாழ்க்கைச் சக்கரம் ஓடுகின்றது.

அடுத்ததாக செய்வதற்கு எதுவும் இல்லை என்கிற போது அந்த சக்கரம் நின்று விடுகின்றது. இனிமேல் நான் ஓட வேண்டும் என்ற கேள்வி வருகின்றது. இது நியாயம் தான். இருந்தாலும் வாழ்க்கை என்பது இன்னமும் இருக்கின்றது என்று வழியப்போய் சில விடயங்களை எடுத்துக் கொண்டோம் என்றால் இனிமேல் ஏன் ஓட வேண்டுமென்ற கேள்வி அர்த்தமற்றதாகிவிடும்.

அதனாலே எல்லாம் பார்த்தாச்சு, இனிமேல் என்ன இருக்கின்றது வாழ்க்கையிலே என்று நினைத்து நீங்களாக ஒரு முடிவுக்கு வந்து விடாதீர்கள். இந்த உலகத்திலேயே எத்தனையோ இருக்கின்றது நமக்குத்தான் பிரச்சினையே இல்லை என்றால் அடுத்தவர்களுக்கு ஏதாவது இருக்கும் அல்லவா. அதை தீர்ப்பதற்கு உதவலாம். அநாதை இல்லங்கள் உண்டு, அதற்கு உதவி செய்யலாம்.

இப்படி ஏதாவது சமூக சேவைகளுக்கு என்று திட்டம் போட்டுக் கொண்டு நாளை என்ன வேலை என்று யோசிக்க ஆரம்பித்துக் கொள்ளுங்கள். உங்களுக்குள்ளே அர்த்தம் இல்லாமல் உட்கார்ந்திருந்த சோகம் எழுந்து ஓடிப்போய் விடும். இதுவரைக்கும் சொல்லிக் கொண்டு வந்ததெல்லாம் பிரச்சினையே இல்லை என்கின்ற பிரச்சினை உள்ளவர்களுக்கு. இப்படி உள்ளவர்கள் ரொம்ப அபூர்வம். பிரச்சினைகளிலே இருந்து தப்பிப்பதற்கு வழி சொல்லுங்கள் என்று கேட்பவர்கள் தான் அதிகம். ஒருவர் வந்தார். இன்னொருவரைப் பார்த்து " சேர் எனக்கு கடுமையான பணப் பிரச்சினை. ஒரு நூறு ரூபா இருந்தால் கொடுங்கள் " என்றார். நீ யார் என்று எனக்கு தெரியாது உனக்குத் தெரிந்தவர்கள் யாரையாவது பார்த்துக் கேள் கொடுப்பார்கள் என்றார் அவர். அதற்கு இவர் அவர்களிடம் எல்லாம் ஏற்கனவே வாங்கி விட்டேன்... அதனாலே தான் உங்களிடம் வந்தேன் என்றார்.

# தேர்தல் முறைப்பாடுகளில் 82 பேர் கைதாகினர்

(கொழும்பு)

நாட்டில் நேற்று வியாழக்கிழமை காலை 6 மணியுடன் நிறைவடைந்த காலப்பகுதியில் பொதுத் தேர்தல் முறைப்பாடுகள் தொடர்பாக 82 பேரை கைது செய்துள்ளதாக பொலிஸார் அறிவித்துள்ளனர்.

அத்துடன் 18 வாகனங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

தேர்தல் தொடர்பாக மொத்தமாக 72 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளரும்சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான ஜாலிய சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

அவற்றுள் 55 முறைப்பாடுகள் தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பாகவும் ஏனைய 17 முறைப்பாடுகள் சிறு சம்பவங்கள் தொடர்பாக நாடு முழுவதும் உள்ள பொலிஸ் நிலையங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஜ-4)



# தேர்தல் கடமைகளில் ஈடுபட்டவர்களுக்கே நேற்று விடுமுறை

(கொழும்பு)

நாட்டில் நேற்று அரச விடுமுறை வழங்கப்படாததுடன் சில அரச அதிகாரிகளுக்கு மாத்திரமே விடுமுறை வழங்கப்பட்டிருந்ததாகவும் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் ஜே.ஜே.ரத்னசிறி தெரிவித்துள்ளார்.

குறித்த அரச அதிகாரிகள் தேர்தல் கடமைகளில் ஈடுபட்டமைக்காக அவர்களுக்கு நேற்று விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஜ-4)

# தேர்தல் கடமைகளை நிறைவு செய்து வீடு திரும்பிய போது விபத்தில் சிக்கிய பெண்

(கம்பஹா)

கம்பஹா மாவட்ட தேர்தல் வேட்பாளரின் ஆதரவாளர்கள் குழுவினரால் இயக்கப்படும் டிபென்டர் வாகனம் மீது மோட்டார் சைக்கிள் மோதியதில், அதில் பயணித்த தம்பதியினர் பலத்த காயங்களுக்குள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக மீரிகம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை 6.30 மணியளவில் மீரிகம, வெவல்தெனிய வீதியின், பண்டாரநாயக்க வித்தியாலயத்திற்கு அருகில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

தேர்தல் கடமையிலிருந்த ஒரு அரச அதிகாரி, தேர்தல் கடமைகளை முடித்தவுடன், தனது கணவருடன் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்தபோதே இவ்வாறு டிபென்டர் வாகனத்துடன் மோதுண்டு விபத்துக்குள்ளாகியுள்ளனர்.

டிபென்டர் வாகனம் ஒரு காரை முந்திச் செல்ல முற்படுகையில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மீரிகம பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் ஆலோசனையின் கீழ், பொலிஸார் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஜ-4)

# வாக்கெண்ணும் நிலையங்களுக்கு பாதுகாப்பு வழங்கிய அதிரடிப்படையினர்

(கொழும்பு)

வாக்கெண்ணும் நிலையங்களை அண்மித்த பகுதிகளில் விசேட பாதுகாப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வாக்குகள் எண்ணும் பணிகள் மிக சுமுகமாகவும் மும்முரமாகவும் இடம்பெற்றது. வாக்கெண்ணும் நிலையங்களின் பாதுகாப்பு நடவடிக்கைகளில் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரும்ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். (ஜ-4)

# ஆணின் பெயரில் வாக்களித்த பெண்

(கொழும்பு)

கொழும்பின் புறநகர்ப் பகுதியான அத்தடிய பிரதேசத்தில் உள்ள வாக்களிப்பு நிலையத்தில் ஆணின் பெயரில் பெண் ஒருவர் வாக்களித்துள்ளதாக வாக்களிப்பு நிலையத்தில் இருந்த கிராம உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார்.

தனது வாக்கினை வழங்குவதற்கு ஆண் நபர் ஒருவர் வாக்களிப்பு நிலையத்திற்கு சென்றுள்ளார்.

எனினும் குறித்த வாக்களிப்பு நிலையத்தில் தனது வாக்கினை யாரோ ஒருவர் வாக்களித்த விடயம் தெரிய வந்துள்ளது. (ஜ-4)

# விடுதலைப்புலிகள் உட்பட 20 அமைப்புக்களின் தடை நீடிப்பு

(ஜெனிவா)

விடுதலைப் புலிகள் உட்பட 20 அமைப்புகளுக்கு விதித்துள்ள தடையை ஐரோப்பிய ஒன்றியம் நீடித்துள்ளது. இதனடிப்படையில் ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப் புலிகள் உட்பட 20 அமைப்புகளை தனது புதிய பட்டியலில் சேர்த்துள்ளது. ஐரோப்பிய ஒன்றியத்தின் இந்த தடையானது 30 உறுப்பு நாடுகளில் நடைமுறையில் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள், பாபர் கஹால்சா, ஹிஸ்புல் முஜாதீன், காலிஸ்தான் சிந்தபாத் ஹமாஸ், ஹிஸ்புல்லா, துருதிஷ்தான் தொழிற்கட்சி, பாலஸ்தீன இஸ்லாமிக் ஜிகாத் உட்பட 20 அமைப்புகளுக்கான தடையை நீடிப்பது என ஐரோப்பிய ஒன்றியம் கடந்த ஜூலை 30 ஆம் திகதி தீர்மானித்தது.

அதேவேளை பிரித்தானியாவில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்க கோரி நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் வழக்கு தாக்கல் செய்துள்ளதுடன் அந்த வழக்கின் தீர்ப்பு இதுவரை வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-4)




## "நல்லை வாழ் கந்தா"

என் துயர் கோடி நீயறிவாய்
எள்ளளவேனும் கண்திறவாய்
உன்னிடமல்லால் யாரிடம் போய்-என்
உளக்குறை தன்னை போயுரைப்பேன்
பன்னிருகண்கள் கொண்டவனே
பத்தர்குறைகள் தீர்ப்பவனே
ஒன்னிரு கண்கள் திறந்தெமக்கு
ஓராறுதல் தந்தருள் நல்லை வேலே!
வேலெடுத்தாய் சூரனை வதைத்திடவே
வேரறுப்பாய் எம் கொடு வினைதனையே -என்
மேலெழுந்த துன்பமதை அகற்றிட
மனமில்லையோ-கார்
மேக வண்ணன் மருகா நல்லை வாழ் கந்தா!
உன் பாதமதில் சமர்ப்பித்தேன்
என் துயர் தனையே!

பொ.புனிதன்,
வரியப்புலம்.

## "கொரோனா நீங்கிட வரம்தனை நல்கிடு நாயகனே"

அருள்மிகு சிவனின் நுதல் விழி மலரில்
தோன்றிய பொருளோனே,
அருட்புனல் நிறைந்த சரவணப் பொய்கையில்
தவழ்ந்து மிதந்தோனே
இன்னல்கள் தீர்த்திட மாந்தரை காத்திட
நல்லை நகர் அமர்ந்தோனே
ஈராறு கரமுடன் ஓராறு முகங்களும்
ஒளி பெறத் திகழ்வோனே
தீராத கொரோனா தீர்ந்திட வரம்தனை
நல்கிடுவாய் நாயகனே,

கலைமாமணி க.லோகேஸ்வரன்,
தொல்புரத்தூர்.

## வேட்டையாடி வலம் வரும் அலங்காரக் கந்தனே..

சுற்றிவந்த பகையைப் போக்கி
துக்க மறுத்து எமை ஆளும்
அலங்காரக்கந்தனே
வினைகளை நீக்கி கவலைகெட
பாசம்தரும் எம் பாலகனே
பற்றேதும் இல்லாமல்
எழுபிறவி நெறியொழிய
என்றும் இசைவானவனே
வேட்டையாடி வந்திடுவாய் வெகுசீக்கிரமே
எம் நல்லை நகர்தனில்....

காயத்திரி விக்கினேஸ்வரன்,
சாவகச்சேரி.

## சந்தம் சிந்தும் நல்லைக் கந்தன்

இங்கு மங்கு மெங்கு மாக
இசைந் தசையுஞ் சோதியே
கங்குல் பகல் காலம் ஞாலம்
கடந்த வேத நாதியே
திங்கள் சடை சூடும் விடைச்
சிவனும் போற்றும் போதியே
எங்கள் துயர் களையும் “களையும்”
ஏந்தல் நல்லைக் கந்தனே!

கலாபூஷணம் சந்தக்கவிஞர்.
நவ.பாலகோபால்



# புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்கள் ஓர் உலகளாவிய ஆய்வு

37

கலாநிதி முருகர் குணசிங்கம்

கூடுதலானவர்கள் நிலத்தின்கீழ் ஓடும் தொடர் வண்டிகளிலேயே (Underground Train) தமது அன்றாடத் தேவைகளுக்காகப் பயணிக்கின்றார்கள்.

மேலும் தொடர்வண்டிச் சேவை காலதாமதம் இன்றி மிகவும் நேர்த்தியாக இயங்குவதால், பெரும்பாலானவர்கள் அதனையே போக்குவரத்துக்குப் பயன்படுத்துகின்றார்கள்.

லண்டன் மாநகரில் வாழும் பெரும்பான்மையான ஈழத்தமிழர்கள் தொடர் வண்டி நிலையங்களுக்கு அருகிலேயே பரவியும் செறிந்தும் வாழ்கின்றார்கள்.

அமெரிக்காவின், நியூயோர்க் நகரத்தில் ஈழத்தமிழர்கள் பரவலாக வாழ்கின்றமை போல் கனடாவில் ரொறன்ரோவின் 90 விழுக்காடு ஈழத் தமிழர்கள் வாழ்கின்றார்கள்.

அந்த நகரங்களைச் சுற்றியே அவர்களின் வீடுகளும் வேலைத் தளங்களும் வணிக மையங்களும் காணப்படுகின்றன. இதனால் அவர்கள் தமது தனித்துவத்தையும் தமிழர் என்ற அடையாளத்தையும் பேணி வாழக்கூடிய ஒரு சாதகமான சமூக நிலைமை காணப்படுகிறது.

ஆனால் லண்டன் மாநகரில் பல்வேறு இடங்களில் பரவி வாழ்வதால், ஒரு கூட்டுச் சமூகமாகத் தமது தனித்துவத்தையும் அடையாளங்களையும் கட்டி வளர்ப்பதில் அதிக சிரமங்களையும் சவால்களையும் எதிர்கொள்வதை அவதானிக்க முடிகிறது.

ஆயினும் ஜேர்மனி, டென்மார்க் போன்ற ஆங்கில மொழி நடைமுறையில் இல்லாத நாடுகளில் ஈழத்தமிழர்கள் சிதறி வாழ்வதைக் காட்டிலும் லண்டன் மாநகரில் வாழும், ஈழத்தமிழர் தம்மை ஒரு தமிழ்ச் சமூகமாக ஒருங்கிணைத்துக் கொள்வதில் அவ்வளவாகச் சிரமங்கள் இல்லை என்றே கூற முடியும்.

இவைகள் தவிர, மேற்கண்ட மூன்று நாடுகளிலும் ஆங்கிலக் கல்வி கற்ற தொழில்சார் வல்லுநர்கள், மருத்துவர்கள், பொறியாளர்கள், கணக்காளர்கள், கணனித்துறை வல்லுநர்கள், சட்டத்தரணிகள் போன்றவர்கள் அரச,தனியார் துறைகளில் தொழில் புரிவதில் அதிகம் சிரமங்கள் இருப்பதாகத் தெரியவில்லை.

ஆனால் இலங்கையில், தமிழ் மொழி மூலம் பல்கலைக்கழக தொழில்நுட்பக் கல்லூரிகளில் பட்டங்கள் பெற்றவர்களுடைய கல்வித் தராதரங்களைக் கொண்டு மேற்படி நாடுகளில் அரச, தனியார் துறைகளில் தொழில் வாய்ப்புகளைப் பெறுவதில் தடைகள் காணப்படுகின்றன.

இதன் விளைவாக பலர் தமது தகுதிக்குத் குறைந்த தொழில்களையே செய்து வருவதைக் காணமுடிகிறது. மேலும் கல்வித் தகைமையோ ஆங்கில அறிவோ இல்லாதவர்கள் தொழிற்சாலைகள், உற்பத்திக் கூடங்கள், பெரும் சந்தைகள் கடைகள், உணவகங்கள் பெரிய விடுதிகளில் (Hotel) வேலை செய்வதனையே பார்க்க முடிகிறது.


மேலும் பலர் தமது பல்வேறுபட்ட சொந்த நிறுவனங்களைச் சிறியதாகவும் பெரியதாகலும் தமது வசதிக்கு ஏற்ப நடத்தி வருகின்றார்கள்.

கனடாவில் ரொறன்ரோ நகரத்தில் ஸ்காரோவில் (Scarborough) எங்கு சென்றாலும் ஈழத்தமிழர்களின் வணிக நிறுவனங்களை மூலைமுடுக்கெல்லாம் காணமுடியும்.

அதேபோல் லண்டன் மாநகரிலும் தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் நகரங்களிலும் பெரியதும் சிறியதுமான பல்வேறு வணிக நிறுவனங்கள் தமிழ்ப் பெயர் சூட்டப்பட்டுக் காணப்படுகின்றன.

அங்குள்ள பல பாரிய சந்தைக் கடைகளும் (Super Market) பெற்றோல் நிலையங்களும் ஈழத்தமிழர்களுக்குச் சொந்தமானவையாகக் காணப்படுகின்றன.

ஆனால் அமெரிக்காவில் பெரும்பான்மையினர் அரச,தனியார் துறைகளில்



தொழில் புரிபவர்களாக இருப்பதால் அங்கு நிலைமை வேறாகவே காணப்படுகின்றது.

ஈழ்த்தமிழர்கள் சிறுதொகையினரே அங்கு வாழ்வதும் ஒரு காரணமாக இருக்கலாம்.

பல்வேறுபட்ட சாதாரண தொழில் புரிபவர்கள் அநேகமாக ஒருநாளில் இரண்டு தொழில் செய்பவர்களாகவே காணப்படுகின்றனர்.

இதனால் வரும் வருமானத்தில் தமது குடும்பச் செலவு, பிள்ளைகளின் படிப்புச் செலவு போக எஞ்சியவற்றைத் தாங்கள் வாழும் நாட்டில் உள்ள தமிழர்கள் சார்பான சமூக நிறுவனங்களுக்கும் கோயில்களுக்கும் நன்கொடையாகவும் காணிக்கையாகவும் கொடுத்து வருகின்றார்கள்.

தமது நாட்டில் உள்ள உறவினர்களுக்கும் தம்மால் முடிந்த உதவிகளைச் செய்து வருகின்றார்கள். இவ்வாறான பொருளாதாரத் தேவைகளும் பொருளாதாரப் பற்றாக்குறைகளும் பல குடும்பங்களில் பிரச்சினைகளையும் ஏற்படுத்துகின்றன.

இதன் விளைவாக புலம்பெயர் ஈழத் தமிழர் குடும்பங்களில் மணவிலக்கு, தற்கொலை, மதுபானங்களுக்கு அடிமையாதல் போன்றவையும் அதிகரித்துச் செல்வதை அவதானிக்க முடிகிறது.

மேலும் சமூக, உளவியல் சார்ந்த வேற்றுமைகள், குடும்ப வாழ்வில் பல சிக்கல்களை ஏற்படுத்துவதையும் அவதானிக்க முடிகிறது. தொழில் வணிகத் தளத்தில் அதிக வருமானம் பெறும் நடுத்தர மேல்தட்டு வர்க்க ஈழத்தமிழர்கள் மத்தியில் பொதுவாக சுமுகமான வாழ்க்கையே காண முடிகிறது.

அவர்களின் பிள்ளைகளும் படித்துப் பட்டம் பெற்று அதனூடாக தமது இனத்தவர்களுடனும் ஏனைய சமூகத்தினருடனும் (Wider Community) இணைந்து ஒரு புதுச்சமூகச் சூழலை உருவாக்கி வாழ்வதனையும் காண முடிகிறது.

ஈழத்தமிழ் பெற்றோர்கள் தமக்கு எதுவிதப் பிரச்சினைகள் இருந்தாலும் தமது பிள்ளைகளைப் பல்வேறுபட்ட தொழில் சார் கல்வித் துறைகளில் படித்துப் பட்டம் பெறவைத்து மருத்துவர்கள், பொறியாளர்கள், சட்டத்தரணிகள், கணக்காளர்கள், கணனித் துறை விற்பன்னர்களாக ஆக்குவதில் பெரும் வெற்றி கண்டுள்ளார்கள்.

கல்வித் தகுதி பெற்ற இளந்தலைமுறையினர் அரச, தனியார் நிறுவனங்களில் உயரிய சம்பளத்தில் தொழில் புரிந்தும் மேற்படிப்புகளைத் தொடர்பவர்களாகவும் காணப்படுகின்றார்கள்.

மறுபுறத்தில் கல்வியில் நாட்டம் இல்லாத இளம் தலைமுறையினர் படிப்பை இடையில் நிறுத்திப் பல்வேறுபட்ட சமூக விரோதச் செயல்களிலும் குழுத் தகராறுகளிலும் கொலை முயற்சிகளிலும் ஈடுபடுவதும் சமூகச் சீரழிவாக இருந்து வருகிறது.

ஆனால் பெருமளவிலான இளம் தலைமுறையினர் தமது சமய, மொழி, கலை, கலாசாரம், பண்பாட்டு விழுமியங்களைத் தழுவியவர்களாகவும் தமது தாய், தந்தையருடனும் சமூகத்தினருடனும் இணைந்து மேற்படி விழுமியங்களைப் பேணிப் பாதுகாத்து வருபவர்களாகவும் காணப்படுகிறார்கள்.

அத்துடன் தாம் வாழும் நாட்டின் அரசியலிலும் தமது சொந்த நாட்டு அரசியலிலும் தீவிரமாகப் பங்கெடுத்து வருவதையும் காணமுடிகிறது.

தமிழ் ஈழ விடுதலையை முன்னெடுப்பதும் அந்த மக்களின் துயர்களைத் துடைப்பதுமாகத் தமது பாரிய பங்களிப்பைச் செய்து வருகின்றனர்.

நேர்காணல்கள், கருத்தரங்குகள், ஒன்றுகூடல்கள், பட்டறைகள் போன்றவற்றில் பங்கெடுத்து தமது கருத்துக்களைப் பகிர்ந்து ஈழத்தமிழர்களின் அரசியல் பிரச்சினைகளை முன்னெடுத்துச் செல்பவர்களாகவும் காணப்படுகின்றனர்.

அத்தோடு இலங்கை அரசு ஈழத் தமிழர்களுக்கு எதிராகச் செய்யும் இன அழிப்புகளுக்கு எதிராகத் துண்டு அறிக்கைகளை வெளியிட்டும் கண்டன ஆர்ப்பாட்டங்கள், புறக்கணிப்புகளை நடத்தியும் தொடர்ச்சியாகப் பிரசாரப் பணிகளை மேற்கொண்டும் வருகின்றனர்.

இவர்களுடைய செயற்பாடுகள், புலம்பெயர்ந்து வாழும் ஈழத்தமிழர்களுக்கும் தாயகத்தில் வாழும் ஈழத்தமிழர்களுக்கும் நம்பிக்கையையும் ஏற்படுத்தி வருகிறது என்பதில் ஐயம் இல்லை.

இவைதவிர பல இளம் தலைமுறையினர் ஈழத்திற்குச் சென்று அங்கும் பல்வேறுபட்ட சமூகம் வார்ந்த சேவைகளைச் செய்து வருவதையும் அவதானிக்க முடிகிறது.

அத்துடன் பெரும்பாலும் தமது உறவினர்கள், ஊரார்கள், இனத்தவர்களையே திருமணம் செய்து கொள்வதையும் அவதானிக்க முடிகின்றது.

எல்லாவற்றிற்கும் மேலாக போரினால் பாதிக்கப்பட்ட தமது இனத்தவர்களைத் திருமணம் செய்து அவர்களுக்கு வாழ்வு கொடுப்பது மிகவும் முற்போக்கான விடயமாகக் காணப்படுகிறது.

இவ்வாறான நிலைமைகள் புலம்பெயர்ந்த ஈழத்தமிழர்களையும் தாயகத்தில் வாழும் ஈழத்தமிழர்களையும் அவர்களின் உறவு முறைகள் சமய, மொழி, கலை, பண்பாடு போன்ற அடையாளங்களை இணைக்கும் பாலமாகவும் அரசியலில் தமிழர் என்ற தேசிய அல்லது கூட்டு அடையாளத்தையும் (Collective Identities) பேணிப் பாதுகாத்து அதனைச் செயற்படுத்துபவர்களாகவும் இளம் தலைமுறையினர் காணப்படுகின்றனர்.

இருப்பினும் இளம் தலைமுறையினருள் குறிப்பிட்ட தொகையினர் ஆங்கிலக் கலாசாரத்திலும் அதன் விழுமியங்களிலும் கரைந்து போவதையும் மாற்று இனத்தவர்களைத் திருமணம் செய்து கொள்வதையும் காண முடிகிறது.

அவ்வாறான மாற்றங்கள் புலம்பெயர் தமிழர்களின் சமூக வாழ்வில் பாரிய தாக்கங்களையோ விளைவுகளையோ ஏற்படுத்தப்போவது இல்லை. (தொடரும்)

# தமிழகத்திலிருந்து அங்கொட லொக்காவின் வழிநடத்தல்கள்!

## வெளியாகியுள்ள திடுக்கிடும் தகவல்கள்

(கொழும்பு)

**அங்கொட லொக்கா என்ற மத்துமகே சந்தன லசந்த பண்டார என்ற பாதாள உலகக்குழுத் தலைவர் போலி கடவுச் சீட்டை பயன்படுத்தி கொழும்பில் இருந்து கடந்த 2017 ஆம் ஆண்டு சென்னை சென்றுள்ளார். கோயம்புத்தூரில் கடந்த ஜூலை 3 ஆம் திகதி அவர் உயிரிழக்கும் வரை இந்தியாவின் தமிழகத்தில் இருந்தவாறு வட்ஸ் அப் தொழில்நுட்பம் மூலம் இலங்கையில் உள்ள தனது குழுவை வழிநடத்தி வந்துள்ளதாகத் தெரியவந்துள்ளது.**

கொலைச் சம்பவம் தொடர்பாக அங்கொட லொக்கா கடந்த 2014 ஆம் ஆண்டு இலங்கை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டதுடன், பின்னர் பிணையில் சிறையில் இருந்து விடுதலையாகியுள்ளார்.

கொழும்பு உட்பட இலங்கையில் பல இடங்களில் நடந்த தொடர் கொலைகளுடன் சம்பந்தப்பட்டுள்ள அவர், போலிக் கடவுச்சீட்டைப் பயன்படுத்தி வெளிநாட்டுக்குத் தப்பிச் சென்றார். அங்கொட லொக்காவை கைது செய்ய இலங்கை பொலிஸார் சர்வதேச பொலிஸாரின் ஊடாகச் சிவப்பு அறிக்கை பிடியாணையைப் பிறப்பித்திருந்தனர்.

எனினும் இலங்கை பொலிஸாரினால் அவர் எங்கு இருக்கின்றார் என்பதை கண்டுபிடிக்க முடியாமல் போனதாக இலங்கை பொலிஸ் அதிகாரி ஒருவர் இந்திய ஊடகம் ஒன்றிடம் கூறியுள்ளார்.

ஹங்வெல்ல பிரதேசத்தில் கடந்த 2019 ஆம் ஆண்டு செப்டெம்பர் 25 ஆம் திகதி அங்கொட லொக்காவின் குழுவினர் கொண்ட தாரக என்பவரைச் சுட்டுக்கொன்றனர்.

இந்தக் கொலையில் அங்கொட லொக்காவே பிரதான சந்தேக நபர் என பொலிஸார் தெரிவித்தனர். வட்ஸ் அப் அழைப்பு மூலம் இந்தக்கொலைக்கான தகவல்களை அங்கொட லொக்கா வழங்கியுள்ளார்.



அதேவேளை அங்கொட லொக்காவின் மரணத்துடன் எவருக்காவது தொடர்பு இருக்கின்றதா? என்பதை அறிய இந்தியப் புலனாய்வுத் துறையினர், கொழும்பில் உள்ள இந்தியத் துாதரகம் ஊடாக விபரங்களைச் சேகரித்து வருகின்றனர்.

இந்தச் சம்பவம் குறித்து தாம் உன்னிப்பாக அவதானித்து வருவதாக மேல் மாகாணத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

1985 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 13 ஆம் திகதி பிறந்த அங்கொட லொக்கா, வைத்திய சாலை வீதி முல்லேரியாவ அங்கொடை என்ற முகவரியில் வசித்து வந்துள்ளார்.

களனி பிரதேசத்தில் கடந்த 2014 ஆம் ஆண்டு ஏப்ரல் 7 ஆம் திகதி தமக்கு எதிரான குழுவின் உறுப்பினரை சுட்டுக் கொன்றார். சம்பவம் தொடர்பாகக் கைது செய்யப்பட்ட அவர் பிணையில் விடுதலையானார்.

2011 ஆம் ஆண்டு ஜனவரி 18 ஆம் திகதி வெல்லம்பிட்டி பிரதேசத்தில் நடந்த கொலை, 2015 ஆம் ஆண்டு செப்டெம்பர் 23 ஆம் திகதி நவகமுவ பிரதேசத்தில் நடந்த கொலை ஆகியவற்றுடன் அங்கொட லொக்கா சம்பந்தப்பட்டுள்ளார்.

அங்கொட லொக்கா மற்றும் அவரது குழுவினர் ச்மயன் என்ற அருணா உதயநத பத்திரன என்ற நபரைக் கொலை செய்தனர்.

கொட்டாவ பிரதேசத்தில் கடந்த 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30 ஆம் திகதி அங்கொட லொக்காவின் குழுவினர் மஞ்சுளா சந்துனி அபேரத்ன என்ற பெண்ணைச் சுட்டுக் கொன்றனர். (ஜ-4)

# பாலித தெவரப்பெரும மீது சட்டவிரோத தேர்தல் பிரசார முறைப்பாடு



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் களுத்துறை மாவட்ட வேட்பாளர் பாலித தெவரப்பெரும மீது சட்டவிரோத பிரசாரம் செய்ததாக முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

பாராளுமன்றத் தேர்தல் பிரசாரப் பணிகளில் நிறைவடைந்த அமைதிக் கால கட்டத்தில் பாலித தெவரப்பெரும சட்டவிரோதமாக தேர்தல் பிரசாரப் பணிகளில் ஈடுபட்டார் என முறைப்பாடு கிடைக்கப் பெற்றுள்ளதாக தேர்தல் வன்முறை கண்காணிக்கும் மையம் தெரிவித்துள்ளது.

தேர்தலுக்கு முன்னர் அறிவிக்கப்பட்ட அமைதிக் கால கட்டத்தில் சட்டவிரோத பிரசாரத்தை மேற்கொண்டதால், தெவரப்பெருமவின் நடவடிக்கைகள் தேர்தல் சட்டங்களை மீறுவதாக அமைந்துள்ளதாக தேர்தல் வன்முறை மையத்தின் தேசிய ஒருங்கிணைப்பாளர் மஞ்சுளா கஜநாயக்க குறிப்பிட்டுள்ளார். (ஜ-4)

# வாகன விபத்துக்களில் மூவர் பலி!

(கொழும்பு)

நாட்டின் சில பிரதேசங்களில் இடம்பெற்ற வாகன விபத்துக்களில் மூன்று பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குருநாகல் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட குருநாகலை வீதியின் படகமுவ பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் நபரொருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு குருநாகலை நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த ஆட்டோ வேகக்கட்டுப்பாட்டை இழந்து எதிரே வந்த லொறியொன்றில் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

குறித்த விபத்தில் ஆட்டோ சாரதி மற்றும் பின்னால் பயணித்த நபரொருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் அதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதேவேளை, கிரிந்திவெல பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தேக்கவத்த குட்டிவில வீதியின் கல்கடுவ பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் நபரொருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த விபத்தில் 44 வயதுடைய வேகொவ்வ, மினுவாங்கொட பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதேவேளை, சிலாவத்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அரிப்பு நானாட்டான் வீதியில் இடம்பெற்ற விபத்தொன்றில் நபரொருவர் உயிரிழந்துள்ளார். நானாட்டான் நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து வீதியில் கவிழ்ந்ததில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. (ஜ-4)

# கடந்த கால தவறுகளில் இருந்து இன்னும் பாடம் கற்காத மகிந்த

## வசந்த பண்டார குற்றச்சாட்டு

(கொழும்பு)

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ கடந்த கால தவறுகளில் இருந்து பாடம் கற்கவில்லை என சிங்கள தேசிய அமைப்புகள் ஒன்றியத்தின் உறுப்பினர் வசந்த பண்டார தெரிவித்துள்ளார்.

மக்கள் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தை வழங்கவில்லை என்றால் அதனை நாடாளுமன்றத்தில் பெற்றுக் கொள்ளப் போவதாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ கூறியிருந்தமை தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

மேலும் கூறியதாவது, இந்த கருத்தை பிரதமர் உண்மையாகக் கூறியிருந்தால், நாங்கள் மிகவும் கவலையடைவோம்.

இதன் மூலம் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு வாக்களித்த மக்கள் ஏமாற்றப்படுவார்கள். மக்கள் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை வழங்காவிட்டால் தாம் அதனை உருவாக்கிக்கொள்ளப் போவதாக கூறியிருப்பது பாரதூரமான கருத்து.

கடந்த கால தவறுகளில் இருந்து பிரதமர் பாடம் கற்கவில்லை என நாங்கள் எண்ணுகிறோம். ரணில், சஜித், சம்பந்தன் எந்த அணியின் உதவியை பெற்று தேசிய அரசாங்கத்தை அமைத்து மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தை ஏற்படுத்திக்கொண்டாலும் அந்தப் பலம் இறுதியில் பிரிவினைவாத சக்திகளின் தேவைக்காக பயன்படுத்தப்படும் என்பதில் சந்தேகமில்லை.



மகிந்த ராஜபக்ஷ மக்களிடம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை கோரினால், அதனை கொண்டு செய்யப் போவது என்ன என்பதை கூறவில்லை.

தற்போது மக்கள் மீது குற்றம் சுமத்தி விட்டு, எதிரியிடம் இரையாவது பாரதூரமான தவறு என அவர் தெரிவித்துள்ளார். (ஜ-4)

# குருநாகல் மேயர் உட்பட ஐவரை கைது செய்ய உத்தரவு

(கொழும்பு)

தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த புவனேகபாகு மன்னனின் அரச மண்டபம் உடைக்கப்பட்ட விவகாரத்தில் குருநாகல் பிரதேச மேயர், நகர சபை ஆணையாளர் மற்றும் நகர சபையின் பிரதான பொறியியலாளர் உட்பட மேலும் இருவரைக் கைது செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த உத்தரவினை சட்டமா அதிபர் தபுல டிலிவேர பிரதி பொலிஸ்மா அதிபருக்கு பிறப்பித்துள்ளார். (ஜ-4)

# கொழும்பில் அதிகமான முறைப்பாடுகள்

(கொழும்பு)

பொதுத்தேர்தலை ஜனநாயக முறையிலும், பாதுகாப்பான முறையிலும் நடத்துவதற்கு தேசிய தேர்தல்கள் ஆணைக் குழு பொலிஸ் ஆணைக்குழுவுக்கு வழங்கிய பொறுப்பினை முறையாக நிறைவேற்றியுள்ளோம். தேர்தல் இடம்பெற்ற தினத்தில் அதிகமான தேர்தல் முறைப்பாடுகள் கொழும்பு மாவட்டத்திலும், குறைவான முறைப்பாடுகள் மாத்தளை மாவட்டத்திலும் பதிவாகியுள்ளன.

மன்னார் மாவட்டத்தில் எவ்வித முறைப்பாடுகளும் இடம் பெறவில்லை என தேர்தல்களுக்கு பொறுப்பான பொலிஸ் அதிகாரியான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்தார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவில் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், 9வது பாராளுமன்றத்தை தெரிவு செய்வதற்கான பொதுத் தேர்தல் அமைதியான முறையில் இடம்பெற்று முடிந்துள்ளன. கொலை, படுகாயம், மற்றும் தீ விபத்து என பாரதூரமான சம்பவங்கள் ஏதும் பதிவாகவில்லை. 2015ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்த பொதுத்தேர்தல் சிறந்த முறையில் இடம்பெற்றுள்ளன. (ஜ-4)

# சமூக ஊடகங்களை தவறாகப் பயன்படுத்தியமை தொடர்பாக 4 ஆயிரத்து 316 முறைப்பாடுகள்

(கொழும்பு)

பொதுத் தேர்தல்களுக்காக சமூக ஊடகங்களை, குறிப்பாக முகப்புத்தகத்தை தவறாகப் பயன்படுத்தியமை தொடர்பாக கிட்டத்தட்ட 4316 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இதனையடுத்து முகப்புத்தகத்தில் சட்டவிரோத பிரசாரங்களை மேற்கொண்ட 60 நபர்கள் மற்றும் பக்கங்களை தடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இதேநேரம், பொதுத் தேர்தல்களுக்கு பேஸ்புக்கை தவறாகப் பயன்படுத்தியதாக மொத்தம் 2000 முறைப்பாடுகள் ஏற்கனவே தேர்தலுக்கு முன்னர் பெறப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

# சுயேட்சைக்குழு வேட்பாளர் மீது தாக்குதல்

(திருமலை)

திருகோணமலை - கிண்ணியா, குட்டித்தீவு பகுதியில் சுயேட்சைக்குழு வேட்பாளர் ஒருவர் மீது அடையாளம் தெரியாதோர் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணியளவில் இந்த தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இரும்புக் கம்பிகளால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்..

காயமடைந்த வேட்பாளர் கிண்ணியா தள வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

சம்பவம் தொடர்பில் இது வரை எவரும் கைது செய்யப்படவில்லை என்பதுடன், மேலதிக விசாரணைகளை கிண்ணியா பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ஜ-4)

# 43 வருடங்களின் பின்னர் பொதுத் தேர்தல் வரலாற்றில் ஏற்பட்ட மாற்றம்

(கொழும்பு)

1977 ஆம் ஆண்டிற்கு பின்னர் மூன்றாவது முறையாக குறைந்த வாக்குப் பதிவினை நேற்றுமுன்தினம் நடைபெற்ற தேர்தலில் பதிவு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று நடைபெற்ற தேர்தலில் முழுமையான வாக்குகள் 70 வீதமே பதிவாகியுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.



தேர்தல் வாக்களிப்பு நிறைவடைந்த பின்னர் நேற்று முன்தினம் இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (ஜ-4)

# கட்சி ஆதரவாளர்கள் மோதல் நால்வர் வைத்தியசாலையில்

(கொழும்பு)

இரு கட்சிகளின் ஆதரவாளர்களுக்கிடையே ஏற்பட்ட மோதல் சம்பவத்தில் நால்வர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள சம்பவமொன்று நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மீராவோடை பகுதியில் வைத்து இரு அரசியல் கட்சிகளின் ஆதரவாளர்களுக்கிடையே இம்மோதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தடிகளைக் கொண்டு தாக்குதல் நடத்தப்பட்ட இச்சம்பவத்தில் நால்வர் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் அதில் இருவர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு இடமாற்றப்பட்டுள்ளனர். இத்தாக்குதல் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஜ-4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2078

**அமல்ராஜ்**



அம்மாவை மதிக்கத் தெரிந்தவன் தான் தன் மனைவியையும் மதிக்கிறான்... தன் மனைவியை மதிக்கத் தெரிந்தவன் தான் இந்தச்சமூகத்தில் மற்ற பெண்களையும் மதிக்கிறான்..!

**நிமல்சன்**

எனக்கு ஒரு டவுட்டு... வருமானத்திற்கு அதிகமாக சொத்து இருந்தால் வழக்குப் போடுவாங்களாம்... அப்ப வருமானத்திற்கு அதிகமா கடன் இருந்தா அடைச்சுடுவாங்களா?




**விதுர்சனா**



யாரும் தன் முதல் காதலை மறப்பதில்லை. அப்படி இருந்தும் முதல் காதலை மறக்கும் அளவிற்கு ஒரு பெண் ஒரு ஆனுக்கு மனைவியாக அமைந்தால் அந்த ஆணை விட அதிர்ஷ்டசாலி யாரும் இருக்க முடியாது...

**ஜனனி**



வாழ்க்கை என்பது நீ எதிர்பார்ப்பது போல் இல்லை... ஆனால் நீ நினைத்தபடி மாற்ற முடியும் நீ முயற்சித்தால் மட்டுமே...

**கௌதமி**

காதலித்துப் பார் நீ அழகாவது உனக்கு மட்டும் தெரியும்... பின்பு நீ அசிங்கப் படுவது ஊருக்கே தெரியும்...



**சாந்தினி**

எல்லா பெண்களுக்கும் கிடைத்து விடுவதில்லை... எந்த சூழ்நிலையிலும் உன்னை விட்டுக்கொடுக்க மாட்டேன்... விட்டுச்செல்லவும் மாட்டேன் என்று இருக்குமளவிற்கு ஓர் ஆண்...



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# பசில் கொலைச் சதி என்பது தேர்தல் குண்டு!

## ஒப்புக்கொண்டார் பிரதமர்

(கொழும்பு)

**பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்ஷவை கொலை செய்ய சதித்திட்டம் தீட்டப்பட்டதாக வெளியான தகவல் தேர்தல் குண்டு என்பதை பிரதமர் மகிந்தராஜபக்ஷ ஒப்புக் கொண்டுள்ளார்.**



முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், மாத்தறை மாவட்ட வேட்பாளருமான லக்ஷ்மன் யாபா அபேவர்தன அண்மையில் ஊடக சந்திப் பொன்றில் பசில் மீதான கொலை சதித்திட்டம் குறித்த தகவல்களை வெளியிட்டு பர பரப்பை ஏற்படுத்தியிருந் தார்.

இது தொடர்பாக கேள்வி எழுப்பிய போது, கருத்து வெளி யிட்டுள்ள பிரதமர் மகிந்த ராஜ பக்ஷ, லக்ஷ்மன் யாப்பா மாத் தறை மாவட்டத்தில் தோல்வி யடைந்து விடுவார் என்ற அச் சத்தினால் இப்படியான போலித்



தகவலை வெளியிட்டிருக்க லாம் என்று கூறியுள்ளார். (ஜ-4)



# ஆன்மீகம்

## மனம் நல்ல வேலைக்காரன் ஆனால் மோசமான எஜமானன்!



**'உண்பது நாழி உடுப்பது நான்கு முழம் எண்பது கோடி நினைந்து எண்ணுவன' என் கிறாள் தமிழ் மூதாட்டி ஔவை. உணவும், உடையும், உறைவிடமும், வாழ்க்கை வசதி களும் நிறைவாக அமைந்து விட்டாலும் நெஞ்சம் தடுமாறுகிறது. இன்னும் அது வேண் டும், இது வேண்டும், இன்னும் வேண்டும் என அலைபாய்கின்றது. 'மனம் ஒரு குரங்கு' என்பது தானே மகான்களின் வார்த்தை.ஆசை ப்படும் மனம் கேட்பதையெல்லாம் நாம் நிறை வேற்றி விடாமல் அறிவின் துணை கொண்டு அதனை ஆட்சி செய்ய வேண்டும்.**

**வீதி ஓரத்தில் தள்ளுவண்டியில் வாழைப் பழங்கள் வைத்து வியாபாரம் செய்கின்றார் ஒருவர். நாலைந்து நண்பர்கள் ஒரு சேர வந்து பழங்கள் வாங்கி உரிய பணத்தைக் கொடுத்து விட்டுத் திரும்பிச் செல்கின்றனர். ஓய்வாகச் சற்று ஓரத்தில் ஒதுங்கி உட்காருகிறார் வியா பாரி. தூரத்தில் இருந்து வாழைப்பழ வண் டியைப் பார்த்த மூன்று மாடுகள் 'விறுவிறு' என்று வேகமாக வந்து 'விடுவிடு' என்று பழங்களைக் கபளீகரம் செய்ய 'அடிஅடி' என்று கம்பால் அடிக்கிறார் வியாபாரி. விலகிய மாடுகள் சில விநாடிகள் கழித்து மீண்டும் வந்து பழங்களை விழுங்க ஓங்கி அடிக்கிறார் வியாபாரி. ஓரம் கட்டுகின்றன மாடுகள். அடிக்கடி இப்படி 'அடிசம்பவம்' நிகழ என்ன காரணம்? மாடுகளுக்கு வாழைப்பழங்களைச் சாப்பிட வேண்டும் என்னும் ஆசை பிறக்கிறது. நாவில் நீர் சுரக்கிறது.**

**கண் வண்டி இருக்கும் இடத்தைப் பார்க் கிறது. கால் அவ்விடத்தை நோக்கிப் போகி றது. நாமும் பார்க்கிறோம். நமக்கும் பழம் சாப்பிட ஆசை வருகின்றது. ஆனால், இந்தப் பழம் நமக்கு நல்லதா, நீரிழிவு நோய் உள்ள நாம் சாப்பிடலாமா, அதிகப் பழங்கள் வாங்கி னால் அழுகி விடுமே, விலை வேறு அதிகமாக இருக்கிறதே, அவ்வளவு பணம் இதற்கு செல விடுவது அவசியமா? என பல கேள்விகளை நம் அறிவு கேட்ட பிறகே அக்காரியத்தில் ஏற்ற வண்ணம் நாம் செயற்படுகிறோம்.**

**வாழைப் பழங்கள் வைத்திருக்கும் தள்ளு வண்டியை அப்படியே தள்ளிக்கொண்டு போய்விடலாம் என்று கூட சிலருக்கு மனதில் தோன்றும். அதை அப் படியே செயற்படுத்தினால் அவர்கள் கதி 'அதோ கதி' தானே! கவிஞர் வாலி அற்புதமாகச் சொல்கிறார் :**

**கண் போன போக்கிலே கால் போகலாமா?**

**கால் போன போக்கிலே மனம் போகலாமா?**

**மனம் போன போக்கிலே மனிதன் போகலாமா?**

**மனம் போகும் வழியிலேயே நாமும் சென்றால் மாடுகளுக்குக் கிடைத்த அடி தான் நமக்கும் கிடைக்கும். அறிவு என்னும் சாட்டை கொண்டு பாய்ந்தோடும் மனக்குதி ரையை உரிய பாதையில் செலுத்தி னால் நம் இலட்சியம் நிச்சயம் வெற்றி பெறும். மெய், வாய், கண், மூக்கு, காது என ஐம்பொறிகளையும் நம் மனம் தான் நல்ல முறையில் பாது காக்க வேண்டும்.**

**விரசமான பாடல்களைக் கேட்டு களியாட்டம் போட்டு மது குடித்து சூதாட்டம் ஆடி விலை மகளிரோடு உறவு கொள்ள ஐம்பொறிகளும் ஆசைப்படும். அந்த ஆசைக்கு நம் மனமாகிய அறிவு இணங்கி விட் டால் நாம் ஈடேறுவது எப்படி? வெளி ச்சத்தைப் பார்த்து அதன் ஒளியில் மயங்கி விட்டில் பூச்சி அழிகிறது. கண் நுகர்ச்சியால் பூச்சி அழியலாம். புத்தி உள்ள மனிதன் அழியலாமா?**

**(தொடரும்)**

# செய்தித்துளிகள்

## களனி ரயில் சேவை தாமதம்

(கொழும்பு)

புகையிரத வழித்தடத்தில் மரங்கள் முறிந்து வீழ்ந்துள் ளதன் காரணமாக, களனி வெளி வழித்தடத்திலான புகை யிரத சேவையில் தாமதம் ஏற்பட்டுள்ளது என புகையிரத கட் டுப்பாட்டறை அறிவித்துள்ளது.

கொஸ்கம - வக, மீகொடை -ஹோமாகம, நுகேகொடை - நாரஹேன்பிட்டி ஆகிய பிரதேசங்களுக்கு இடைப் பட்ட புகையிரத வழித்தடங் களில் இவ்வாறு மரம் முறி ந்து வீழ்ந்துள்ளதாக தெரி விக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

## வாக்களிக்கச் சென்ற பெண் உயிரிழப்பு

(கொழும்பு)

மினுவாங்கொடை - அலு தபொலவில் உள்ள வலகம்பா மகா வித்தியாலயத்தில் வாக்களிக்கச் சென்ற பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் 69 வயதுடைய பெண் ஒருவரே உயிரிழந் துள்ளதாக மினுவாங்கொட பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் மினு வங்கொட அலுதபபொல பகுதியில் வசிக்கும் பெண் என அடையாளம் காணப்பட் டுள்ளார்.

அவர் உடல்நலக்குறை வால் உயிரிழந்துள்ளமை விசாரணையில் தெரிய வந் துள்ளதாக பொலிஸார் தெரி வித்துள்ளனர். (ஜ-4)

## நாட்டின் சில பகுதிகளில் மின்தடை

(கொழும்பு)

நாட்டின் சில பகுதிகளில் பலத்த மழை காரணமாக மின்சாரம் தடைப்பட்டுள் ளதாக மின்சக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி,அவிசாவளை, பாதுக்க,ஹோமாகம, களுத் துறை, இரத்தினபுரி மற்றும் நுவரெலியா பகுதிகளிலே மின்சாரத்தடை ஏற்பட்டு ள்ளது. மின்சாரத் தடையை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

## நாட்டில் இதுவரை ஒரு இலட்சத்து 66 ஆயிரத்து 737 பி.சி.ஆர்.பரிசோதனைகள்

(கொழும்பு)

நாட்டில் இதுவரை ஒரு இலட்சத்து 66 ஆயிரத்து 737 பி.சி.ஆர்.சோதனைகள் முன் னெடுக்கப்பட்டுள்ளதாக கொரோனா வைரஸ் தொற்றை கட்டுப்படுத் தும் தேசிய மையம் தெரிவித்து ள்ளது. அந்த வகையில் நேற்று முன்தினம் புதன்கிழமை மாத்திரம் 880 பி.சி.ஆர். சோதனைகள் முன்னெடுக்க ப்பட்டுள்ளதாகவும் தேசிய மையம் சுட்டிக்காட்டியுள் ளது. (ஜ-4)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 90 | 100 |
| உருளைக்கிழங்கு | 140 | 130 | 140 |
| பச்சைமிளகாய் | 200 | 200 | 300 |
| தக்காளி | 100 | 80 | 80. |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 120 | 80 |
| கோவா | 120 | 120 | 140 |
| கரட் | 100 | 140 | 200 |
| பூசணி | 50 | 60 | 60 |
| புடோல் | 60 | 60 | 80 |
| வாழைக்காய் | 140 | 120 | 120 |
| சின்ன வெங்காயம் | 160 | 130 | 120 |
| பெரிய வெங்காயம் | 80 | 120 | 120 |
| பாகற்காய் | 200 | 160 | 200 |
| வெண்டிக்காய் | 80 | 70 | 80 |
| கருணைக் கிழங்கு | 180 | 130 | 160 |
| பயற்றங்காய் | 60 | 100 | 80 |
| லீக்ஸ் | 100 | 100 | 120 |
| பீற்றூட் | 100 | 100 | 120 |
| கறிமிளகாய் | 300 | 300 | 400 |
| முருங்கைக்காய் | 120 | 150 | 120 |
| போஞ்சி | 150 | 250 | 280 |
| கத்தரிதம்புள்ள | 100 | 100 | 100 |
| கீரை - 1 பிடி | 30 | 30 | 40 |
| தேசிக்காய் | 150 | 150 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 50 | 60-80 |
| இராசவள்ளி | --- | --- | --- |
| வெங்காயப்பூ | 200 | 200 | 200 |
| முள்ளங்கி | 80 | 100 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 30 |
| வல்லாரை | 15 | 40 | 30 |
| ஈரப்பலா | 50 | 80 | 50 |



# சிறுவர் அரங்கம்

## முதல் வழக்கில் வெற்றி



ஒருநாள் சக்கரவர்த்தி அக்பர் அதிகாரிகளிடம் நமது நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைகள் ஒழுங்காக நடைபெறுகின்றனவா? என்று கேட்டார்.

பிரபு, நமது நீதிபதி ஏழை, பணக்காரன் என்ற பாகுபாடு பார்க்காமல் நியாயமாக நீதி வழங்குகிறார்! என்று ஒரு அதிகாரி நீதிபதியைப் புகழ்ந்தார்.

பீர்பால் மட்டும் நமது வழக்கு விசாரணைகளும், நீதி வழங்குதலும் திருப்திகரமாக உள்ளது எனக் கூற இயலாது என்றார்.

அச்சமயத்தில் வாயிற்காவலன் உள்ளே நுழைந்து, பிரபு, ஒரு கிழவரும், இளைஞரும் நியாயம் கேட்டு வந்திருக்கிறார்கள் என்றான். அக்பர், அவர்களை வரச்சொல் என்றார்.

ஒரு கிழவரும், ஓர் இளைஞனும் உள்ளே நுழைந்து சக்கரவர்த்தியை வணங்கினர். பிரபு, என் பெயர் அப்துல் ரஹ்மான். நான்ஒரு சட்ட நிபுணன். இவன் என் மாணவன்பிரமோத் பிஹாரி. இவன் மீதுதான் நான் குற்றம் சாட்ட வந்துள்ளேன்.

இவன் என்னிடம் மாணவனாக சேரும்போது, எனக்கு மாதம் மூன்று பொற்காசு குரு தட்சணை தர வேண்டும், ஓராண்டு காலம் சட்டம் படிக்க வேண்டும் என்று கூறினேன்.

இவன் தான் ஒரு பரம ஏழை, ஆதலால் படிப்பு முடித்து வழக்கறிஞனாகி எடுத்து வாதிடும் முதல் வழக்கில் வெற்றி பெற்று, பிறகு ஒட்டு மொத்தமாக முப்பத்தாறு பொற்காசுகள் சேர்த்து தருவதாக எனக்கு வாக்களித்தான். அவன் அளித்த வாக்கை நம்பி ஓராண்டு காலம் இவனுக்கு கற்பித்தேன்.

சரி, இப்போது பணம் தராமல் ஏமாற்றுகிறானா? என்று அக்பர் கேட்டார். இல்லை பிரபு, இவன் திடீரென வழக்கறிஞனாகப் பணி புரியும் யோசனையை கை விட்டு விட்டான்.

உடனே அக்பர் அந்த இளைஞனை நோக்கி, எதற்காக உன்னுடைய உத்தேசத்தை நீ மாற்றிக் கொண்டாய்? என்று கேட்டார்.

பிரபு, என் சித்தப்பா இறக்கும் முன் அவர் தன்னுடைய உயிலில் அவருடைய அனைத்து சொத்துக்களுக்கும் என்னை வாரிசாக்கி விட்டார். இப்போது நான் லட்சாதிபதி. அதனால் எந்த வேலையும் செய்யத் தேவையில்லை, என்றான்.

அப்படியானால் இருவருடைய தட்சணை என்ன ஆவது? என்று கேட்டார் அக்பர். நான் கொடுத்த வாக்கைக் காப்பாற்று வேன். எனக்கு என்று வழக்கறிஞனாக ஆக வேண்டும் என்று தோன்றுகிறதோ, அப்போது தான் தட்சணையும் தரமுடியும் என்றான்.

உடனே நீதிபதி கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவேன் என்று இந்த தர்பாரில் அவன் உறுதி அளித்துள்ளான். அவன் சொல்லை ஏற்றுக் கொண்டு, அதுவரை குரு காத்திருக்க வேண்டும். இதுவே என் தீர்ப்பு என்றார்.

இதை எதிர்பார்க்காத கிழவர் ஏமாற்றத்தினாலும், வருத்தத்தினாலும் உடல் குறுகிப் போனார்.

ஆனால் பீர்பால் மட்டும் தீர்ப்பைப் பாராட்டாமல் மிகவும் மௌனமாக இருந்ததை கவனித்த அக்பர், இந்தத் தீர்ப்பை மறு ஆய்வு செய்யுமாறு பீர்பாலிடம் கூறினார். புத்திசாலியான பீர்பால் சரியான தீர்ப்பு வழங்குவார் எனக் கிழவர் உறுதியாக நம்பினார்.

பீர்பாலும், சட்டப்படி இளைஞனின் தரப்பில்தான் நியாயம் உள்ளது என்றார். உடனே செய்வதறியாது அந்த கிழவர், பீர்பாலையும், அக்பரையும் வணங்கிவிட்டு தள்ளாடித் தள்ளாடி வெளியேற முற்பட்டார்.

இளைஞன் பிஹாரி வெற்றி பெருமிதத்துடன் வெளியேற முற்படும்பொழுது, திடீரென பீர்பால் பிஹாரியை அழைத்து, பீர்பால், உன்னுடைய முதல் வழக்கில் நீயே வழக்கறிஞராக இருந்து வாதாடி அதில் வெற்றி பெற்று விட்டாய் அல்லவா என்று கேட்டார்.

பிஹாரி, ஆம் ஐயா, என்றான். அப்படியானால் நீ வழக்கறிஞராக இருந்து வெற்றி பெற்ற முதல் வழக்கு இது,நீ வாக்களித்தபடியே, குரு தட்சணையை உன் குருவிற்கு இப்போதே இங்கேயே கொடுத்து விடு என்றார்.

சபையில் இருந்த அனைவரும் பீர்பால் கூறிய தீர்ப்பைக் கேட்டு கைதட்டி ஆர்ப்பரித்தனர். கிழவர் பீர்பாலுக்கு மனமாற நன்றிகூற, அக்பரும் மனம் மகிழ்ந்து பீர்பாலை தழுவிக் கொண்டார்.

# ராஜராஜ சோழப்பேரரசின் வரலாறு

## கண்ணுக்குக் கண்; பல்லுக்குப் பல்

29

### பார்த்திவசேகரபுரம் சாலை



பாலக்காட்டுக்கு அருகே பரதப்புழா ஆற்றில் பொன்னானி துறைமுகம் உள்ளது. இதற்கு அருகே உள்ள திருநாவாய் என்கிற இடத்தில் பன்னிரெண்டு வருடங்களுக்கு ஒருமுறை மகாமகப் போட்டி நடைபெற்று வந்தது.

அதில் சேர மன்னர் ஒரு போட்டி வைப்பார். அதில் வெற்றி பெறுபவர் ஆட்சியில் அமரலாம் என்கிற முடியாட்சிக்கு எதிரான ஒரு ஜனநாயகப் போக்கு நிலவியது.

இதற்கான போட்டியில் ராஜராஜன் வென்றிருக்கலாம் என்கிற ஒரு கருத்து உண்டு. காரணம், திருநாவாய்க்கு மறுகரையில் தான் காந்தளூர்ச்சாலை இருந்தது.

சேரர்கள் வைக்கிற மன்னர் தேர்ந்தெடுப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து அந்த நடைமுறையை ஒழித்துக் கட்ட ராஜராஜன் போரில் இறங்கியிருக்கக் கூடும்.

நம் வரலாற்றாசிரியர்கள் மட்டுமல்லாமல் கேரள வரலாற்றாசிரியர்களும் இதுகுறித்து நிறைய கருத்துக்கள் தெரிவித்திருக்கிறார்கள். திருவனந்தபுரம் அருகே விழிஞம் பக்கத்தில் காந்தளூர் என்கிற பகுதி இருக்கிறது.

அங்கு களியக்காவிளை தாண்டி உதியன் பேரூர் அருகில் பூவாறு செல்லும் பாதையில் காந்தளூர்ச் சாலை உள்ளது. இப்பகுதி தான் ராஜராஜன் வென்ற இடம் என்று கேரளப் பின்னணியில் ஒரு முடிவைச் சொல்கின்றார்கள்.

இப்படி காந்தளூர்ச் சாலை எந்த இடத்தில் உள்ளது என்கிற சர்ச்சை இன்னும் ஓயவில்லை.

கேரளத்தில் தாந்த்ரீக முறையிலான பூசைகள் கோயில்களின் நடைமுறையில் இருந்தன. ஆனால், ராஜராஜன் காலத்தில் தமிழகத்தில் ஆகமமுறை பூசை என்னும் நடைமுறை பின்பற்றப்பட்டு வந்தது.

கேரளாவில் தாந்த்ரீக வேதமான அதர்வண வேதத்தைக் கற்பிக்கும் வேத பாடசாலைகள் நிறைய இருந்தன.

தென்திருவிதாங்கூரில் இருந்த பார்த்திவசேகரபுரம், காந்தளூர்ச் சாலையைவிட தொன்மையான நடைமுறைகளைப் பின்பற்றி வந்தது.

தாந்த்ரீக முறை நடைமுறையில் இல்லாத பகுதிகளில் அதர்வண வேதம் கற்பிக்கப்படுவதில்லை என்கிற நடைமுறை அங்கு இருந்தது. இது போன்ற பாடசாலைகளில் மாணவர்களுக்கு ஆயுதப் பயிற்சியும் அளிக்கப்பட்டு வந்தன.

இது, சோழர்களுக்கு ஏதோ ஒருவகையில் வில்லங்கமாக இருந்திருக்கிறது. குறிப்பாக அதன் செயற்பாடுகள் ராஜராஜனின் ஆட்சிமுறைக்கு எதிரானதாக இருந்தது.

அதர்வண வேதத்தைக் கற்பித்த பாடசாலைகள் மிரட்டப்பட்டன. ஆகம முறைக்கு எதிரான வழிபாட்டு முறை தமிழக எல்லையில் எங்குமே இருக்கக் கூடாது என்று எண்ணினார்.

ஆனால்,சேர நாட்டில் அவருக்குப் பிடிக்காத முறையில் வழிபாடுகளும் பாடசாலைகளும் நடைபெற்று வந்ததால் தன் கோபத்தைப் போராக மாற்றினார். (தொடரும்)

காலத்தைப் போல அருமையான அரசன் யாருமில்லை. நூற்றாண்டுகள் கணக்கில் நமக்கு முன்னோர்கள் கூறும் புத்திமதியை ஒரு வினாடியில் அது கூறிவிடும். - ஸ்விட்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களே! இன உணர்வோடு செயற்படுங்கள்

பாராளுமன்றத் தேர்தல் நிறைவுற்று வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட்டிருக்கின்ற வேளையில்,

வடக்கு கிழக்கு மாகாணத்தின் தேர்தல் முடிவுகள் எவ்வாறாக உள்ளன என்பது அறியப்பட்டுள்ளது.

தேர்தல் முடிவுகள் எதைக் குறித்து நிற்கிறது என்ற ஆய்வுகள் ஒருபுறமிருக்க,

வடக்கு கிழக்கு தமிழர் தாயகத்தில் வெற்றி பெற்ற தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் தமிழ் மக்கள் சார்பில் முன்வைக்கக்கூடிய கோரிக்கையானது;

அன்புக்குரிய தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களே! நீங்கள் வெவ்வேறு கட்சிகளினூடாகத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ளீர்கள்.

உங்கள் வெற்றி என்பது தமிழ் மக்களின் வாக்குகள் மூலமாகக் கிடைக்கப் பெற்றுள்ளது.

எனவே நீங்கள் போட்டியிட்ட கட்சிகள் வித்தியாசமானவையேயன்றி, வாக்குகள் அத்தனையும் தமிழ் மக்களினுடையது என்பதை நீங்கள் ஒருபோதும் மறக்க மாட்டீர்கள் என்ற நம்பிக்கை உண்டு.

தவிர, நீங்கள் தமிழர்கள். ஆக, எம் தமிழினத்தின் நலனுக்காக உங்கள் பாராளுமன்றப் பதவியைப் பயன்படுத்த வேண்டும் என்பதே நம் தாழ்மையான கோரிக்கை.

எம் தமிழினம் இலங்கைத் தீவில் பட்ட துன்பங்கள் அவலங்கள் கொஞ்சமல்ல.

இன்னமும் அந்தத் துயரமும் அவலமும் நீங்கியபாடில்லை. இந்நிலையில் நீங்கள் ஆளுங் கட்சியாக, எதிர்க் கட்சியாக, தமிழ்க் கட்சியாக எப்படியும் இருக்கலாம்.

ஆனால் உங்களின் இலக்கும் இலட்சியமும் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதாகவும் தமிழர் பிரதேசத்தில் அபிவிருத்தியை ஏற்படுத்துவதாகவும் இருக்க வேண்டும்.

இதற்கு மேலாக ஆளுங்கட்சியில் இருக்கின்றோம் என்பதற்காக தமிழர்களின் உரிமையைக் கதைப்பது தவறு என்றோ அல்லது தமிழர் பிரதேசத்தை ஆளுந்தரப்பு ஆக்கிரமிக்கும் போது அது கண்டு மௌனம் காப்பதையோ ஒருபோதும் செய்து விடாதீர்கள்.

எந்தச் சந்தர்ப்பத்திலும் தமிழினத்துக்காகக் குரல் கொடுங்கள். நாம் தமிழர்கள் என்ற அடிப்படையில் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தமிழ் இனத்துக்காக ஒன்றுபட்டு செயற்படுங்கள் இதுவே தங்கள் முன் நாம் முன்வைக்கும் கோரிக்கையாகும்.

# நாட்டின் அமைதியை நிலைநாட்டுவதற்காக புலனாய்வு செயற்பாடுகளில் 2500 பொலிஸார்

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

தேர்தல் முடிவுகள் வெளிவந்துள்ள நிலையில் நாட்டின் அமைதியை நிலைநாட்டுவதற்காக 2500 பொலிஸாரை புலனாய்வு செயற்பாடுகளில ஈடுபடுத்தியுள்ளதாக தெரிவித்த பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜாலிய சேனாரத்ன, தேர்தல் ஆணைக்குழு மற்றும் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தின் பாதுகாப்பிற்காக் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரை கடமையில் ஈடுபடுத்தியுள்ளதாகவும் கூறினார்.

பொலிஸ் தலைமையகத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறியதாவது.

வாக்கு எண்ணும் பணிகள் பாதுகாப்பான முறையில் இடம்பெற்று வருகின்றன. கோவிட்-19 வைரஸ் பரவல் காரணமாக இம்முறை தேர்தலை சுகாதார விதிமுறைகளுக்கமையவே மேற்கொள்ள வேண்டி ஏற்பட்டிருந்தது. இந்நிலையில் வாக்களிப்பு இடம்பெற்ற தினம் காலை முதல் நேற்று வியாழக்கிழமை வரை 350 தேர்தல் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

இதன்போது பொலிஸாரின் சோதனை நடவடிக்கைகளின் போது 175 சட்டமீறல் செயற்பாடுகளை பதிவு செய்துள்ளதுடன், பொதுமக்களால 175 முறைப்பாடுகள் பொலிஸ்நிலையங்களுக்கு அளிக்கப்பட்டுள்ளன. 116 முறைப்பாடுகள் தேர்தலுடன் தொடர்பு கொண்டுள்ள வேறுவகையான குற்றச் செயற்பாடுகளுடன தொடர்பு கொண்டுள்ளது.

இந்த வேறு வகையான முறைப்பாடுகளில், தாக்குதல், அச்சுறுத்தல் மற்றும் பாதிப்புகளை ஏற்படுத்தல் தொடர்பிலே 110 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதுடன் இதில் தாக்குதல் தொடர்பில் 49 முறைப்பாடுகளும், அச்சுறுத்தல் தொடர்பில் 44 முறைப்பாடுகளும் பாதிப்புகளை ஏற்படுத்தியமை தொடர்பில் 14 முறைப்பாடுகளும் கிடைக்கப் பெற்றுள்ளன.

இதன்போது எம்பிலிபிட்டி பகுதியிலேயே அதிகமான முறைப்பாடுகள பதிவாகியுள்ளதுடன், அவை 55 ஆக பதிவிடப்பட்டுள்ளன. இதேவேளை கந்தளாயில 39 முறைப்பாடுகள், அம்பாறையில் 25 முறைப்பாடுகளும் பதிவாகியுள்ளன. வேறு வகையான முறைப்பாடுகள அதிகளவில் அம்பாறை மாவட்டத்திலே பதிவாகியிருந்ததுடன், அவை 18 முறைப்பாடுகளாகும். அதற்கமைய இந்த செயற்பாடுகள் தொடர்பில் மட்டக்களப்பில் 15 முறைப்பாடுகளும், அநுராதபுரத்தில் 10 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன.

இந்நிலையில் 2015 ஆண்டு பாராளுமன்ற தேர்தலுடன்ஒப்பிடுகையில இம்முறை குறைவான முறைப்பாடுகளே கிடைக்கப்பெற்றுள்ளது. இதேவேளை வாக்கு எண்ணும் காலப்பகுதியில், நாட்டின் அமைதியை பாதுகாப்பதற்கும், வாக்கு எண்ணுமநிலையங்களின பாதுகாப்பிற்கும் பொலிஸ் நடமாடும் சேவை தொடர்ந்தும் கடமையில் ஈடுப்படுத்தப்பட்டுள்ளதுடன், இதில் 3069 பொலிஸார் கடமையில் ஈடுடுத்தப்படட்டுள்ளனர்.

இதேவேளை சோதனைச்சாவடிகள் 269 தொடர்ந்தும் பணிகளில் ஈடுபட்டுவருகின்றன. இதற்கு மேலதிகமான பொலிஸ் விசேடஅதிரடிப்படையின் 3140 அதிகாரிகள் வாக்கு எண்ணும் நிலையங்களின் பாதுகாப்பிற்கும், வீதிச்சோதனைச்சாவடிகளிலும், பொலிஸ் நிலையங்களிலும் கடமையில் ஈடுப்படுத்தப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் தேர்தலகள ஆணைக்குழுவின வேண்டுகோளுக்கு இணங்க பதில் பொலிஸ் மா அதிபரின் ஆலோசனையினபேரில் 2500 பொலிஸார் நாடளாவிய ரீதியில் புலனாய்வு செயற்பாட்டில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இதேவேளை தேர்தல் ஆணைக்குழு மற்றும் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தின் பாதுகாப்பிற்காக பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (ம-3)

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

உங்களை விட உயர்ந்தவர்களிடமும் உங்களுக்குச் சமமானவர்களிடமும் நேர்மையாக நடந்து கொள்ளுங்கள். ஆனால் அதைவிட முக்கியம் உங்களை விடக் கீழான நிலையில் இருப்பவர்களிடம் காட்டும் நேர்மைதான். - சோக்ரடீஸ்

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 8 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணிவரை

**யாழ்.பிரதேசத்தில்** புன்னாலைக்கட்டுவன், ஊரெழு, குரும்பசிட்டி, வாகையடி, ஈவினை, வசாவிளான், அச்செழு, மாசிவன், விக்கிரமரட்ண பிறைவேற் லிமிற்ரெட், திண்ணை Organic பண்ணை, சுன்னாகம் சிவன் கோவிலிலிருந்து கொத்தியாவத்தை இந்து மயானம் வரை, சுன்னாகம் மலப்பை, சூராவத்தை, ஏழாலை, குப்பிழான், கட்டுவன், சுன்னாகம் ஸ்ரீலங்கா ரெலிக்கொம், தாளையடி, வத்திராயன், உடுத்துறை ஆழியவளை, வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு, கேவில் முள்ளியான், முள்ளியான் இராணுவ முகாம், கட்டைக்காடு இராணுவ முகாம், தாளையடி ஐஸ் தொழிற்சாலை, வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம், மல்லாகம் சந்தியிலிருந்து அளவெட்டி வரை, மல்லாகம் நீதிமன்ற கட்டடத் தொகுதி, அளவெட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், Elephant Metal & Aluminium தொழிற்சாலை, சேந்தாங்குளம், இளவாலை, மெய்கண்டான் பாடசாலை ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## இந்து சமய தத்துவங்கள் ஐந்நூறு

இராமாயண காவியம் பெண்ணாசையினால் விளைந்தது. மகாபாரதம் மண்ணாசையினால் விளைந்தது. இராவணன் தன் மனைவியரை விடுத்து இராகவன் மனைவியை விரும்பிக் குலத்துடன் அழிந்தான். துரியோதனன் பாண்டவர்களின் அரசை விரும்பி 11 அட்சரோணி சேனைகளுடன் மாய்ந்தான். எனவே பெண்ணாசையை, மண்ணாசையை விட்டுவிடு என்று இராமாயணமும், மகாபாரதமும் நமக்கு அறிவுறுத்துகின்றன. (தொடரும்)

## அறிந்துகொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### செல்வச் செழிப்பை அள்ளித்தரும் பச்சைக் கற்பூரம்

2 பச்சை கற்பூரத் துண்டை ஒரு பேப்பரில் வைத்து மடித்து உங்களது பர்சில் வைத்திருந்தால் பர்சில் பணம் குறையாது எப்பொழுதும் இருக்கும். தொழில் விருத்தியடைய, செல்வம் பெருக பணம் புழங்கும் இடமான பணப்பெட்டி மற்றும் பீரோ போன்ற இடங்களில் இந்த பச்சை கற்பூரத்தை ஒரு டப்பாவில் போட்டு வைக்கலாம்.

வீட்டில் நடைபெறக்கூடிய எல்லா சுப நிகழ்ச்சிகளிலும் பச்சை கற்பூரத்தை இடம் பெற செய்வது நல்லது. பச்சை கற்பூரத்தை எடுத்து குலதெய்வத்தையும், இஷ்டதெய்வங்களையும் மனதார வணங்கி நமக்கு வேண்டியவற்றை நினைத்து பிரார்த்தனை செய்து அந்த பச்சை கற்பூரத்தை டப்பாவில் போட்டு வைத்துவிட வேண்டும்.

இப்படி செய்வதால் நம் வாழ்வில் நல்லதொரு மாற்றம் ஏற்படும். நம் வீட்டில் உள்ள துர்சக்திகள், கெட்ட சக்திகள், கண்திருஷ்டி, எதிர்மறை ஆற்றல் அனைத்தும் விலகி செல்வ செழிப்பான வாழ்க்கை அமையும். வாசனை மிகுந்த இடங்களில் மகாலட்சுமி குடிகொள்வாள். ஆதலால் பணம் புழங்கும் இடங்களில் வாசனை மிக்க பச்சை கற்பூரமானது இருந்தால் செல்வம் செழிக்கும். (முற்றும்)

# அணித் தலைவருக்கு அதிக முக்கியத்துவம் தேவையில்லை

## ரோகித் சர்மா

(மும்பை)

அணித் தலைவருக்கு அதிக முக்கியத்துவம் கூடாது என இந்திய கிரிக்கெட் அணியின் துணைத்தலைவர் ரோகித் சர்மா தெரிவித்துள்ளார்.

இந்தியக் கிரிக்கெட் அணியின் துணைத்தலைவரும், ஐ.பி.எல். கிரிக்கெட்டில் மும்பை இந்தியன்ஸ் அணியின் தலைவருமான ரோகித் சர்மா நேற்று முன்தினம் அளித்த ஒரு பேட்டியில் தெரிவித்ததாவது.

அணியின் தலைவராக இருக்கும் போது, நமக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கக்கூடாது என்பதில் நம்பிக்கை கொண்டவன் நான். நீண்ட திட்டமிடலை யோசித்து பார்த்தால் மற்ற வீரர்களின் பங்களிப்பே மிகவும் முக்கியம். இந்த விடயத்தில் ஒவ்வொரு அணித்தலைவரினதும் அணுகுமுறையும் வெவ்வேறு விதமாக இருக்கும். ஆனால் என்னை பொறுத்தவரை அணித்தலைவருக்கு குறைந்தபட்ச முக்கியத்துவம் என்ற கொள்கை கைகொடுக்கிறது.

கொரோனா பரவல் காரணமாக நீண்ட நாட்களாக கையில் பட் ஐ எடுக்கவில்லை. எனது கிரிக்கெட் வாழ்க்கையில் இவ்வளவு காலம் விளையாடாமல் முடங்கி இருப்பது இதுதான் முதல்முறையாகும். பயிற்சியை தொடங்கும் போது கொஞ்சம் சவாலாக இருக்கும். விளையாடாத வரை நான் எந்த நிலையில் இருக்கிறேன், உணர்வு எப்படி இருக்கும் என்பது தெரியாது. ஆனால் உடல்ரீதியாக மிகவும் வலுவாக உள்ளேன்.



ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டி நடக்கவுள்ள டுபாய் ஆடுகளங்கள் சற்று வேகம் குறைந்தவை. இந்திய ஆடுகளங்களுடன் ஒப்பிடும் போது பெரியளவில் வித்தியாசம் இருக்காது. ஆனால் சீதோஷ்ண நிலை கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தும். அங்கு 40° C யில் வெப்பநிலை காணப்படும். நாங்கள் எப்போதும் 40° C வெப்ப நிலையில் விளையாடிக் கொண்டிருப்பதில்லை. அதை சமாளிப்பது சவாலானது. ஆனால் நிலைமையை நேரில் பார்த்த பின்னர் சரியான வியூகங்களை வகுப்பது எளிதாகி விடும். போதுமான கால அவகாசம் இருப்பதால் அவசரப்படத் தேவையில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (4)

---

# உலகப் புகழ்பெற்ற கோல்காப்பாளர் இக்கர் காசிலாஸ் ஓய்வு

உலகப் புகழ்பெற்ற ஸ்பெயினின் கோல் காப்பாளர் இக்கர் காசிலாஸ், தான் ஓய்வு பெறப் போவதாக அறிவித்துள்ளார்.

39 வயதான இக்கர் காசிலாஸ் தலைமையில், 2010 ஆம் ஆண்டு ஸ்பெயின் அணி முதல் முறையாக உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றியது.

16 ஆண்டுகால கால்பந்து வாழ்க்கையில் மூன்று சம்பியன்ஸ் லீக் பட்டங்களையும், ஐந்து லா லிகா சம்பியன் பட்டங்களையும் வெல்வதற்கு முக்கிய காரணமாக திகழ்ந்துள்ளார்.

ஸ்பெயின் அணி 2008 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் ஐரோப்பிய சம்பியன்ஷிப் தொடர்களை வெல்லவும் உதவியுள்ளார்.

போர்த்துகீசிய தரப்பில், 156 போட்டிகளில் விளையாடியுள்ளார். இரண்டு பிரைமிரா லிகா சம்பியன் பட்டங்களையும் ஒரு போர்த்துகீசிய கிண்ணத்தையும் வென்றுள்ளார்.



2019ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் பயிற்சியின் போது மாரடைப்பு ஏற்பட்டதற்கு பின்னர், எவ்வித போட்டிகளிலும் விளையாடவில்லை. இந்த நிலையில் அவர் தனது ஓய்வு அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்.

ஸ்பெயின் அணிக்காக 2000ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரை 167 சர்வதேச போட்டிகளில் விளையாடியுள்ளார்.

இதேபோல, ஸ்பெயினின் முன்னணி கால்பந்து கழக அணியான ரியல் மட்ரிட் அணிக்காக 1999ஆம் ஆண்டிலிருந்து 2015ஆம் ஆண்டு வரை 510 போட்டிகளில் விளையாடியுள்ளார்.

2015 ஆம் ஆண்டு போர்டோ அணியில் இணைந்த இக்கர் காசிலாஸ், அந்த அணிக்காக 116 போட்டிகளில் விளையாடியுள்ளார்.

25 வருடகால கால்பந்து வரலாற்றில் 1,000க்கும் மேற்பட்ட போட்டிகளில் விளையாடியுள்ள இக்கர் காசிலாஸ்க்கு தற்போது இன்னாள் மற்றும் முன்னாள் வீரர்கள், பிரபலங்கள், ரசிகர்கள் எனப் பலரும் சமூகவலைத்தளங்களின் ஊடாக அவரின் புகைப்படங்களை பகிர்ந்து வாழ்த்து தெரிவித்து வருகின்றனர். (4)

---

# பாதுகாப்பான சூழலை விட்டு விலகினால் கடும் நடவடிக்கை

## ஐ.பி.எல்.வீரர்களுக்கு எச்சரிக்கை

பாதுகாப்பான சூழலை விட்டு யாராவது விலகினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஐ.பி.எல். வீரர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

13 ஆவது ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டி அடுத்த மாதம் 19 ஆம் திகதி ஐக்கிய அரபு அமீரகத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இந்தப் போட்டியில் பங்கேற்கும் வீரர்கள் மற்றும் உதவியாளர்கள் ஐக்கிய அரபு அமீரகம் சென்றதும் கொரோனா தடுப்பு நடவடிக்கையாக அனைவரும் மருத்துவ பாதுகாப்பு வளையத்திற்குள் கொண்டுவரப்படுவார்கள். இந்த பாதுகாப்பான சூழலை விட்டு யாராவது விலகினால் அவர்கள் மீது ஐ.பி.எல். நடத்தை விதிமுறைப்படி கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று கிரிக்கெட் வாரியத்தின் வழிகாட்டுதல் நெறிமுறையில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

8 அணிகளுக்கும் தனித்தனி விடுதிகள், எப்போதும் முகக் கவசம் அணிவது, சமூக இடைவெளியை பின்பற்றுவது உள்ளிட்ட கட்டுப்பாடுகளும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளன. (4)

---

# மென்பந்து சுற்றுத்தொடர் கிளி.தருமபுரம் அணி வெற்றி



முல்லைத்தீவு உடையார்கட்டு நண்பர்கள் விளையாட்டு கழகத்தால் கடந்த 3 ஆம் திகதி திங்கட்கிழமை நடத்தப்பட்ட மென்பந்து சுற்றுப்போட்டியில் கிளிநொச்சி தருமபுரம் அணி கிளிநொச்சி கிருஷ்ண பாரதி அணியை வீழ்த்தி வெற்றி பெற்றது.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற கிளிநொச்சி கிருஷ்ண பாரதி அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது. அந்த வகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய கிளிநொச்சி தருமபுரம் அணியினர் நிர்ணயிக்கப்பட்ட எட்டு ஓவர்கள் நிறைவில் 107 ஓட்டங்களை பெற்றது. அணி சார்பாக றொபட் 35 ஓட்டங்களையும் ஜதுசன் 28 ஓட்டங்களையும் துசன் 13 ஓட்டங்களையும் பெற்றனர்.

108 எனும் வெற்றி இலக்கைக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கிருஷ்ண பாரதி அணி 6.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்களையும் இழந்து 51 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. போட்டியில் தருமபுரம் அணியின் நிது, ஜதுசன், துஷ்யந்தன் ஆகியோர் மூன்று விக்கெட்டுக்கள் வீதமும் கீர்த்தி ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றினர். போட்டியில் ஆட்ட நாயகனாக தருமபுரம் அணியின் றொபட் மற்றும் தொடர் ஆட்ட நாயகனாக ஜதுசன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (4-316)

---

# தொடர்ந்தும் முதலிடத்தில் விராட்

ஒருநாள் போட்டி வீரர்களின் புதிய தரவரிசை பட்டியலில் இந்திய அணி தலைவர் விராட் கோலி தொடர்ந்து முதலிடம் பெற்றுள்ளார்.

ஒருநாள் போட்டி வீரர்களின் புதிய தரவரிசைப் பட்டியலை சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் நேற்று முன்தினம் வெளியிட்டது. இதன்படி பட்ஸ்மன்கள் தரவரிசையில் இந்திய அணித் தலைவர் விராட் கோலி தொடர்ந்து முன்னிலையிலும் துணைத் தலைவர் ரோகித் சர்மா இரண்டாமிடத்திலும், பாகிஸ்தான் வீரர் பாபர் அசாம் மூன்றாமிடத்திலும் உள்ளனர்.



பந்து வீச்சாளர்களின் தரவரிசையில் நியூசிலாந்து வீரர் டிரென்ட் பவுல்ட் முதலிடத்திலும், இந்திய வேகப்பந்து வீச்சாளர் ஜஸ்பிரித் பும்ரா இரண்டாமிடத்திலும் உள்ளனர்.

அயர்லாந்துக்கு எதிரான தொடரில் 5 விக்கெட்டுகள் வீழ்த்திய இங்கிலாந்து சுழற்பந்து வீச்சாளர் அடில் ரஷித் 4 இடங்கள் முன்னேறி 25 ஆவது இடத்தையும், 8 விக்கெட்டுகள் சாய்த்த வேகப்பந்து வீச்சாளர் டேவிட் வில்லி 6 இடங்கள் அதிகரித்து 51ஆவது இடத்தையும் பிடித்துள்ளனர். 'ஓல்ரவுண்டர்கள்' தரவரிசையில் ஆப்கானிஸ்தான் வீரர் முகமது நபி முதலிடத்திலும் இந்தியாவின் ரவீந்திர ஜடேஜா 8 ஆவது இடத்திலும் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (4)

# மகிந்தவின் பொதுஜன பெரமுன தென்னிலங்கையில் அபார வெற்றி

(கொழும்பு)

இலங்கையின் ஒன்பதாவது பாராளு மன்றத்தின் உறுப்பினர் களை தேர்வு செய்வதற்காக கடந்த புதன்கிழமை நடை பெற்ற பொதுத் தேர்தலில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ வின் ஸ்ரீ லங்கா பொதுஜன பெர முன கட்சி தென்னிலங் கையில் பெரும் பான்மை யான இடங்களை கைப் பற்றி அபார வெற்றி பெற் றுள்ளது.

நேற்றுக் காலையில் தேர்தலில் பதிவான வாக்குகளின் எண்ணி க்கை தொடங்கியது முதலே ஸ்ரீ லங்கா பொது ஜன பெரமுன முன்னிலை வகித்து வருகிறது.

பற்பகலிலும் இதே நிலை நிலவியது.

நேற்றிரவு 10 மணி வரையிலான தேர்தல் முடிவுகளின் நிலைவரப்படி, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன 41 இலட்சத்து 5 ஆயிரத்து 602 வாக்குகளை பெற்று முன்னிலை வகிக்கிறது.

ஐக்கிய மக்கள் சக்தி 16 லட்சத்து 68 ஆயிரத்து 467 வாக்குகளை பெற்று இரண்டாவது இடத் திலும் தேசிய மக்கள் சக்தி 2 லட்சத்து 76 ஆயிரத்து 328 வாக்குகளை பெற்று மூன்றா வது இடத்திலும் உள்ளன.

அத்துடன், இலங்கைத் தமிழரசுக் கட்சி 2 இலட்சத்து 43 ஆயிரத்து 267 வாக்கு களை பெற்று நான்காவது இடத்திலும் உள்ளதாக தேர் தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள் ளது.

ஐக்கிய தேசிய கட்சி ஒரு இலட்சத்து 44 ஆயிரத்து 489 வாக்குகளை இதுவரை பெற்று மிகப்பெரிய பின்னடைவை சந்தித் துள்ளது குறிப்பிடத்தக்கது. (ம-3)

## சசிகலா ரவி...

தில் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ளதாக தகவல்கள் வெளி யாகியுள்ளன.

இந்நிலையில் அவரது கட்சி உறுப்பினர் களாலேயே அச்சுறுத்தல் விடுக்கப்பட்ட தாக தகவல் வெளியாகியுள்ளது.

இதனையடுத்து சசிகலா ரவிராஜுக்கான பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## தென்னையிலிரு...

பாயை சேர்ந்த முத்தையா வடிவேல் (வயது-74) என்பவரே உயிரிழந்துள் ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை 7.00 மணியளவில் கோப்பாயில் இடம் பெற்றது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவ தாவது,

யாழ்ப்பாணம் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரிக்கு அண்மையில் உள்ள வீடு ஒன்றில் நேற்றுக் காலை கள்ளு சீவுவதற் காக தென்னை மரத்தில் ஏறியுள்ளார். இதன்போது எதிர்பாராத விதமாக தவறி வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவரின் சடலம் வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

இது குறித்து கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வரு கின்றனர். (ம-3)

## யாழ்ப்பாணத்தில்...

கள் ஏராளமாகக் காணப்பட்டதாகக் கூறப் படுகின்றது.

கட்சியின் சின்னத்தைத் தெரிவு செய்த வாக்காளர்கள் விருப்பத் தெரிவுகளுக்கு பதிலாக சுயேட்சைக்குழுக்களின் 01, 02, 03 என்ற தெரிவுகளை மேற்கொண்டி ருப்பதனால் வாக்குகள் செல்லுபடியற்ற வையாக மாறியிருப்பதாக தெரிவிக்கப்பட் டுள்ளது. (ம-3)

## யாழ்.மாவட்ட...

கடந்த 5ஆம் திகதி நடைபெற்ற பாராளு மன்றத் தேர்தலின் வாக்குகள் எண்ணும் நடவடிக்கை நேற்றுக்காலை ஆரம்பமாகி யது.

இதன்படி வெளியாகிய முடிவு களின்படி யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் கூட்ட மைப்பின் சார்பில் போட்டியிட்ட சிறீதரன், சித்தார்த்தன், சுமந்திரன் ஆகியோரும் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் சார் பில் கஜேந்திரகுமார் பொன்னம் பலமும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் சார்பில் டக்ளஸ் தேவானந்தாவும் தமிழ் மக்கள் தேசிய கூட்டணி சார்பில் நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரனும் ஸ்ரீலங்கா சுதந் திரக் கட்சி சார்பில் அங்கஜன் இராமநாதனும் பாராளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ள னர்.

இதேவேளை யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் கூட்டமைப்பு 3 ஆசனத்தை யும் வன்னி தேர்தல் தொகுதியில் 3 ஆச னத்தையும் மட்டக்களப்பில் 2 ஆசனத் தையும் திருமலையில் ஒரு ஆசனத்தை யும் கைப்பற்றியது. அம்பாறையில் எவ்வித ஆசனத்தையும் கைப்பற்றவில்லை. (ம-3)

# தமிழ் அரசுக் கட்சி தலைவர் மாவை தோல்வி

(யாழ்ப்பாணம்)

இலங்கை தமிழ் அரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா யாழ் மாவட் டத்தில் தோல்வியடைந் தார்.

இதேவேளை கட்சி யின் செயலாளர் கி.துரை ராசசிங்கம் மட்டக்களப்பில் தோல்வி யடைந்தார்.

யாழ் மாவட்ட இறுதி முடிவுகள் இன்னும் அறிவிக்கப்படாத போதி லும், மாவை சேனாதிராசா முன் வரிசை போட்டியாளர் களிற்குள் இல்லையென்பது உறுதியாகியுள் ளது. (ம-3)



## பிரதான எதிர்க்கட்சியாக

# செயற்படப் போவதாக சஜித் அணியினர் அறிவிப்பு

(கொழும்பு)

பொதுத் தேர்தலில் ஏற்பட்ட தோல் வியை ஏற்றுக்கொள்வதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

தமது கட்சி புதிய கட்சி என்ற வகையில் தேர்தல் முடிவுகள் தமக்கு மகிழ்ச்சியை தருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிரதான எதிர்க் கட்சியாக தமது பொறுப் பினை உரிய வகையில் முன்னெடுப் போம் என்றும் அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அவர் குறிப் பிட்டார்.

பொதுத் தேர்தலுக்கான முடிவுகள் தற்போது வெளியாகிக் கொண்டிருக்கிறது. தேர்தல் முடிவுகளின்படி ஸ்ரீ லங்கா பொது ஜன பெரமுன கட்சி அமோக வெற்றி பெற் றுள்ளது.

அரச ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியின் போது அவர் இந்தத் தகவல் களை வெளியிட்டார்.

இந்நிலையில் இறுதித் தேர்தல் முடிவு கள் வெளியாக முன்னரே ஐக்கிய மக்கள் சக்தி தமது தோல்வியை ஏற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

# ஐ.தே.க தலைவர் பதவியை இராஜினாமா செய்தார் ரணில்?

## அரசியலிருந்து ஓய்வுபெறப் போவதாகவும் தெரிவிப்பு

(கொழும்பு)

முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரம சிங்க ஐக்கிய தேசியக் கட்சி தலைவர் பதவியை இராஜினாமா செய்வதாக அறி வித்துள் ளார்.

மேலும் தான் அரசியலிருந்து ஓய்வு பெறப் போவதாகவும் அவர் தெரிவித் துள்ளார்.

நடைபெற்று முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி பாரிய தோல்வியைச் சந்தித்த நிலையில் ரணில் தனது பதவியை இராஜினாமாச் செய்ய வுள்ளதாகத் தெரிவித்துள்ளார். (ம-3)

# வன்னியில் கூட்டமைப்புக்கு இரண்டு ஆசனங்கள்

## பொதுஜன பெரமுனவுக்கு இரு ஆசனங்கள்

(யாழ்ப்பாணம்)

நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்த லில் வன்னி தேர்தல் தொகுதியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளது.

மேலும் பொதுஜன பெரமுன இரு ஆச னங்களைப் பெற்றுள்ளது. நேற்று நள் ளிரவுவரை உத்தியோகபூர்வமாக தேர்தல் திணைக்களத்தால் இவ் முடிவுகள் வெளி யிடப்பட்டன. (ம-3)

## திருநெல்வேலியில்

# தீ விபத்து

## வயோதிபப் பெண் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் திருநெல் வேலியில் வீடொன்றில் திடீ ரென ஏற்பட்ட தீ விபத்தில் 67 வய தான வயோதிபப் பெண்ணொருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

குறித்த சம்பவம் நேற்று வியாழக் கிழமை அதிகாலை நடந்துள்ளது.

வீடு தீப்பற்றி எரிந்தபோது குறித்த வயோதிபப் பெண் உறக்கத்திலிருந்துள்ள நிலையில் தீ அவரது உடலிலும் பரவி உயிரிழப்பு ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, குறித்த தீ பரவலுக்கான காரணம் விபத்தா? அல்லது திட்டமிட்ட நடவடிக்கையா? என்பது தொடர்பாக கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-3,18)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

மெகா பவர்
திகதி 06/08/2020
சீட்டிழுப்பு இலக்கம் 573
வெற்றி எழுத்து I சுப்பர் இலக்க 04 வெற்றி இலக்கங்கள் 02 12 46 66

மஹஜன சம்பத
திகதி 2020/08/06
சீட்டிழுப்பு இலக்கம் 4206
ஆங்கில எழுத்து R வெல்லப்பட்ட இலக்கங்கள் 0 3 6 3 3 2
தேசிய லொத்தர் சபை

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள் NLB
சீட்டிழுப்பு திகதி 06-08-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2501
ஆங்கில எழுத்து B வெற்றி இலக்கங்கள் 05 55 71 74
தேசிய லொத்தர் சபை

விரைவு பொதிகள் சேவை

DHL

வெளிநாடுகளுக்கான விரைவு பொதிகள் சேவை 3 -5 நாட்களுக்குள் வழங்கப்படுகின்றன

Lanka Cargo Worldwide Express

315, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

021 221 1995
076 283 2397

(3481)



பதவி வெற்றிடம்

பின்வரும் பதவிகளுக்கு வெற்றிடம் உள்ளது

- **உதவி ஆசிரியர்கள்** (இருபாலாரும்) தகைமை : உயர்தரம் கற்றிருத்தல்.
- **அலுவலகச் செய்தியாளர்கள்** (ஆண்கள்) (உள்ளகம், வெளியகம்) தகைமை : உயர்தரம் கற்றிருத்தல்.
- **பக்க வடிவமைப்பாளர்கள்** (தமிழ் ரைப்பிங், விளம்பர வடிவமைப்பு உட்பட) தகைமை : க.பொ.த ( சாதாரண தரம்)
- **ஒப்பு நோக்குநர்** (இருபாலாரும்) தகைமை : உயர்தரம் கற்றிருத்தல்.

தகைமையும், விருப்பமும் உடையவர்கள் சுயமாகத் தயாரித்த விண்ணப்பத்தை தபால் மூலமாகவோ அன்றி நேரிலோ ஒப்படைக்கவும்.

குறிப்பு : யாழ். நகரை அண்மித்திருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

முகவரி :- பொது முகாமையாளர், வலம்புரி, இல. 3, 2ம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.


## பொதுஜன பெரமுன முன்னிலை

# தொலைபேசியில் மகிந்தவுக்கு வாழ்த்து தெரிவித்த மோடி



(கொழும்பு)

இதுவரை வெளியான பொதுத்தேர்தல் முடிவுகளின்படி ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன முன்னிலை வகிக்கும் நிலையில் பிரதமர் மகிந்த ராஜபக்சவிற்கு இந்திய பிரதமர் நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

தொலைபேசி அழைப்பின் ஊடாக வாழ்த்துக்களை தெரிவித்ததாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தனது டுவிட்டர் பதிவில் கருத்து பதிவிட்டுள்ளார்.

மேலும் இலங்கை மக்களின் வலுவான ஆதரவோடு, இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால ஒத்துழைப்பை மேலும் மேம்படுத்த இந்தியாவுடன் நெருக்கமாக பணியாற்ற தான் தயாராக இருப்பதாகவும் மகிந்த ராஜபக்ஷ அதில் குறிப்பிட்டுள்ளார். (ம-3)


2D-Drawing 3D-Modeling Civil & Mech

Auto CAD

LINK:077 5116320 - 071 8617972

(C-9998)


# நாட்டில் எந்தப் பகுதியையும் முடக்கும் தேவை இல்லை

## சுகாதாரப் பணிப்பாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

கோவிட் 19 தொற்று பரவல் கட்டுப்படுத்தப்பட்டு நாடு சுகாதார ரீதியில் பாதுகாப்பான நிலையில் இருக்கும் இந்த வேளையில் நாட்டின் எந்த பகுதியையும் முடக்கும் தேவை இல்லை என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க தெரிவித்தார்.

நேற்று (06) கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பொதுத் தேர்தல் சுகாதார முறைகளுக்கு அமைய நாடளாவிய ரீதியில் இடம்பெற்றமை குறித்து பணிப்பாளர் நாயகம் அனில் ஜாசிங்க நன்றி தெரிவித்தார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய மற்றும் தேர்தல்கள் ஆணைக்குழு பொதுமக்களுக்கு சுகாதார முறையின்படி வாக்களிப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு சுகாதார துறையினருடன் இணைந்து மேற்கொண்ட பாரிய நடவடிக்கைகளுக்கும் நன்றி தெரிவிப்பதாக ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டார்.

இந்த நடவடிக்கைகளுக்கு பிரதமர், ஜனாதிபதி, சுகாதார அமைச்சர் வழங்கிய வழிகாட்டல்களும் ஒத்துழைப்பையும் அவர் சுட்டிக்காட்டினார். இதற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்ட சகல சுகாதார துறையினருக்கும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அனில் ஜாசிங்க தமது நன்றியைத் தெரிவித்தார். (ம-3)


விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS

வழமைபோல வெளிநாடுகளுக்கு பொதிகளை எமக்கூடாக அனுப்பிவைக்க முடியும்

எமது நேரடிக்கிளைகள்

● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● கொடிகாமம் ● திருகோணமலை ● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● மானிப்பாய் ● மருதங்கேணி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

(C-9624)

0768226240



முக்கிய அறிவித்தல்

இணுவில் மக்லோட் வைத்தியசாலை

கருவள சிகிச்சை (IVF) முற்று முழுதாக நீங்கள் எமது வைத்தியசாலையில் பெற்றுக்கொள்ளலாம்.

நீங்கள் பெறக்கூடிய நன்மைகள்

- அதிகூடிய கருத்தங்கல் வீதம் எங்கள் வைத்தியசாலையில்
- சிறந்த அனுபவம் வாய்ந்த Embryologist.
- மிகக்குறைந்த மொத்தச் செலவு.
- இயற்கையான சூழலில் சிறந்த அனுபவம் மிக்க VOG இன் நேரடிக் கண்காணிப்பில் சிகிச்சை மேற்கொள்ளப்படும்.
- முழுமையான சிகிச்சை யாழ். நகரிலேயே மேற்கொள்ளப்படுவதனால் போக்குவரத்துச் சிரமம் இல்லை.

இன்று (07.08.2020) காலை 8.00 மணி Dr.H.ரத்தினாயக்கா வருகை தருகின்றார்.

முற்பதிவுகளுக்கு

021 224 1569, 021 224 3648, 076 394 4346

(C-9996)



TECHNO WORLD

தொழில்நுட்ப கல்லூரி

வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை.

தொழில்நுட்ப பிரிவு – A/L

◉ உயிர்முறைமைகள் தொழில்நுட்பம்
◉ பொறியியல் தொழில்நுட்பம்

2022 DAY CLASS

சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு

ஆரம்பம் 08.08.2020

077 017 5346

(C-9999)



அன்னா விரைவுப் பொதிகள் சேவை

5 kg / 11kg க்கு மேல் 1 கிலோவுக்கான கட்டணம்

பிரான்ஸ் -ரூ.1500/ரூ.1300
ஜேர்மனி -ரூ.1500/ரூ.1300
டென்மார்க -ரூ.1500/ரூ.1300
கொலன்ட் -ரூ.1500/ரூ.1300
பெல்ஜியம்-ரூ.1600/ரூ.1300
இத்தாலி - ரூ.1700/ரூ.1450
லண்டன் - ரூ.1500/ரூ.1150

இச் சேவையில் மேலதிகமாக எவ்வித கட்டணங்களும் வெளிநாட்டில் அறவிடப்படமாட்டாது.

5 - 8 வேலை நாட்கள்

எம்முடன் இணைந்து பொதிகள்சேவை தொடங்குவதாயின் தொடர்புகொள்ளவும்

லண்டன்-1000/= ,பிரான்ஸ்-ஜேர்மனி-டென்மார்க்-1200/= கனடா- 1500/=
சுவிஸ்- 1400/= அவுஸ்ரேலியா- 1600/= / 1000/= (வரி உள்ளடக்கப்படவில்லை)

976,KKS வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம் | நெல்லியடி சங்கானை | கிளிநொச்சி முல்லைத்தீவு | 075 5522999 076 1221566 | பளை மன்னார் கொழும்பு 12

(C-9992)



மீண்டும்

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

அசாதாரண சூழ்நிலை காரணமாக முடங்கியிருந்த எமது சேவை மீண்டும் வழமைபோல் அனைத்து நாடுகளுக்கும் 100% பாதுகாப்புடன் நடைபெறுகின்றது.

(C-9976)

அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்

இல.01, பிறவுண் வீதி, நாவலர் வீதிச் சந்தி, யாழ்ப்பாணம்

தொ.பே:- 021 222 6113

அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்

இல.10, புதிய மாநகர சபை கட்டிடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

தொ.பே:- 021 222 3536



வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603, 021 567 1532


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.08.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.